YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
Regested No. QD/130/News/2011
ஓசை : 01 நாதம் : 34 வெள்ளிக்கிழமை 24.06.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# ஒலிபெருக்கி மூலமாகவும் அறிவித்து குடாநாட்டில் வீடுவீடாகப் பதிவு

## மக்கள் மத்தியில் குழப்பமும் அச்சமுமான சூழ்நிலை


இந்தியாவின் அசாம் மாநிலம் குவாந்தியில் அரச காணிகளில் குடியிருப்போரை அகற்றும் நடவடிக்கையையடுத்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக் காரருக்கும் இடையேயான மோதலில் பெண் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிளை கட்டையால் தாக்குவதைக் காணலாம்.

வண்ணார்பண்ணை,

யாழ். குடாநாட்டில் இராணுவப் பதிவுகள் அனைத்தும் நிறுத்தப்படுமென யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி அறிவித்துள்ள போதும் எதுவித தடைகளோ மாற்றங்களோ இன்றி இராணுவப் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

இந்த இராணுவப் பதிவுகளை மேற்கொள்வதற்கு சுமார் 5, 6 வரையிலான இராணுவத்தினர் வீடுகளுக்குச் சென்று குடும்பத்திலுள்ளவர்களின் சுயவிபரங்களைப் (6ஆம் பக்கம் பார்க்க)

## கிருஷ்ணன் கோவில் கும்பாபிஷேகத்தில் 6 தாலிக்கொடிகள், தங்க நகைகள் திருட்டு

வட்டுக்கோட்டை நிருபர்,

பொன்னாலை - ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது பக்தர்கள் அணிந்திருந்த இருபது பவுணுக்கும் மேற்பட்ட தங்க நகைகள் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

வரலாற்றுப் புகழ்பெற்ற விஷ்ணு ஆலயத்தில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அதிகாலையிலேயே பெருமளவு அடியார்கள் திரளத்தொடங்கி விட்டனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் 'பழமுதிர்ச்சோலை' பதப்படுத்தல் நிலையம் திறப்பு

வண்ணார்பண்ணை,

குடாநாட்டில் பழங்களின் உற்பத்தியையும் தரத்தையும் மற்றும் நுகர்வையும் அதிகரிக்கும் நோக்குடன் 'பழமுதிர்ச் சோலை' என்ற பெயரில் பழங்கள் சேகரித்தல், பதப்படுத்தல் மற்றும் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார் தெரிவித்தார்.

கண்டி வீதி - மீசாலையில் இந்நிலையம் ஆரம்பித்து (6ஆம் பக்கம் பார்க்க)


## யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் நீர் வழங்கல் வேலைத்திட்டத்தை முன்னேற்ற பிரான்ஸ் உதவி

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நீர்வழங்கல் வேலைத் திட்டங்களை முன்னேற்றவும் சுகாதார செயற்பாடுகளை முன்னெடுக்கவும் பிரான்ஸ் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இத் திட்டங்களுக்காக பிரான்ஸ் 35 மில்லியன் யூரோக்களையும் ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்கவுள்ளது. இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று பதில் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## "எந்த சிக்கலும் இல்லை"

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான (6ஆம் பக்கம் பார்க்க)


ஜெயசந்திரன்ஸ் பட்டாடைகளால் உங்கள் திருமண விழாவை அலங்கரித்திடுங்கள்
JEYECHANDRANS
The Art of Fashion
No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com


# சரியானதோர் முடிவெடுப்பதில் பான் கீ மூன் தவறிழைத்து விட்டார்

## மனித உரிமைகள் அமைப்பின் இயக்குநர்

இலங்கையைப் பொறுத்தவரை ஐ.நா தலைமைச் செயலர் பான் கீ மூன் ஒரு உறுதியற்ற நிலைப்பாட்டையே கடைப்பிடித்தார் என்று மனித உரிமைகள் அமைப்பான 'ஹியூமன் ரைட்ஸ் வாட்ச்' அமைப்பின் ஆசிய இயக்குனரான பிராட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் தலைமைச் செயலராக பான் கீ மூன் இரண்டாவது பதவிக்காலத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் இலங்கை உட்பட பல நாடுகளில் மனித உரிமை மீறல்களை தடுக்கத் தவறிவிட்டார் என்று பல மனித உரிமை அமைப்புக்கள் கருத்து வெளியிட்டிருந்தன. இது குறித்துக் கருத்துக் கூறுகையிலேயே பிராட் அடம்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பான் கீ மூனின் செயற்பாடு ஒரு கலவையான விஷயம், என்று கூறிய பிராட் அடம்ஸ், '' பர்மா விஷயத்தில் அவர் நிறைய அறிக்கைகளை விட்டார். ஆனால் பர்மிய அரசுக்கு எதிராக செயற்படுவதில் அவர் மிகவும் பலவீனமாக இருந்தார். அவருக்கு ஒரு கோர்வையான திட்டம், யுக்தி இல்லை. சீனாவைப் பொறுத்த வரை கடந்த இரு தசாப்த காலத்தில் நடந்த மிகவும் மோசமான ஒடுக்குமுறையின் போது அவர் அமைதி காத்தார்'' என்று கூறியுள்ளார்.

இலங்கை நிலைமை குறித்தும் அவர் பேசுகையில்,

''இலங்கையைப் பொறுத்தவரை அவர் மிகவும் உறுதியற்ற நிலைப்பாட்டையே கடைப்பிடித்தார். போர் முடிந்த பின், இலங்கைக்கு சென்று, மஹிந்த ராஜபக்ஷவுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளப்படுவதை அனுமதிக்க வேண்டாம் என்று நாங்களும் மற்றவர்களும் தந்த நல்ல அறிவுரையை மீறி, அங்கே சென்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது அரசுக்கு நம்பகத்தன்மையைப் பெற அந்த விஜயத்தைப் பயன்படுத்திக் கொண்டார்'' என்றார் பிராட் அடம்ஸ்.

இலங்கையில் போர் தொடர்பான பிரச்சினைகள் பற்றி உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு பொறுப்பு சுமத்தும் வழிமுறை உருவாக்கப்படும் என்று மஹிந்த ராஜபக்ஷ கொடுத்த உறுதிமொழிகளை ஏற்றுக் கொண்டதன் மூலம் ஒரு சரியான முடிவெடுப்பதில் பான் கீ மூன் தவறிழைத்துவிட்டார் என்றும் பிராட் அடம்ஸ் கூறினார்.

## வவுனியாவில் இடம்பெற்ற மரணம் தொடர்பில் சந்தேகம்

ஓமந்தை,

வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற முச்சக்கர வண்டி சாரதியின் மரணம் தொடர்பாக சந்தேகம் நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முந்தினம் இரவு 8 மணியளவில் முச்சக்கரவண்டிக்கருகில் காணப்பட்ட கூமாங்குளம் பகுதியை சேர்ந்த இராஜரட்ணம் விக்டர் என்ற 31 வயதுடையவரது சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டபோது அவர் இறந்திருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனை அடுத்து சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மரணம் தொடர்பாக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சத்திய சாயி பாபாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து சந்தேகம் எழுப்பும் உறவினர்கள்

## ஊழல் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கும் கோரிக்கை

நகரி:

சாயிபாபா அறக்கட்டளை ஊழல் பற்றி சி.பி.ஐ. விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று சாயிபாபாவின் உறவினர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுபற்றி சத்திய சாயிபாபாவின் சகோதரி வெங்கம்மாவின் மகன் சங்கர் ராஜு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

சத்திய சாயி மத்திய அறக்கட்டளையில் நடந்துள்ள ஊழல் விவகாரங்கள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். ஊழலில் ஈடுபட்டவர்கள்



எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும். கொடிகொண்டா சோதனைச்சாவடியின் அருகே நடந்த பொலிஸ் சோதனையின் போது காரில் சிக்கிய பணம் அறக்கட்டளையின் பணம்தான் என உறுதி செய்யப்பட்டு இருப்பதால், அறக்கட்டளையின் மீது பக்தர்களைப் போலவே சாயிபாபாவின் உறவினர்களான எங்களுக்கும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சாயிபாபா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது பற்றி எங்களுக்கு மிகவும் தாமதமாகத்தான் தகவல் தெரிவித்தனர். 10 நாட்கள் வரை அவரை பார்க்க எங்களை அனுமதிக்கவில்லை.

சாயிபாபாவுக்கு சிகிச்சை அளித்த வைத்தியர் சபயா, சாயிபாபாவின் உடல் நிலை சீராக இருப்பதாக கூறிய நிலையில், பாபாவின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவ அறிக்கைகளை வெளியிட்டு குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். பாபாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து எங்கள் குடும்பத்தினருக்கும் பக்தர்களுக்கும் பெருத்த சந்தேகம் உள்ளது. எனவே அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றிய விவரங்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.

பாபா வசித்த யஜுர் வேத மந்திரத்தில் அவர் எழுதி வைத்த உயில் கட்டாயம் கிடைத்திருக்கும். இவ்வளவு பெரிய அறக்கட்டளையை நிர்வகித்து வந்த பாபா, தனக்கு பிறகு அதை யார் நிர்வகிக்க வேண்டும் என்பது பற்றி உயில் எழுதி வைத்து இருப்பார். ஆனால் உயில் எதுவும் இல்லை என்று கூறுவதை நம்ப நாங்கள் தயாராக இல்லை. அது குறித்தும் விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

### அரசு தலையிட வேண்டும்

சாயிபாபாவின் மற்றொரு சகோதரி பார்வதியம்மாவின் பேரன் சிரவண் கூறியதாவது,

சத்திய சாயி அறக்கட்டளையில் ஊழல் நடந்தால் அறக்கட்டளைக்கு தான் கெட்ட பெயரே தவிர பாபாவுக்கு அல்ல. பக்தர்கள் பாபாவை பார்த்துதான் நன்கொடை கொடுத்தார்களே தவிர, அறக்கட்டளை உறுப்பினர்களை பார்த்து அல்ல. பாபா ஏதோ அறக்கட்டளைக்கு மட்டும் தான் சொந்தம் என்பது போல் நடந்துகொண்டார்கள்.

பாபா உடல் நலமின்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவரை பார்க்க எங்களை அனுமதிக்கவில்லை. அவர் வசிப்பிடத்தை திறந்து பார்த்த போதும் உள்ளே செல்ல எங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பாபாவுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சேவை பற்றிய அறிக்கையை பகிரங்கமாக வெளியிட வேண்டும். இந்த பிரச்சினையில் அரசாங்கம் தலையிட்டு எல்லாவற்றையும் விசாரித்து பக்தர்களின் சந்தேகங்களை போக்க வேண்டும் என்றார்.

### வெளிநாட்டு பக்தர்

இதனிடையே பிரசாந்தி நிலையத்தில் தங்கி இருக்கும் வெளிநாட்டு பக்தர் ஐசக் டிரிகேட் என்பவர் கூறுகையில், சாயிபாபா உயில் எழுதி வைத்து இருப்பதாகவும், அதுபற்றி அவர் தன்னிடம் கூறி இருப்பதாகவும், அந்த உயிலை இன்னும் 6 வாரங்களில் வெளியிடப் போவதாகவும் தெரிவித்தார். அறக்கட்டளையின் செயற்பாடுகள் சரி இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கருணாநிதியையும் சோதனை செய்த சிறை அதிகாரிகள்



மகள் கனிமொழியைக் காண திஹார் சிறைக்குச் சென்ற தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியிடம் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

மேலும் கனிமொழியைக்காணவந்த கருணாநிதிக்கு, சிறை விதிமுறைகளை மீறி அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் சிக்கி திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் கனிமொழி. அவர் சிறைக்குள் வந்து ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. இதுவரை அவரை இரண்டு முறை சிறைக்குச் சென்று பார்த்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இந்த இரண்டு முறையும் கருணாநிதிக்கு சிறைக்கு வந்தபோது சிறைக் காவலர்கள் கருணாநிதியை சிறை விதிமுறைப்படி மேலோட்டமாக சோதனையிட்டுள்ளனர்.

அதேபோல இரண்டு முறையும் பார்வையாளர் நேரத்தைக் கடந்த பின்னரும் கருணாநிதி, கனிமொழியை சந்திக்க அனுமதித்துள்ளனர்.

இதுகுறித்து கனிமொழி அடைக்கப்பட்டுள்ள திஹார் சிறையின் 6ஆவது எண் சிறையின் கண்காணிப்பாளர் தெரிவிக்கையில்,

''முன்னாள் முதல்வர் கருணாநிதி மே 23 ஆம் திகதி கனிமொழியைப் பார்க்க மாலை 5.46 மணிக்கு வந்தார்.

வழக்கமாக சிறை விதிகளின்படி காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மட்டுமே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர். வழக்கறிஞர்கள், தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு மட்டும் பிற்பகல் 3.30 மணி முதல் 5.30 மணி வரை பார்க்க அனுமதி தரப்படும்.

அதேபோல சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இருப்பினும் கருணாநிதிக்கு மட்டும் சிறை விதிகளை தளர்த்தி மாலை 5. 30 மணிக்கு மேல் பார்க்க அனுமதிக்கப்பட்டது என்றார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளவுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

கிளிநொச்சி, கைதடி,


பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கட்டுமானங்களை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதியின் கீழ் செய்யப்படவுள்ள கட்டுமானங்களுக்குரிய கேள்விப்பத்திரங்களை ஜூலை மாதம் 18 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இராமநாதபுரம் கமநல சேவை நிலையப் புனர் நிர்மாணம், கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் 3,125 சதுர அடி வகுப்பறை கட்டட புனர்நிர்மாணம், மாயவனூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான வித்தியாலயத்திலும் 3,125 சதுர அடி வகுப்பறைக் கட்டடப் புனர்நிர்மாணம், அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டட புனர்நிர்மாணம், சாந்தபுரம் பொது நோக்கு மண்டபப் புனர்நிர்மாணம் என்பன நடைபெறவுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் 800 சதுர அடி அளவுள்ள ஆசிரியர் விடுதி புனரமைக்கப்படவுள்ளது. பூநகரி பிரதேச செயலகப் பயிற்சிநிலையம் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே பல பொதுக் கட்டடங்களின் புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.




# உரிய அனுமதி கிடைக்காமையால் இரு கதவு பஸ்வண்டிகள் முடக்கம்

வடமராட்சி,

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சேவையில் ஈடுபடுவதற்கென இரு கதவுகளைக் கொண்ட மூன்று பெரிய பஸ் வண்டிகள் தயாராக இருக்கின்ற போதிலும் உரியவர்களின் அனுமதி கிடைக்காமையால் அப் பஸ் வண்டிகள் முடங்கியுள்ளன.

ஏ.பி. தரத்தைக் கொண்ட பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சேவையிலீடுபடுத்துவதற்கென வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் மூன்று அங்கத்தவர்கள் இரு கதவுகளைக் கொண்ட பெரிய பஸ் வண்டிகளைக் கொள்வனவு செய்து சேவைக்குத் தயார் நிலையில் வைத்திருக்கின்றனர்.

இந்நிலையில், இரு கதவுகளைக் கொண்ட பெரிய பஸ் வண்டிகளை இப் பாதையில் சேவையிலீடுபடுத்த யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அனுமதியை மறுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வசதியீனங்களுடன் இயங்கிவரும் தர்மபுரம், வட்டக்கச்சி பொதுச்சந்தைகள்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி தர்மபுரம் மற்றும் வட்டக்கச்சி பொதுச் சந்தைகள் மிகவும் வசதியீனங்களுடன் எவ்வித அபிவிருத்தியும் இன்றி செயற்படுவதாக இப்பகுதி பொது மக்களாலும் பொது அமைப்புக்களாலும் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த யுத்தத்தின்போது பெரிதும் சேதமான இவ்விரு சந்தைகளுக்கும் நிரந்தரமான கட்டட வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் பொதுச் சந்தைக்கான வசதிகள் அதிகரிக்கப்படவேண்டுமெனவும் வேண்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, கல்லாறு கிராமத்தில் மீளக்குடியேறியுள்ள கடற்றொழிலாளர் குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் வாழ்வாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படாத நிலையிலும் உள்ளதுடன் குடிநீரைப் பெறுவதிலும் அதிக சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

# பரந்தன் சிவபுரத்தில் மீள்குடியேறிய மக்கள் எதுவித வசதிகளுமற்ற நிலையில்

(கிளிநொச்சி நிருபர்)

பரந்தன் - சிவபுரம் கிராமத்தில் மீளக்குடியேறிய மக்கள் எவ்வித வசதிகளற்ற முறையிலும் வாழ்வாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படாத நிலையிலும் மிகுந்த கஷ்ட சூழ்நிலையில் வாழ்வதாக இப்பகுதி மக்கள் முறையிட்டனர்.

300 குடும்பங்கள் வரை மீளக்குடியேறியுள்ள நிலையில் வீட்டுவசதியற்ற நிலையிலும் கூரைவிரிப்பிலான கொட்டகையின் கீழும் வசித்துவருகின்றனர்.

நீண்ட காலமாக வசித்துவரும் இக்கிராம மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் இல்லை என்ற காரணத்தால் எவ்வித வீடமைப்புத் திட்டங்களும் இங்கு முன்னெடுக்கப்படவில்லை. காணித்திணைக்களத்தின் அசமந்தப்போக்கினால் தமக்கு காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப்படாமையால் வீடமைப்புத் திட்டமும் கிடைக்கவில்லை என குறிப்பிடப்பட்டது.

நிறுவனமூடாக தரப்பட்ட 12 தகரம் தவிர தமக்கு வீடமைக்க எவ்வித வசதிகளும் செய்துதரப்படவில்லை எனவும் மலசல கூட வசதியோ தண்ணீர், கிணறு வசதிகளோ செய்து தரப்படவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன், போதிய கல்வி வசதிகள் செய்து தரப்படவில்லை என்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும் எனவும் மனித நேய அடிப்படையிலாவது உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

## மாணவர்களிடையே போட்டிகள்

ஏழாலை,

யாழ். மாவட்டத்தில் வெளிவரும் 'வணக்கம்' சஞ்சிகை பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளினை நடாத்தவுள்ளது. மாணவர்களிடையே ஆக்கத்திறனை வளர்க்கும்முகமாக கவிதை, கட்டுரை மற்றும் சிறுகதைப் போட்டிகளை நடாத்தி முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்குப் பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களின் எழுத்தாற்றலை அதிகரிப்பதற்கு அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் முகமாக இப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பயன்படுத்த முடியாத பாடநூல்களை வழங்க வேண்டாமென அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

(வட்டுக்கோட்டை நிருபர்)

பாடசாலை மாணவர்களுக்கு பக்கங்கள் விடுபட்டுள்ள அல்லது பயன்படுத்த முடியாத பாட நூல்களை வழங்கவேண்டாமென சகல அதிபர்களையும் சுற்றுநிருபத்தினூடாக அறிவுறுத்தியுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் டபிள்யூ.என். எம்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

2012 ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு விநியோகிக்கத் தேவையான பாடநூல்களின் கோரல் படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பாட நூல் விநியோகப் பொறுப்பாசிரியர்கள் தங்கள் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களின் எண்ணிக்கை, மாணவர் தொகை என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு கோரல் படிவங்களை நிரப்பவேண்டும்.

நாட்டின் அனைத்து மாணவ, மாணவியருக்கும் தேவையான சகல விதமான பாட நூல்களையும் குறித்த காலத்தில் பெற்றுக்கொடுப்பதே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். ஆகையால், இலவச பாடநூல் கோரல் படிவத்தினை சரியாகப் பூரணப்படுத்தி குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வாறு அனுப்பிவைக்கும்படி கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பாட நூல்களை அச்சிடுவதற்காக அரசாங்கம் வருடாந்தம் பெருந்தொகையான நிதியைச் செலவிட்டுவருகிறது. ஆதலால், அனைத்துப் பாடநூல்களும் பணரீதியாக பெறுமதியுடையவை. எனவே, தேவைக்கேற்ப பாட நூல்களைக் கோருவதும் எஞ்சியவற்றைக் களஞ்சியப்படுத்திப் பாதுகாப்பதும் உரிய அதிகாரிகளின் கடமை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

YARL OSAI
யாழ் ஓசை
சிறு விளம்பரங்கள்
விற்பனை
SORD KUMORI TYPE KORD அளவு (19"x25") அச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்.
0718298375

Yaal Osai
யாழ் ஓசை
*2011 ஜூன் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*
**இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தை

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியான பின்னராவது போருக்குக் காரணமாகவிருந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமே.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் த.தே.கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராஜா, அரசியல் தீர்வு தொடர்பில் தாம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள முக்கிய கோரிக்கைகளுக்கான பதிலை எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் பேச்சு நடத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர் அது தொடர்பிலும் அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதிலை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தை ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருக்கும் கருத்தும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் எந்தவித பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ள கூட்டமைப்பானது, இது ஒரு காலத்தைக் கடத்தும் செயற்பாடு எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் அதனைத் தீர்க்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளும் அமைக்கப்பட்ட குழுக்களும் எண்ணிக்கையில் அடங்காதவை.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தமது தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவும் அரசியல் ரீதியாக இலாபமீட்டுவதற்காகவுமே இவ்வாறான குழுக்களை அமைத்து பேச்சுவார்த்தை நடத்தி வந்தன என்பது வெளிப்படை உண்மையாகும்.

இந்த வரலாற்றின் பின்னணியில் தான் தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளையும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவையும் நாம் நோக்க வேண்டியிருக்கிறது.

ஆனாலும் தற்போதைய அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நடத்துகின்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரும் கூட இந்நாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவில்லை.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், அவர்களது காணிப் பிரச்சினைகள், அரசியல் கைதிகள் நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, தமிழ் பிரதேசங்கள் சிங்களமயமாக்கப்படுகின்றன எனும் குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் இன்று விஸ்வரூபமெடுக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் இப் பிரச்சினைகளுக்கு சுமுகமானதொரு தீர்வைக் காண வேண்டுமாயின் இரு தரப்பினரும் விட்டுக் கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமாகும்.

இல்லையேல் கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் முன்னெடுத்ததைப் போன்ற வெறும் கண்துடைப்புப் பேச்சுவார்த்தைகளாகவே இவை அமைந்துவிடக் கூடும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட சர்வ கட்சிக் குழு சுமார் 100 தடவைகள் சந்தித்துப் பேசியும் அதன் மூலம் எட்டப்பட்ட தீர்வுகள் எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற கசப்பான அனுபவத்தையும் இந்த இடத்தில் கவலையுடன் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

# அன்று தொடக்கம் இன்று வரை துரோகம் இழைக்கும் கருணாநிதி

**தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி அன்று முதல் இன்றுவரை ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகிறார் என்று சாரப்பட பழ. நெடுமாறனால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

**6**

செய்தியறிந்து அங்கிருந்து விரைந்து திரும்பி பிரதமரைச் சந்திக்கச் சென்ற குழுவினருடன் அவரும் சென்றார். அவர் வருகையைச் சற்றும் எதிர் பார்க்காத கருணாநிதி தனது அமைச்சர்களில் ஒருவரை அவரிடம் அனுப்பி பிரதமரிடம் எதுவும் கோபமாகப் பேசிவிடவேண்டாம் என்று வேண்டிக்கொண்டார். ஆனால் தா.பாண்டியன் பிரதமரிடம் தமிழக மக்களின் கோபத்தையும் ஆதங்கத்தையும் கண்டனத்தையும் தெரிவிக்கத் தயங்கவில்லை. கருணாநிதியின் சார்பில் பிரதமரிடம் அளிக்கப்பட்ட மனு ஏற்கனவே விடுக்கப் பட்ட வேண்டுகோளைப் பின்பற்றியே எழுதப்பட்டி ருந்தது. தமிழக மக்களின் கோபத்தைத் திசை திருப்புவதற்காக பிரதமர் சந்திப்பு நாடகத்தை நடத்தினாரே தவிர இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கு எதுவும் செய்யவில்லை.

இறுதியாக ஒரு உச்சக்கட்டமான நாடகத்தை அரங்கேற்றினார். 27-4-09 அன்று திடீரென காலை 6 மணிக்கு அண்ணா நினைவிடத்திற்குச் சென்று சாகும்வரை பட்டினிப்போராட்டம் நடத்தப்போவதாக முதலமைச்சர் மு. கருணாநிதி அறிவித்தார். இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் வேண்டும் என்பதற்காகவே இந்தப் போராட்டம் எனக் கூறினார். இலங்கையில் போர் நிறுத்தம் செய்வதற்கு இந்திய அரசு வலியுறுத்தி வருகிறது எனக்கூறி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகலைத் தடுத்து நிறுத்தியவர். இப்போது திடீரென இந்திய அரசுக்கெதிராக சாகும்வரை பட்டினிப் போராட்டம் நடத்த முன்வந்தார். அண்ணா நினைவிடத்திற்கு முன்னால் அவருடைய கட்சிக்காரர்கள் திரட்டப்பட்டு தங்கள் தலைவரின் உன்னதமான தியாகப் போராட் டத்திற்கு ஆதரவாக முழக்கங்கள் எழுப்பினார்கள். ஆனால் பகல் 11 மணியளவிலேயே மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டதாகத் தமக்கு செய்தியனுப்பி உள்ள தாகக் கூறி உண்ணா நோன்பை முடித்துக்கொண்டார். ஆக காலை உணவிற்குப் பிறகு பட்டினிப் போராட் டத்தைத் தொடங்கி பிற்பகல் உணவு வேளைக்கு முன்பாக அதை முடித்துக்கொண்ட சாதனையாளர் இவர் மட்டுமே.

ஆனால் அன்று மாலையிலேயே முள்ளிவாய்க்கால் பகுதியில் சிங்கள இராணுவ விமானங்கள் குண்டு மழை பொழிந்து ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்தன.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமைகள் சீர்குலைவு பற்றி ஆராய வேண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையத்திற்கு சுவிட்சர்லாந்து நாடு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியது. ஆனால் அந்த விண்ணப்பத்தை மறுத்து இலங்கைத் தூதர் ஒரு தீர்மானத்தை அனுப்பினார். இலங்கையின் உள்நாட்டு நடவடிக்கைகளில் மற்ற நாடுகள் தலையிடக்கூடாது என்பதுதான் அந்தத் தீர்மானமாகும். 27-5-09 அன்று ஐ.நா. மனித உரிமை அமைப்புக் கூட்டத்தில் இலங்கை யின் தீர்மானத்திற்கு இந்தியாவும் சீனாவும் இணைந்து நின்று ஆதரவு திரட்டின. இதன் விளைவாக அத் தீர்மானத்திற்கு 29 நாடுகளின் ஆதரவு கிடைத்தது. 12 நாடுகள் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்தன. 6 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இலங்கையில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்ட விவரமும் 3 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் எந்த அடிப்படை வசதியும் இல்லாத முகாம்களில் அடைக்கப்பட்டு போதுமான உணவோ, குடிநீரோ, சுகாதார வசதிகளோ இல்லாமல் சித்திரவதை செய்யப்படுவதும் அண்டை நாடான இந்தியாவுக்குத் தெரியாமல் இல்லை. அப்படியிருந்தும் இந்தியா இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டது.

இந்திய அரசின் இந்தப் போக்கை கண்டித்துத் திருத்த வேண்டிய தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி சிங்கள அரசுக்கு ஆதரவான நடவடிக்கையையே மேற்கொண்டார்.

முள்வேலி முகாம்களில் முடக்கப்பட்டிருக்கும் மக்கள் குறித்து தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு உருவானதால் அதை நீர்த்துப்போகச் செய்வதற்காக முதல்வர் கருணாநிதி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பினார். 10-10-09 அன்று சென்ற இந்தத் தூதுக் குழு 14-10-09 அன்று திரும்பியது. அரசு எங்கெங்கு அழைத்துச்சென்று முகாம்களைக் காட்டியதோ அங்கே மட்டும் இந்தக் குழுவினர் சென்றனர். போரில் படுகாயமடைந்தவர்கள் அங்கவீன மானவர்கள், இயலாத முதியவர்கள், குழந்தைகள் ஆகியோருக்குப் போதுமான மருத்துவ வசதிகளும் சத்துள்ள உணவும் அளிக்கப்படுகிறதா என இந்தக் குழுவினர் ஆராயவில்லை. குடும்பங்கள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு முகாம்களில் பிரிந்து வாழ்பவர்களை ஒன்றாக வைக்கும்படி இக்குழுவினர் வற்புறுத்தினார்களா என்ற கேள்விக்கும் விடையில்லை. போரின் இறுதிக்கட்டத்தில் இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் விவரப்பட்டியலை இக்குழுவினர் கேட்டுப்பெற்றார்களா என்றால் இல்லை.

**(தொடரும்)**

# மனிதத்தன்மை சிறிதும் அற்ற இடத்தில் உடலில் கொப்புளங்களுடன் எனது மகள் வாடுகிறாள்


## கருணாநிதி உருக்கம்; பத்திரிகைகளின் தவறான குற்றச்சாட்டை நிரூபிக்கவே சி.பி.ஐ. போராடுகிறது என்கிறார்

**சென்னை:**

திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கனிமொழியின் உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டு வாடுவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்

டில்லியில் கனிமொழியைச் சந்தித்து விட்டு புதன்கிழமை இரவு சென்னை திரும்பிய அவர் சி.ஐ.டி. காலனியில் உள்ள வீட்டில் நிருபர்களிடம் கூறியதாவது,

திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கனிமொழி, ராஜா, சரத்குமார் ஆகியோரைச் சந்திப்பதற்காக மட்டுமே டில்லி சென்றேன். மனிதத்தன்மையற்ற இடத்தில் கனிமொழி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதன் காரணமாக அவரது உடலில் வீக்கமும், வெப்பத்தால் கொப்புளங்களும் ஏற்பட்டுள்ளன. சரத்குமாரும் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளார்.



பத்திரிகைகளில் வெளியான தவறான செய்திகளின் அடிப்படையில்தான் கனிமொழி மீது குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. அந்தத் தவறான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதை தனது கடமையாகக் கருதி சி.பி.ஐ. செயற்படுகிறது.

> "ஊழலுக்கு எதிரான நல்ல முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்போம். ஆனால், உள்நோக்கத்துடன் நடக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க முடியாது"

**தி.மு.க.வின் நிலைப்பாடு:**

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர் முதல்வராக இருந்தாலும் அது தொடர்பான விசாரணை வரம்புக்கு உட்படுத்த சட்டம் கொண்டுவந்துள்ளோம். லோக்பால் சட்ட மசோதா விவகாரத்திலும் எங்களது நிலைப்பாடு அதுதான்.

ஊழலுக்கு எதிரான நல்ல முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவு அளிப்போம். ஆனால், உள்நோக்கத்துடன் நடக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவளிக்க முடியாது.

மேலும் தி.மு.க., காங்கிரஸ் உறவில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

## மெழுகுவர்த்தி செய்ய பழகும் கனிமொழி

**புதுடில்லி:**

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு, திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மகளும் ராஜ்யசபா எம்.பி.யுமான, கனிமொழி, சிறையில் ஓய்வு நேரத்தில் மெழுகுவர்த்தி செய்ய கற்றுக் கொள்வதாக, செய்திகள் வெளியாகியுள்ளன.

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில், கடந்த மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கனி மொழி, திஹார் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் இந்நிலையில் ஓய்வு நேரங்களில் புத்தகங்களை படிப்பதில் ஈடுபட்டு வந்த அவர் தற்போது, சிறையில் இருக்கும் மற்ற பெண் கைதிகளோடு இணைந்து மெழுகுவர்த்தி தயாரிக்கும் முறையை கற்று வருவதாக, சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



அவரது பிணை மனுக்கள் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட போதும், அது குறித்து அவர், எந்த சலனமும் இன்றி சிறையில் இயல்பாக இருப்பதாகவும் அதிகாரிகள் கூறினர்.


# தமிழக மீனவர் பிரச்சினை மத்திய அரசுக்கு எதிரான பிரளயமாக வெடிக்கும்: வைகோ

**சென்னை:**

தமிழக மீனவர் பிரச்சினை தொடருமாயின் அதுவே இந்திய அரசுக்கு எதிரான பிரளயமாக வெடிக்கும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எச்சரித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர்,

இலங்கை அரசுக்கு இந்திய அரசு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று அ.தி.மு.க. அரசு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. அதே நேரத்தில் ஏற்கனவே பொருளாதார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதையும் ரத்து செய்ய கோரி முன் வைக்காதது ஏன்?



இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். இதை இந்திய அரசு கண்டிக்காதது ஏன்? இதே நிலை நீடித்தால் மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படும். அதுவே இந்திய அரசுக்கு எதிராக பிரளயமாக வெடிக்கும் என்றார்.

**பிரதமருக்கு கடிதம்**

இதனிடையே இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள 23 தமிழக மீனவர்களை உயிருடன் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கிற்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

மிகுந்த வேதனையோடு, துயரத்தோடு இந்த கடிதத்தை எழுதுகிறேன். டில்லியில் நான் உங்களை சந்தித்தபோது, இலங்கை கடற்படையினரால் அப்பாவி தமிழக மீனவர்கள் உயிருக்கு, அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று மனுவாக எழுதிக் கொடுத்தேன். ஆனால் அதுபோல பல மனுக்கள் கொடுத்தும் சாதகமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இலங்கை கடற்படையினரின் தொடர் துன்புறுத்தல் காரணமாக, தமிழக மீனவர்கள் தங்கள் வாழ்க்கையை நிம்மதியாக நடத்த முடியவில்லை. 23 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறைப்படுத்தப்பட்டுள்ள இந்த நேரத்திலாவது இந்திய அரசு முக்கிய நடவடிக்கைகளை எடுத்து, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் தடுக்க வேண்டும்.

## 'சொத்துக் கணக்கை முழுமையாக தெரிவிக்கவும்' சாயிபாபா அறக்கட்டளைக்கு ஆந்திர அரசு கடிதம்

**நகரி:**

சத்திய சாயி பாபா அறக்கட்டளையின் செயற்பாடுகள் பற்றிய ஆந்திர அரசின் ஆலோசனை கூட்டம் நேற்றுமுன்தினம் ஐதராபாத்தில் நடந்தது.

இந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு நிருபர்களிடம் பேசிய அறநிலைத்துறை அமைச்சர் லட்சுமையா,

சத்திய சாயிபாபா 35 ஆண்டுகள் ஆன்மிக பணிகள் மட்டும் இன்றி, மக்களுக்கு கல்வி, மருத்துவம் போன்ற சமூக பணிகளிலும் ஈடுபட்டு இருக்கிறார். அரசு செய்யாத பல குடிநீர் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார். அவரது மரணத்துக்கு பின், அவரது அறக்கட்டளை பற்றி வெளியாகி வரும் தகவல்கள் திருப்திகரமாக இல்லை. எனவே இது பற்றி ஆலோசித்தோம்.

தற்போது அறக்கட்டளைக்கு இருக்கும் சொத்து எவ்வளவு? பணம் எவ்வளவு இருக்கிறது? எதிர்கால திட்டம் என்ன? என்று கேட்டு அறகட்டளைக்கு கடிதம் அனுப்புகிறோம். இதற்கு பதில் வந்ததும், அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிப்போம் என்று தெரிவித்தார்.

# வசதியீனங்களுடன் இயங்கிவரும் வட்டக்கச்சி பொதுச்சந்தைகள்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி தர்மபுரம் மற்றும் வட்டக்கச்சி பொதுச் சந்தைகள் மிகவும் வசதியீனங்களுடன் எவ்வித அபிவிருத்தியும் இன்றி செயற்படுவதாக இப்பகுதி பொதுமக்களாலும் பொது அமைப்புக்களாலும் முறையிடப்படுகின்றது.

கடந்த யுத்தத்தின்போது பெரிதும் சேதமான இவ்விரு சந்தைகளுக்கும் நிரந்தரமான கட்டட வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் பொதுச் சந்தைக்கான வசதிகள் அதிகரிக்கப்படவேண்டுமெனவும் வேண்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, கல்லாறு கிராமத்தில் மீளக்குடியேறியுள்ள கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் வாழ்வாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படாத நிலையிலும் குடிநீரைப் பெறுவதிலும் அதிக சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் குறித்த காலத்தில் பாட நூல்களை பெற்றுக்கொடுப்பதே எமது நோக்காகும்

## கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம்

(வட்டுக்கோட்டை நிருபர்)

எல்லா மாணவர்களுக்கும் இலவச பாடநூல்கள் உரியமுறையில் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும், பக்கங்கள் விடுபட்டுள்ள அல்லது பயன்படுத்த முடியாத பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்கவேண்டாமென சகல அதிபர்களையும் சுற்றுநிருபத்தினூடாக அறிவுறுத்தியுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, 2012 ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு விநியோகிக்கத் தேவையான பாட்நூல்களின் கோரல் படிவங்கள் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், பாடநூல் விநியோகப் பொறுப்பாசிரியர்கள் தங்கள் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களின் எண்ணிக்கையை சரியாகக் குறிப்பிட்டுக் கோரல் படிவங்களை நிரப்பவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவ, மாணவியருக்கும் தேவையான சகல விதமான பாடநூல்களையும் குறித்த காலத்தில் பெற்றுக்கொடுப்பதே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். ஆகையால், இலவச பாடநூல் கோரல் படிவத்தினை சரியாக பூரணப்படுத்தி குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கும் படி கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடநூல்களை அச்சிடுவதற்காக அரசாங்கம் வருடாந்தம் பெருந்தொகையான நிதியைச் செலவிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

**கிருஷ்ணன்...** (தொடர்ச்சி)

காலை 6.00 மணியளவில் இராஜகோபுரத்துக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது ஏற்பட்ட சன நெரிசலைப் பயன்படுத்தியே ஆறு பெண்களின் தாலிக் கொடி சங்கிலி உட்படப் பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

சங்கிலி அறுக்கப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற பெண்மணி ஒருவர் தான் அணிந்திருந்த மூன்றரைப் பவுண் சங்கிலியை கழற்றி கைப்பேசுக்குள் வைத்திருந்தபோதும் அதை அவதானித்த திருடர் அவர் தனது கையில் மாட்டியிருந்த போ்ஸை கூரிய ஆயுதம் கொண்டு வெட்டி சங்கிலியையும் அதனுள் இருந்த 4 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வுகளின் போது தங்க நகைகள் அபகரிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துவருவது குடாநாட்டு பக்தர்களிடையே அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

---

**குடாநாட்டில்...** (தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் பழங்களின் உற்பத்தியையும் தரத்தையும் மற்றும் நுகர்வையும் அதிகரிக்கும் நோக்குடன் இந் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்நிலையம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பழ உற்பத்தியாளர் சங்கங்களின் உறுப்பினர்களிடமிருந்து தரமான பழங்களை நியாயமான விலையில் கொள்வனவு செய்யவுள்ளது.

இவ்வாறு கொள்வனவுசெய்யப்படும் பழங்கள் விற்பனை செய்யப்படும் வரை தற்காலிகமாக இந்த நிலையத்தில் சேமிக்கப்படும்.

இவை சாதாரண நுகர்வோருக்கு சில்லறையாகவும் தனியார் நிறுவனங்களுக்கு மொத்தமாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. மேலும், இப்பழங்களில் இருந்து பழப்பானங்கள், பழச்சாறு, பழசலாது போன்ற பழ அடிப்படையிலான உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை விற்பனை செய்வதற்கான வசதிகளும் இந் நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மாம்பழம், முந்திரிகைப்பழம், பப்பாசிப் பழம், வாழைப்பழம், பலாப்பழம், விளாம்பழம், கொய்யாப்பழம், தேசிப்பழம் முதலான பழங்களின் உற்பத்தியில் ஈடுபடுகின்ற உற்பத்தியாளர்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதுடன் அவர்களது வருமானத்தையும் அதிகரிக்க இந்நிலையம் பங்களிப்பு வழங்கவுள்ளது.

---

**எந்த...** (தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகளுக்கு எந்த சிக்கலும் ஏற்படாது என்று என்று பதில் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் அரசு-கூட்டமைப்பு பேச்சுக்களுக்கு தடையாக அமையுமா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

அமைச்சர் மேலும் கூறுகையில்

அளவெட்டி சம்பவமானது அரசு-கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் சிக்கலை ஏற்படுத்தும் என்று நான் கருதவில்லை. இரண்டு தரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரதமர் டி.எம். ஜயரட்ண தெளிவான வகையில் பதிலளித்துள்ளார். சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தேவைப்படின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள தயார் என்றும் பிரதமர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார் என்று தெரிவித்தார்.

---

**ஒலிபெருக்கி...** (தொடர்ச்சி)

பதிவுசெய்வதுடன் எவரும் வன்னியில் இருந்து வந்துள்ளார்களா? தடுப்பு முகாமிலுள்ளார்களா? விடுதலைப் புலி இயக்கத்தில் இருந்தார்களா? போன்ற விபரங்களையும் கேட்டுப் பதிவுசெய்கின்றனர். அத்துடன் குடும்பத்தவர் கைத்தொலைபேசி மூலம் புகைப்படம் எடுத்தும் செல்கின்றனர்.

மேலும், இராணுவத்தினர் பதிவுகளை மேற்கொண்டு செல்கின்றபோதும் இதனை உறுதிப்படுத்துவதற்குரிய எவ்வித மான ஆவணங்களையும் அவர்கள் வழங்குவதில்லை. இதேவேளை, வலி.மேற்குப் பகுதிகளுக்கு பதிவுகளுக்குச் செல்லும் இராணுவத்தினர் 2007 ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட இராணுவ குடும்ப அட்டையைப் பார்வையிட்டுச்செல்வதுடன், அது இல்லாதவர்களை அதனை எடுக்குமாறும் கூறி கையடக்கத் தொலைபேசி மூலம் புகைப்படத்தையும் எடுத்துச்செல்கின்றனர்.

இதேவேளை, இந்த இராணுவப் பதிவு நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி அறிவித்துள்ளதாக பதிவுசெய்வரும் இராணுவத்தினரிடம் கவனத்துக்கு கொண்டு வந்த போதிலும், தங்களுக்கு மேலிட உத்தரவு வந்துள்ளதாகவும் இதனால்தான் பதிவுகளை மேற்கொள்வதாவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், வலி. கிழக்குப் பகுதியிலுள்ள வீடுகளுக்கும் சென்று இவ்வாறான பதிவுகளை மேற்கொண்டுவருவதுடன், ஒரு சில கிராமங்களில் ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தல் வழங்கி பதிவுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் வீடுகளுக்குச் செல்லும் இராணுவத்தினர் தடுப்பு முகாமில் இருப்பவர்கள், வன்னியில் இருந்து வந்தவர்கள் தொடர்பான விபரங்களையும் பதிவுசெய்கின்றனர் மேலும் மலசல கூடங்கள், பொதுக் கிணறுகள் போன்ற வற்றையும் பதிவுசெய்வதுடன் புகைப்படம் எடுப்பதற்கு பிறிதொரு நாளில் அறிவித்தல் வழங்கப்படும் போது இராணுவ சிவில் அலுவலகத்திற்கு வருமாறு கூறிச்செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவப் பதிவு நடவடிக்கைகளை நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து பின்னர் வழக்கை வாபஸ் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

---

**யாழ்ப்பாணம்...** (தொடர்ச்சி)

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நீர்வழங்கல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் நீர் மற்றும் சுகாதார திட்டங்களை செயற்படுத்தவுமே பிரான்ஸ் அரசாங்கம் 35 மில்லியன் யூரோக்களை வழங்கவுள்ளது.

அத்துடன் இந்த வேலைத்திட்டங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்கவுள்ளது. இவற்றின் மூலம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நீர் வழங்கல் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை இரணைமடு குளத்தின் கீழ்மட்ட பகுதியை புனரமைப்பதற்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சிறந்த சேவையை வழங்க முடியும்.

மேலும் நாடளாவிய ரீதியில் பாலங்களை அமைத்தல், வீதிகள், நீர்த்திட்டங்கள், நீர்ப்பாசன திட்டங்கள், மின்சக்தி வேலைத்திட்டம் ஆகியவற்றுக்காக சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நாடு முழுவதும் நெடுஞ்சாலைகளை அமைக்கும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி 1000 கோடி ரூபாவை வழங்கவுள்ளது. இதற்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது.



# பருப்பு ரசம்

சூடச்சுட மணக்கும் ரசத்தை உள்ளங்கையில் ஊற்றிக் குடிக்கையிலோ, சாதத்துடன் கலந்து சாப்பிடுகையிலோ கிடைக்கும் சுக அனுபவம் அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும். காய்ச்சல் வருவதுபோல இருந்தாலும் சரி, காய்ச்சல் வந்து மீண்டு எழுகையிலும் சரி, ஜலதோஷம் பிடித்தாலும், தொண்டை கரகரத்தாலும் சுடச்சுட ரசத்தை சேர்த்து பரிமாறி, ரசம் எல்லாவற்றையும் சரியாக்கும் என்ற நம்பிக்கையை நம்முன் வளர்த்து விட்டிருப்பதை எம்மில் பலரும் மறுக்க மாட்டார்கள்.

இப்போது பருப்பு ரசம் செய்வது எவ்வாறு என்று பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்:**

புளி - சிறிய எலுமிச்சை அளவு, தக்காளிப் பழம் - 3, ரசப்பொடி - 1 தேக்கரண்டி, துவரம் பருப்பு - 4 தேக்கரண்டி, மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி, பெருங்காயம் - 1 சிட்டிகை, உப்பு - 1 தேக்கரண்டி

**தாளிக்க :** எண்ணெய் - 1 தேக்கரண்டி, கடுகு - 1/4 தேக்கரண்டி, மிளகாய் வற்றல் - 2, சீரகம் - 1/4 தேக்கரண்டி, கறுப்பு மிளகுத்தூள் - 1/4 தேக்கரண்டி தனியாத்தூள் - 1/2 தேக்கரண்டி, பெருங்காயம் - 1 சிட்டிகை, கொத்துமல்லித் தழை - தேவையான அளவு

**செய்முறை :**

★ புளியை சிறிது தண்ணீருடன் கொதிக்க விட்டு சற்று ஆறியதும் கையால் நன்கு கசக்கி ஒரு உலோக வடிகட்டியில் போட்டு வடிகட்டி சாறை எடுத்துக் கொள்ளவும்.

★ புளிச்சாறுடன் சிறிது தண்ணீர், ரசப்பொடி, உப்பு சேர்த்து புளி நெடி மற்றும் ரசப்பொடி நெடி அடங்க அடுப்பை சிம்மில் வைத்து நன்கு கொதிக்க விடவும்.

★ பிறகு பெருங்காயம் 1 சிட்டிகை சேர்த்து மேலும் ஒரு கொதி விடவும்.

★ நல்ல பழமாக உள்ள தக்காளிகளை சிறு துண்டுகளாக நறுக்கி, கொதிக்கும் புளி நீருடன் போட்டு அடுப்பை சிம்மில் வைத்து நன்கு கொதிக்க விடவும்.

★ துவரம் பருப்பை மஞ்சள்தூள், தண்ணீர் சேர்த்து குக்கரில் வைத்து குழைய வேகவிட்டு எடுத்துக்கொள்ளவும்.

★ பிறகு துவரம் பருப்பு மற்றும் நீரை கொதிக்கும் ரசத்தில் ஊற்றி அடுப்பை சிம்மில் வைத்து நடுநடுவே கரண்டியால் கலந்து விடவும்.

★ ரசம் நுரைத்துப் பொங்கி வருகையில் அடுப்பை அணைத்து தாளித்து விட்டால் பருப்பு ரசம் தயார்.

★ பரிமாறுகையில் பொடியாக அரிந்த கொத்தமல்லித் தழை தூவிப் பரிமாறவும்.

**குறிப்பு:** புதுப்புளி மற்றும் நாட்டுத் தக்காளி உபயோகித்தால் ரசம் மிகவும் சுவையாக இருக்கும்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117,புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்


5 தசாப்தங்களுக்கு மேலாக
நிலையானதும் ஸ்திரத் தன்மையும் கொண்ட சேவைக்கு
சென்ட்ரல் பினான்ஸ்
யாழ் மண்ணில்
நிதி வளம் பெருக, நாம் உங்களுடன்!





உங்கள் அனைத்து நிதித்தேவைகளுக்கான தீர்வுகள் எம்மிடம் உள்ளன.
பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கான குத்தகை வசதிகள்.
மக்ஸிமோ ட்ரக்களுக்கான கவர்ச்சிகரமான குத்தகை வசதிகள்.
டிமோ பட்டா வாகனங்களுக்கு விசேட நிதி வழிமுறைகள்.
மக்ஸிமோ ட்ரக் மற்றும் டிமோ பட்டா வாகனங்களுக்கான இலவச காப்புறுதி சேவை.
நிலையான வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான அதி கூடிய வட்டி வீதம்.

சென்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி
364, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 1608, 021 222 1942

# இடப்பற்றாக்குறையுடன் இயங்கிவரும் உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்



**1960**ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளில் உயரப்புலம் பகுதியில் அவ் ஊரினைச் சேர்ந்த க.சி.கைலாயப்பிள்ளை இறைபாதம் அடைந்த தனது மகன் கை.குணபாலனின் நினைவாக ஓர் சைவப் பாடசாலையாக அவ் ஊர் மக்களின் பூரண ஒத்துழைப்புடன் குமாரசாமிப் புலவரின் கல்வி நடவடிக்கைகளுடன் சு.இராசரத்தினம் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாடசாலையே தற்போதைய உயரப்புலம் குணபாலன் வித்தியாலயமாகும்.

''கல்வியே அருந்தனம்'' எனும் மகுட வாசகத்துடனும் ''மாறிவரும் விஞ்ஞான உலகில் தான் வாழ்வதற்கும் சமுதாயம் வாழ்வதற்கும் வழிகாட்டியாக இருத்தல்'' எனும் தூர நோக்குடனும் சிறப்புற இந்துபேட் நிர்வாகத்தினரால் குறைந்த வளங்களுடன் நிறைந்த மாணவர்களுக்கு கல்விப் பசி மட்டுமன்றி வயிற்றுப் பசியினையும் போக்கி திறம்பட இயக்கப்பட்டு வந்தது.

முன்னாள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் அயராத முயற்சியின் பயனாக 30.01.1961 ஆம் ஆண்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எனும் புதிய நாமத்துடன் அரசு இப் பாடசாலையைப் பொறுப்பேற்றது.

இப் பாடசாலையில் பி.சின்னப்பு, திருமதி எஸ்.குமாரசாமி, என்.நடராசா, திருமதி எஸ்.எஸ்.சரஸ்வதி எ.சிறிகாந்தன், எம்.சிவசுப்பிரமணியம், செல்வி பிரியதர்சினி.வ திருமதி சி.யோகேஸ்வரி ஆகியோர்கள் இப் பாடசாலையின் அதிபர்களாக, பதில் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

அனைத்து அதிபர்களும் பதில் அதிபர்களும் மிகவும் அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் தம்முடைய காலத்தில் ஏதாவது சாதிக்க வேண்டும் என இப் பாடசாலையில் தங்களது திறமையினால் பல்வேறு கல்வி நடவடிக்கைகளையும் பௌதிக வள அதிகரிப்பையும் இயன்றவரை செய்திருக்கின்றார்கள் என்பதனை வரலாற்று சான்றுகள் எடுத்துக் கூறுகின்றன.

அரசுடமையின் பின் பெயர் மாற்றம் செய்யப்பட்டமையினால் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எனும் பெயருடன் இயங்கிய இப் பாடசாலை பாடசாலையின் ஸ்தாபகரின் விருப்பத்திற்கிணங்க உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை என அரசின் அனுமதியுடன் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப் பாடசாலையானது இவ் ஊர் வறிய மக்களின் பிள்ளைகளின் கல்விக்கு கலங்கரை விளக்காக விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. இப் பாடசாலையில் ஓர் உன்னதமான மனித நேயமுடைய கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளுடன் மிகவும் அர்ப்பணிப்பாக சேவை மனப்பாங்குடன் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஒன்றிணைந்து செயற்படும் பண்பு அன்று தொடக்கம் இன்றுவரை மிகச் சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தரம் - II வகையைச் சேர்ந்த பாடசாலையாகக் காணப்படும் இப் பாடசாலையின் கீதத்தினை நவாலி சென்.பீற்றஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அ. மகாலிங்கம் இயற்றி உள்ளதுடன் பாடசாலையின் சின்னத்தினை தாவடி இந்து தமிழ் கலன் பாடசாலை அதிபர் அனுவை நாகராஜன் உருவாக்கியுள்ளார்.

இங்கு கடமையாற்றி அதிபர்கள் அனைவரும் இப் பாடசாலையின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்காற்றியிருக்கின்றார்கள் அதிபர் எ. சிறிகாந்தன் என்பருடைய காலத்தில் பாடசாலை குறிப்பிடத்தக்க பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகள் எனப் பல்வேறு மட்டங்களில் மாணவர்கள் உயர்ந்து விளங்குகின்றார்கள்.



நா.தனபாலசிங்கம்

பாடசாலையுடன் இன்றுவரை நெருங்கிய உறவை வைத்துள்ள அதிபர் தான் மட்டுமன்றி தன்னுடைய குடும்பத்தினருடன் சேர்ந்து தம்மாலான பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றார். இவருடைய இச்செயற்பாடுகளை பலமுறை பாடசாலைச் சமூகமும் பெற்றோர்களும் இணைந்து பாராட்டியுள்ளார்கள்.

அடுத்து இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வருபவர் தற்போதைய அதிபர் நா.தனபாலசிங்கம். இவர் 13.05.2005ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இப் பாடசாலையில் அதிபராக கடமையாற்றி வருகின்றார். இவருடைய காலப் பகுதி பாடசாலை முன்னேற்றத்திற்கு ஓர் சவால் நிறைந்த காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. காரணம் அயற் பாடசாலைகள் பலவும் மாணவர்கள் வரவுகளை அதிகரிப்பதில் விழிப்பாகச் செயற்படுகின்றன. அத்துடன் பல பிரபல பாடசாலைகள் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களை ஆரம்பித்துள்ளன. இதனால் மாணவர்கள் தொகையினை கணிசமான அளவு பாதுகாப்பது இலகுவான செயற்பாடு அல்ல.

ஆனால், அதிபர் இவற்றை எல்லாம் வெற்றி கொண்டு பாடசாலையில் மாணவர் எண்ணிக்கையினைக் குறைய விடாமல் சிறப்பான முகாமைத்துவத்துடன் ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் பெற்றோர்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுதனூடாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மிக இலகுவாக வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றார். 2007ஆம் ஆண்டு வலிகாம வலயத்தினால் 'சிறந்த பிள்ளை நேயப் பாடசாலை' எனும் விருதினைப் இப்பாடசாலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பாடசாலை அதிபரின் சிறந்த விடாமுயற்சியின் பயனாக அனைத்து மாணவர்களும் ஒவ்வொரு நாளும் ஒரு கிளாஸ் தூய பசுப்பால் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் மதிய உணவுகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா அமரர் தி.மகேஸ்வரன் ஆகியோருடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர் என்.ரவிராஜ், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளனர். இவர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியும் பல உதவிகளைச் செய்துள்ளார். அரச சார்பற்ற நிறுவனங்கள் வரிசையில் சிறுவர் பாதுகாப்பு நிதியம், கரித்தாஸ், கியூடெக், உலக உணவுத் திட்டம், ஐ.சி.ஆர்.சி. போன்ற தன்னார்வ நிறுவனங்களும் இப்பாடசாலைக்கான உதவிகளைச் செய்துள்ளன.




தற்போதைய அதிபரின் தலைமையிலேயே சென்ற ஆண்டு பொன் விழாவை இப் பாடசாலை மிகச் சிறப்பாக கொண்டாடியது. அதிபரின் அயராத உழைப்பினால் இப் பாடசாலையின் 90 வீதிமான வளப்பிரச்சினை நிவர்த்தி செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இப் பாடசாலை சிறப்பான வளங்களுடன் இயங்கி வந்தாலும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு போதிய இடவசதி இல்லாமையால் பௌதீக வளங்களை அதிகரிக்க முடியாமல் திண்டாடுகின்றது.

எனவே இப் பாடசாலை அனைத்து வளங்களையும் பெற்று தன்னிகருடன் தலைநிமிர்ந்து உயர்வடைவதற்கு இப் பாடசாலையின் பழைய மாணவர்களும், சமூக ஆர்வர்களும் உதவுவதற்கு முன்வரவேண்டும்.

●கே.ஆனந்தன் (B.Com)

# மாணவர் மலர்



## வானம் ஏன் நீலமாகத் தெரிகிறது?

சூரியனில் இருந்தோ அல்லது மின்குமிழில் இருந்தோ வரும் ஒளி வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால் பல நிறங்களை உள்ளடக்கியது. இதனை வானவில்லில் அவதானிக்கலாம். வாயுமண்டலத்தில் (ATMOSPHERE) கூடுதலான சதவிகிதம் (78 % நைற்றஜென், 21 % ஒக்சிஜென்) வாயுக்களும் மிகுதி நீராவியும் மாசுத்துணிக்கைகளும் உண்டு. அவற்றினூடே ஒளி பூமியை வந்தடைகிறது.

ஒளி அலைகள் வேறுபட்ட அலைநீளத்தை உடையவை. சிவப்பு நிறம் கூடிய அலை நீளம் கொண்டது. நீல நிறம் குறைந்த அலைநீளம் உடையது. கூடிய அலைநீளம் உடைய ஒளி அலைகள் வந்தடைகின்றன. குறுகிய அலைநீளம் உடைய நீல நிற ஒளி வாயுத் துணிக்கைகளால் உறிஞ்சப்படுகிறது. உறிஞ்சிய துணிக்கைகள் அதை கதிர்க்கின்றன. அவை தெறிப்பு அடைந்து நீல நிறமாக வானம் தோன்றுகிறது.

ஒளி காற்று மண்டலத்தில் இடையூறில்லாமல் பயணம் செய்தாலும் காற்றிலுள்ள அணு மூலக் கூறுகள் நீர்த்துளிகள் பனிமூட்டம் போன்றவை ஒளியைச் சிதறடிக்கின்றன. சிதறிய ஒளி மேலும் மேலும் சிதறடிக்கப்படுகிறது. இவ்வாறு நடைபெறும் போது மிக அதிகத் துடிப்புடைய நீல நிறம் மிக அதிகமாக சிதறடிக்கப்படுகிறது. (சிவப்பு மிகக்குறைவாக சிதறுகிறது.)

நாம் பார்க்கும் போது அவ் ஒளி அலைகள் கண்ணை வந்தடைகின்றன. அதனாலேயே பகலில் வானம் நீல நிறமாக இருப்பது போல தோன்றுகிறது. வானம் என்பது வெறுமனே வாயுத்துணிக்கைகள், மாசுக்களால், மேலே கூறப்பட்ட ஒளியால் ஆனதே தவிர அப்படி ஒன்று இல்லை என்பதே உண்மை. பௌதீக விதிப்படி ஒரு நிறத்தின் ஒளி அலைகளின் நீளம் அதிகமாக இருந்தால் அவை நம் பார்வைக்குக் கிடைக்காமலே போய்விடும்.

நீல நிறத்தின் ஒளி அலைகள் குறைவாக இருப்பதால் அது நம் கண்களுக்குள் மாட்டிக் கொள்கிறது. வானம் நீல நிறமாக இருப்பதால் அதை பிரதிபலிக்கும் கடலும் நீல நிறமாகவே இருக்கிறது. காலை மாலை சூரிய உதயம் அஸ்தமனத்தின் போது மட்டும் அந்தப்பகுதி சிவப்பாக தெரியக்காரணம். சூரியக்கதிர்களில் உள்ள சிவப்பு நிறத்தின் ஒளியலைகளின் நீளம் அப்போது மட்டும் குறைவதுதானாம்!

பூமியின் மேலுள்ள காற்று மண்டலம் தான் காரணம். சூரிய ஒளி அனைத்து வண்ணங்களையும் உள்ளடக்கியது. வானவில்லில் அது தன் தோகையை விரித்து ஏழு வர்ணங்களைக் காட்டுகிறதே அதனுள் மற்ற வர்ணங்களும் அடக்கம். அவை அனைத்தும் ஒளியே ஆயினும் வர்ண வேறுபாடுகளுக்கு காரணம் அந்த ஒளியின் அலைநீளம் மற்றும் துடிப்பு வானவில்லின் வண்ணங்களில் நீல நிறம் மிக அதிகத் துடிப்புடனும் சிவப்பு மிகக் குறைந்த துடிப்புடனும் இருப்பவை. நாம் 'பார்ப்பது' என்பது ஒளி நமது கண்ணில் வந்து படும்போது மட்டுமே. பார்க்கும் பொருட்கள் எல்லாமே அதில் பட்டு திரும்பும் ஒளி நமது கண்ணை வந்தடைவதால் தான் காற்று மண்டலத்தில் பலமாக சிதறடிக்கப்படும் நீல நிறமே மற்ற நிறங்களை விட பெருமளவில் நமது கண்ணில் வந்து விழுகிறது. ஆகவே தான் வானம் நீல நிறம். இரவில் நிலவின் ஒளி நட்சத்திரங்களின் ஒளி ஆகியவை பலம் குறைந்த ஒளியாக இருப்பதால் அந்த சிதறல்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. நேராக வரும் ஒளியை மட்டுமே நம்மால் பார்க்க முடிகிறது.



நேசராஜ்குமார் வித்தியாசாகர்
கிளி/கிளிநொச்சி ம.வி
கிளிநொச்சி.



தி.பவகிருஷ்ணா
தரம் 6A
யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

## கடல்களும் பரப்பளவுகளும்

| | | |
|---|---|---|
| 1. | தென் சீனக் கடல் | 29,64,615 ச.கி.மீ |
| 2. | கரீபியன் கடல் | 25,15,926 ச.கி.மீ |
| 3. | மத்திய தரைக் கடல் | 25,09,969 ச.கி.மீ |
| 4. | பேரிங் கடல் | 22,61,070 ச.கி.மீ |
| 5. | மெக்சிக்கோ வளைகுடா | 15,07,639 ச.கி.மீ |
| 6. | ஜப்பான் வளைகுடா | 10,12,949 ச.கி.மீ |
| 7. | ஒக்கோட்ஸ்க் கடல் | 13,92,125 ச.கி.மீ |
| 8. | ஹட்சன் வளைகுடா | 7,30,121 ச.கி.மீ |
| 9. | அந்தமான் கடல் | 5,64,879 ச.கி.மீ |
| 10. | கருங்கடல் | 5,07,899 ச.கி.மீ |
| 11. | செங்கடல் | 4,52,991 ச.கி.மீ |
| 12. | வடகடல் | 4,27,091 ச.கி.மீ |
| 13. | பால்டிக் கடல் | 3,82,025 ச.கி.மீ |
| 14. | கிழக்கு சீனக்கடல் | 12,52,180 ச.கி.மீ |
| 15. | கலி/போர்னியா வளைகுடா | 1,61,897 ச.கி.மீ |

## தத்துவக் கதை



ஒரு புகழ்பெற்ற துறவியை பணக்காரன் ஒருவன் சந்தித்தான். அவரிடம் "உங்களுடைய அன்றாடச் செயல்முறைகள் பற்றிக் கூறுங்கள்?" என்று கேட்டார்.

"அது ரொம்ப சாதாரணம். பசி வந்தால் சாப்பிடுவேன்; தூக்கம் வந்தால் தூங்குவேன் அவ்வளவு தான்." என்றார். குருவானவரின் வாழ்க்கை அனுபவத்தை கொண்டு பல காரியங்களைக் கற்றுக் கொள்ளலாம் என நினைத்த பணக்காரனும் அவனது நண்பர்களும் 'சப்' என்று போய்விட்டது.

"உங்கள் செயல்கள் அவ்வளவுதானா? அதில் தனித்தன்மை ஏதும் இருப்பதாக தெரியவில்லையே!" எல்லா மனிதர்களும் சாப்பிடுகிறோம்.. தூங்குகிறோம்... இதில் தனித்தன்மை என்ன இருக்கிறது?" எனக் கேட்டார் பணக்காரர்.

"உங்களுடைய செயல் முறையும் எனது செயல்முறையும் ஒன்றாகிவிடாது. நீங்கள் சாப்பிடும் போது உங்களுடைய வியாபாரத்தைப் பற்றி எண்ணமிடுவீர்கள். உறங்கும்போது கனவு காண்பீர்கள் அல்லது உறக்கம் பிடிக்காமல் தவிப்பீர்கள். நானோ உண்ணுகிற போது உணவில் மட்டுமே கவனமாயிருப்பேன். என்னால் சுவைத்து உண்ணமுடிகிறது. உறங்கும் போது எந்தக் கவலையும் இல்லாமல் அமைதியாய் உறங்க முடிகிறது. எதைச் செய்தாலும் அதுவாக மாறிவிடுவது என் இயல்பு" என்றார். எவ்வளவு பணம் சம்பாதித்தும் தன்னால் நினைத்ததை விரும்பி உண்ண முடியாத நிலை. பஞ்சு மெத்தையில் படுத்தும் தூக்கம் வராத நிலையை எண்ணி நொந்து போனான் பணக்காரன்.

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## வன்முறை தொடர்பான கொள்கையில் மாற்றம் செய்யப் போவதாக சூகி தெரிவிப்பு



வன்முறைக்கு எதிரான தனது கொள்கையில் சிறிது மாற்றம் செய்து கொள்ளப் போவதாக மியான்மர் நாட்டின் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவி ஆங் சான் சூகி தெரிவித்துள்ளார்.

மியான்மர் தலைநகர் நேப் இ டவ்வில் ரகசிய அறையில் இருந்து, லண்டன் பி.பி.சி., தொலைக்காட்சிக்கு ஆங் சான் சூகி அளித்த பேட்டியில், 'நான், சமுதாயத்தை ஒட்டிய நீதி தொடர்பான செயல்களுக்கு வன்முறையை கடைப் பிடிக்க மாட்டேன். ஆனால், அரசியலில், வன்முறைக்கு எதிரான எனது கொள்கையில் சிறிது மாற்றம் செய்து கொள்ள உள்ளேன்.

அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையில், நெல்சன் மண்டேலா தனது மன நிலையை மாற்றிக் கொண்டுள்ளார். வன்முறையற்ற கொள்கைக்கு தந்தை போன்றவர் மகாத்மா காந்தி. அவர் கூட கோழைத்தனமா? வன்முறையா? என்கிற போது, கண்டிப்பாக, வன்முறையைத் தான் தேர்வு செய்வார். அரபு நாடுகளில் பெரிய அளவில் இணைய வசதி இருப்பதால், ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டுள்ளனர். இதுபோன்று மியான்மரில் ஏற்பட வழியில்லை.

காரணம், மியான்மரில் இணைய வசதி இல்லை. உலக நாட்டு மக்களைப் போன்றே மியான்மர் மற்றும் டுனீஷியா நாட்டு மக்களும் சுதந்திரத்திற்காக காத்திருக்கின்றனர் என்றார்.

## 2012 இற்குள் படைகள் வாபஸ் பெறப்படும்

### ஒபாமா அறிவிப்பு



ஆப்கானிஸ்தானில் இருந்து 2012 ஆம் ஆண்டு கோடைகாலத்திற்கு முன்பாக அமெரிக்க படைகள் வாபஸ் பெறப்படும் என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார். வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு பேட்டியளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

படைகள் வாபஸ் பெறுவதை முன்னிட்டு இந்தாண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் போர்களை வாபஸ்பெறப்படும் என்றும் தொடர்ந்து மீதமுள்ள வீரர்கள் படிப்படியாக வாபஸ் பெறப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்.

## மக்களை மக்களே பாதுகாத்து கொள்ள புதிய திட்டம்

### பிரித்தானிய அரசு தீர்மானம்

பிரித்தானியாவில் திருடர்களிடமிருந்தும், கொள்ளையர்களிடமிருந்தும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் உரிமை வீட்டு உரிமையாளர்களுக்கும், கடை உரிமையாளர்களுக்கும் வழங்கப் படவுள்ளது.

மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள நியாயமான பலப்பிரயோகத்தை மேற்கொள்ளலாம்.தங்களுக்கோ தங்களது சொத்துக்களுக்கோ ஆபத்து ஏற்படுவதை மக்கள் உணர்ந்தால் அதைத் தடுக்க அவர்கள் நியாயமான பலத்தைப் பிரயோகிக்கலாம்.

முன்னர் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படுவதாகக் கருதினால் மட்டுமே பலத்தைப் பிரயோகிக்கலாம் என்ற நிலை இருந்தது.

பிரிட்டனில் பல்வேறு வகையான கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதையிட்டு மக்கள் வெளிக்காட்டிய ஆத்திரத்துக்கு பதில் அளிக்கும் வகையிலேயே அரசாங்கம் இந்தப் புதிய ஏற்பாடுகளை அறிமுகம் செய்யவுள்ளது.

பிரதமர் டேவிட் கமரூனால் சட்ட ஒழுங்கு விதிமுறைகளில் பல சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. சிறைத் தண்டனைகளை அரைவாசியாகக் குறைப்பது என்ற முன்னைய யோசனை தற்போது உத்தியோகபூர்வமாக கைவிடப்பட்டுள்ளது.

கத்திகளைப் பாவித்து செய்யப்படும் குற்றங்களுக்கான தண்டனைகளை அதிகரித்தல், மேலும் பல பாரிய குற்றங்களுக்கு ஆயுள் தண்டனையை அறிமுகம் செய்தல்,கைதிகள் சிறைக்குள் உழைக்கும் பணத்தை பாதிக்கப்பட்டவர்களின் நன்மைக்காக செலவிடல்,அரச காணிகளில் சட்டவிரோதமாகக் குடியமருதலை குற்றவியல் சட்டத்தின் கீழான குற்றமாகக் கருதுதல் என்பன அறிமுகம் செய்யப்படவுள்ள சில புதிய ஏற்பாடுகளாகும் என செய்தியாளர் சந்திப்பில் பிரதமர் இந்தத் திட்டங்களை வெளியிட்டார்.





அரிய வகையான சிவப்பு நிற கண்களையுடைய மரத்தவளையை மனாகுவாவில் விலங்கியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதனை இப்படத்தில் காணலாம்.

## ஆப்கானிஸ்தான் போர் ரகசியம் வெளியீடு

ஆப்கானிஸ்தான் போர் குறித்து 4 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ரகசியங்கள் அடங்கிய தகவல்களை கனடா வெளியிட்டுள்ளது.

இதில் ஆப்கானில் தலிபான்களுக்கு எதிரான போரில் சர்வதேச படைகள் நடந்து கொண்ட விதம் குறிப்பிடப்பட்டுள்ளதால் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் இத்தகவலை கனடாவின் எதிர்க்கட்சிகள் மறுத்துள்ளன. இத்தகவலை இப்போது வெளியிட்டதற்கு பதிலாக கடந்த ஆண்டு நடை பெற்ற பொதுத் தேர்தலின் போது ஏன் வெளியிடப்படவில்லை என்று கேள்வியையும் எழுப்பியுள்ளது.

## தந்தையர் தினப் பரிசாக சிறுநீரகத்தை வழங்கிய மகன்



தந்தையர் தின பரிசாக நோயால் பாதிக்கப்பட்ட தந்தைக்கு தனது சிறுநீரகத்தை மகன் தானமாக கொடுத்துள்ளார். இந்த அற்புதமான தந்தையர் தின பரிசு பிரித்தானியாவைச் சேர்ந்த க்ருய்க் ஷன்கிற்கு கிடைத்து உள்ளது.

67 வயதுடைய க்ருய்க் ஷன்கிற்கு முதல் வகை நீரிழிவு நோய் தாக்கம் ஏற்பட்டதால் 3 ஆண்டுகளாக டயாலிஸ் சிகிச்சைக்குட்பட்டு வருகின்றார். 2008 ஆம் ஆண்டில் அவரது ஒரு சிறுநீரகம் முற்றாக செயல் இழந்தது. இதனைத் தொடர்ந்து அவரது உடல் நிலையும் பாதிக்கத் தொடங்கியது.

இதனையடுத்து அவரது மகன் டானா க்ருய்க் ஷன்க் தனது சிறுநீரகங்களில் ஒன்றை தந்தைக்கு பரிசாக அளிக்க முன்வந்தார். கடந்த வாரம் டானா க்ருய்க் ஷன்க் மருத்துவமனையில் தனது சிறுநீரகத்தை அவரது தந்தைக்கு கொடுத்துள்ளார்.

இதேவேளை, மகன் வீட்டுக்கு அருகிலேயே இருந்து வாழ்நாள் முழுவதும் சேவை செய்ய வேண்டும் என தந்தை ஆர்தர் க்ருய்க் ஷன்க் நெகிழ்வுடன் தெரிவித்தார்.

## வளர்த்த பாம்பை தீண்ட வைத்து தற்கொலை: நியூயோர்க்கில் சம்பவம்



தான் வளர்த்த பாம்பை தன்னையே கடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார் ஒரு பெண். நியூயோர்க்கைச் சேர்ந்த 56 வயதான அலேடா ஸ்டெசி என்ற பெண்ணே அண்மையில் இவ்வாறு தனது முடிவைத் தேடிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரை பாம்பு தற்செயலாகக் கடித்திருக்கலாம் என்று தான் பொலிஸார் ஆரம்பத்தில் நம்பினர்.

ஆனால் இவரது வீட்டை சோதனையிட்டபோது அங்கு 75 பாம்புகள் காணப்பட்டன. இதில் பிளக்மெம்பா என்ற வகைப் பாம்பே இவரைத் தீண்டியுள்ளது.

இந்தப் பாம்பு தீண்டினால் அதன் விஷம் உடலில் ஏற 20 நிமிடங்கள் செல்லும். அதற்குள் ஒருவரைக் காப்பாற்றி விடவும் முடியும்.

ஆனால் இந்தப் பெண், பாம்பு தீண்டிய பிறகும் எந்த விதமான உதவிகளையும் கோரவில்லை. மேலும் இவர் அண்மைய நாட்களில் மிகவும் விரக்தியுடன் வாழ்ந்ததாக அவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவர் பாம்பைத் தீண்ட விட்டுத் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் நம்புகின்றனர்.

# இசையோடு இணைந்த இணுவையம்பதியின் வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாக 'காரைகால் விஸ்வநாதா போற்றி' இறுவட்டு அமைகின்றது

**- ஆறு. திருமுருகன்**

தெல்லிப்பழை ,

இசையோடு இணைந்த ஊர் இணுவையம்பதி. இம் மண்ணில் புகழ்பூத்த இசைக் கலைஞர்கள் பாவலர்கள், கவிஞர்கள், பல்வேறு துறை சார்ந்தோர் வாழ்ந்த மண்ணாகும். இத்தகைய இசை மண்ணின் வரலாற்று நிகழ்வாக இணுவில் கந்தசுவாமி கோவல் காரைக்கால் விஸ்வநாதா போற்றி எனும் பக்தி பாமாலை இறுவட்டு தென்னிந்தியப் பாடகர்களால் பாடப்பட்டு இசையமைக்கப்பட்டு வெளியிடுகின்றது.

இந்நிகழ்வின் ஊடாக மண்ணினுடைய புகழ் மேலும் உயர்ந்து செல்கின்றது என துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிஅதிபருமான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

இணுவில் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற தயாரிப்பாளர் உமா சதீஸின் தயாரிப்பில் உருவாகிய தென்னிந்திய பின்னணிப் பாடகர்களான எஸ்.பி. பாலசுப்பிரமணியம், நித்தியஸ்ரீ, முகேஸ் ஆகியோரால் பாடப்பட்டு தென்னிந்திய இசையமைப்பாளர் அக்கினியால் இசையமைக்கப்பட்ட காரைக்கால் விஸ்வநாதா போற்றி இசைப் பாமாலை வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணுவையம்பதி யாழ். பாடி பரிசு பெற்ற யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளமை சிறப்புப்பெறுகின்றது. இணுவிலில் இசைக்குப் பஞ்சமில்லை. பண்டிதர்கள் , கலைஞர்கள், சமயப் பெரியோர்கள் , பாவலர்கள் பிறந்த மண. தமிழ் வேந்தர்களால் ஆட்சிசெய்யப்பட்ட புண்ணிய பூமி. இப்பூமியில் அமைந்துள்ள இணுவில் காரைக்கால் சிவன் ஆலயத்தின் கும்பாபிஷேக இறுதி நன்னாளில் இவ்விழா அமைகின்றமை விழாவிற்குப் பெருமை சேர்க்கின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக சிவன் புகழ்பாடும் இசைப்பேழை வெளியீடு செய்யப்படுகின்றது. இந்த இறைவன் புகழ்பாடும் இறுவட்டினை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தென்னிந்திய பிரபல கலைஞர்களால் போற்றப்படும் வீரமணி ஐயர் பிறந்த மண். அவரது 'கற்பக வல்லியின் .....' என்ற பாடலைப் பாடி தென்னிந்திய கலைஞர்கள் புகழ் பெற்றுள்ளார்கள். இப்பாடலை ரி.எம். சௌந்தரராஜன் பாடி புகழ் ஈட்டியுள்ளார். புகழ்பெற்ற தமிழ்க் கலைஞர் தட்சணாமூர்த்தி கலை நிகழ்வை நடத்திய இடமாக விளங்குகின்றது.

சிறையில் இருந்தவேளை சிவகாமி அன்னையைப் பாடி அருள் பெற்று சிறை மீண்ட வரலாறு நாம் அறிந்ததே. காரைக்கால் சிவனின் பெருமை கருவறையில் முகவுரையைக் கொண்ட கோவில் சித்தர்கள் புண்ணியவான்கள் வாழ்ந்த புனித கோயில். இதன் புகழ் இறுவட்டு வடிவில் வெளிவருவது காலத்தின் தேவையாகும். காலத்தின் தேவை கருதி வெளிவந்த பாடல் வெளியீட்டில் முகேஷ் மற்றும் அக்கினி கலந்துகொண்டமை சிறப்பு அம்சமாக விளங்குகின்றது.

கலை நிறைந்த பதியில் பிறந்தவர்களை மதுரகவி சதீஸ் போன்றோரது பாடல் வரிகள் இவ் இறுவட்டு உள்ளடக்கியுள்ளது. இதன் இசையமைப்பாளர் அக்கினியினுடைய பெயரிலே பல்வேறு அர்த்தம் பொதிந்துள்ளது. அக்கினி என்பது நெருப்பு வெளிச்சம். அக்கினி புராணம் என எமது சமயத்தில் புராணம் உண்டு. அப்துல் கலாம் அனுப்பி விண்கலம் அக்கினி. ஆதலால், இப்பெயரில் புகழின் உச்சியை இசையமைப்பாளர் அடைவார் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. அவர் மென்மேலும் வளர இறைவனை பிரார்த்திப்போம்.

ஆன்றோர்கள், சான்றோர்கள் , கலைஞர்கள், அந்தணப் பெரியோர்கள் முன்னிலையிலும் ஆசியிலும் இவ் இறுவட்டு வெளியிட்டு வைப்பதில் மன மகிழ்ச்சியடைகின்றேன் எனத்தெரிவித்தார்.

## உப-தபால் நிலையம் இட மாற்றம்

வடமராட்சி,

புலோலி உப-தபால் நிலையம் மந்திகையிலுள்ள ஆஸ்பத்திரி வீதிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் மந்திகையில் பொதுச் சந்தைக்கு அருகில் சாவகச்சேரி வீதியில் புலோலி உப- தபால் நிலையம் இயங்கிவந்தது.

தற்போது மந்திகையில் ஆஸ்பத்திரி வீதியின் பருத்தித்துறை அரசினா் ஆதார வைத்தியசாலைக்கு எதிர்ப்புறத்திலுள்ள கட்டடத்திற்கு புலோலி உப-தபால் நிலையம் இடமாற்றப்பட்டு இயங்கிவருவதாக உப- தபாலதிபர் திருமதி. கௌரி சாந்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

## படகுக் கட்டணத்தை அதிகரிக்க வலியுறுத்து

(நெடுந்தீவு நிருபர்)

நயினாதீவு - குறிகாட்டுவான் சேவையிலுள்ள பயணிகள் படகுகள் பயணிகளுக்கான கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. அதன்படி தற்சமயம் ஒரு பயணிக்கு கட்டணமாக அறவிடப்படும் ரூபா 20 ஐ ரூபா 30 ஆக அதிகரிக்கவேண்டும் என நயினாதீவு உற்சவம் தொடர்பான கலந்துரையாடலின்போது வலியுறுத்தப்பட்டது.

கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்த வேலணை பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் அங்கு கூடியிருந்த ஏனையோரிடம் இது பற்றிக் கேட்டபோது, பெரும்பாலானவர்கள் கட்டண அதிகரிப்பை விரும்பவில்லை எனக் கூறப்பட்டது.

எனினும், கட்டண அதிகரிப்பு இடம் பெறாத பட்சத்தில் படகுச் சேவைகளைப் பகிஷ்கரிக்கப்போவதாக படகு உரிமையாளர்கள் ஒட்டுமொத்தமாகத் தெரிவித்ததையடுத்து இதுவிடயம் யாழ். அரச அதிபரின் முடிவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.


## தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பாடசாலைகளில் செயற்றிட்டங்கள்

ஏழாலை,

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பாடசாலைகளில் செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் பாடசாலைகளுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்காத வகையில் வேலைத்திட்டங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன் நடத்துவதுடன், 28 ஆம் திகதி முன் அவ் வேலைகள் தொடர்பான அறிக்கையினை வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் ஜூன் 20 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையும் அமுல்படுத்தப்பட்டு நாடுபூராகவும் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## கேட்டியளே சங்கதி

இப்பவெல்லாம் பாருங்கோ....... கோவில் திருவிழாக்களில் கடவுள்கள் வீதி உலா வரும்போது நாதஸ்வரக்காரர்கள் சினிமாப் பாட்டுத்தான் வாசிக்கினம் பாருங்கோ..... பக்தியோடு தெய்வத்தை கொண்டுவரக்கே நாதஸ்வரக்காரரும் மேளக்காரரும் சினிமாப் பாட்டை வாசித்தால் எங்கட இளசுகளின்ர மனசில பக்தி வருமா? இப்பத்த சினிமாப் பாட்டுக்களை வாசிக்க எங்கட பெடி பெட்டையளுக்கு எண்ணத்தில வாறது அந்த பாட்டு காட்சிதான் பாருங்கோ.....

போன கிழமை எங்க வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற அம்மன் கோயில்ல திருவிழா. திருவிழாவின் 10 நாளும் அம்மன் இரவு 7 மணிக்கு ஆலய வீதி உலா வருவாள். கோயில சுற்றி வரும் போது வாசிக்கிற பாட்டு முழுக்க சினிமாப் பாட்டுத்தான் .அப்ப எங்கட இளசுகள் இந்த பாட்டு எந்த படத்தில ......? யார் பாடினது.....? இதில் நடிச்சது தனுஷோ? சூரியாவோ....? தமன்னாவோ? என்ற ஆராய்ச்சியைத்தான் நடத்துகினம் பாருங்கோ. பெரிசுகள் தங்கட பாட்டுக்கு தேரை இழுப்பதிலும் நேற்று அவையளின்ர திருவிழாவுக்கு வாசித்த பாட்டை விட லேட்டஷா வந்த புதுப்பட பாட்டத்தான் இன்றைக்கு வாசிக்க வேணும் என்ற கட்டளைகளை வாத்தியக்காரரிட்ட சொல்லுவதில்தான் மும்முரமாக இருப்பினம். அவயளிட்டயும் பக்தி இருக்காது பாருங்கோ....



ஆகப் பழசுகள் தான் தங்கட பாட்டுக்கு அரோகரா ....! அரோகரா...! எண்டு சொல்லிக்கொண்டு போவினம்.

முந்தியெல்லாம் தெய்வங்கள் வீதி உலாவரும் போது நல்ல தேவாரங்களும், பஜனைகளும், திருவாசகங்களும் தான் பாடப்பட்டுவரும். வாத்தியக்காரர்களும் நல்ல பக்திப் பாடல்களைப் பாடுவினம். அதையெல்லாம் கேட்கும் போது எங்களை அறியாமலே கைகள் கடவுளை நோக்கிக் கும்பிடும் இந்தக்காலத்தில இந்த காட்சிகளை மருந்துக்கும் காணேலாது பாருங்கோ....

இப்பெல்லாம் "துளித்துளிமழையாய் வந்தாளே.....". "ராக்கம்மா ராக்கு... ராக்கு....", "சிங்கு சிக்கா சிங்கு சிக்கா..." என்ற பாட்டுக்கள் வாசித்தால் தான் கடவுள்கள் வார தேரே உருளுது பாருங்கோ.... தெய்வங்களை புகழ்ந்து பாடுவதற்கு கலாசார முறைப்படி எங்கட சனம் மேள தாளங்களை பயன்படுத்துவது வழமைதான். அப்படி இசையின் மூலம் கடவுள்களை பாடிப் புகழும் போது எங்கட மனசுகளிலும் நல்ல எண்ணங்களும் தெய்வத்தின் பாலுள்ள பக்தியின் நினைப்பும் எல்லே வரவேணுமே தவிர... சினிமா படங்களின் காட்சிகள் மனத்திரையில ஒடக்கூடாது பாருங்கோ....

இன்னுமொரு சங்கதி கேட்டியளே..... ஒரு மாவட்டத்தின்ர இராணுவத் தலைவருக்குக் கூட தெரியாமலே - அடங்காமலே அவரின்ர படைகளில் ஒரு கும்பல் இயங்குதாம்.... இதையும் எங்கட சனமும் நம்பித்தான் ஆகனும் பாருங்கோ.....

# ஆதரவற்ற குடும்பங்களுக்கு உதவிவரும் படைத்தரப்பு





532 ஆவது பிரிகேட் படைப்பிரிவின் 7 ஆவது விஜயபாகு படையணியின் பொறுப்பதிகாரி லெப்டினட் கேணல் டிலிப் பண்டார மற்றும் சிவில் நிர்வாக பொறுப்பதிகாரி லெப்டினட் கேணல் அர்சன அபயவர்த்தன மற்றும் படையதிகாரிகளுடன் வீட்டுத்தோட்ட பயனாளி குடும்பம் ஒன்று நிற்பதைப் படத்தில் காணலாம்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் எவரின் உதவிகளும் அற்றநிலையில் வாழும் குடும்பங்கள் போன்றவற்றைத் தெரிவு செய்து யாழ். மாவட்ட படையினர் பல உதவிகளைச் செய்து வருகின்றனர்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹிந்துறுசிங்கவின் விசேட வழிகாட்டலில் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரிகேட்டின் கீழுள்ள பகுதிகளிலிருந்தும் 250 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு விவசாய செய்கைக்கான உதவிகள், வீடு அமைத்தல் போன்ற உதவிகளை படையினர் வழங்கி வருகின்றனர்.

532 ஆம் பிரிகேட் படைப்பிரிவின் கீழுள்ள 7 ஆம் விஜபாகு றெஜிமெண்ட் படைப்பிரிவினர் ஏ.பி.சீ.டி. என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவுகளிலும் உள்ள படையினர், வீடுகள் அமைத்தல், துப்பரவு செய்தல் மற்றும் விவசாய உதவிகளை செய்தல் அவற்றைப் பராமரித்தல் போன்றவற்றை பயனாளிகளுடன் இணைந்து செய்து வருகின்றனர்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேசத்தில் 532 ஆவது பிரிகேட் படைப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிகளைப் பெற்று பயனடைந்து வருவோரை அண்மையில் சென்று பார்வையிட்டோம்.

தென்மராட்சி கைதடி மேற்கு கல்லாகம் கிராமவாசியான கே. குமாரசாமி என்பவர் கருத்து தெரிவிக்யையில், நானும் எனது மனைவி இரண்டு பிள்ளைகளும் எதுவித

> **அரச சார்பற்ற நிறுவனங்கள் தோட்டத்திற்கான உபகரண உதவிகளை மட்டும் செய்வார்கள். ஆனால் இராணுவத்தினர் தோட்டதில் மண்ணைக் கொத்துவதிலும் தண்ணீர் கட்டுவதிலும் மருந்தடிப்பதிலும் முழு ஈடுபாட்டோடு என்னுடன் சேர்ந்து செய்கிறார்கள்**

பிற உதவிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து வந்தோம். கூலி வேலை செய்து எனது குடும்பத்தை பராமரித்து வந்தேன். இந்த வேளையில் தான் இங்கு வந்த இராணுவத்தினர் எமது குடும்ப நிலைகளை கேட்டறிந்து, தோட்ட வேலை செய்வதற்கு உதவி செய்தால் உங்களால் முன்னேற முடியுமா எனக் கேட்டனர். எனக்கு இவர்களைக் கண்டதும் முதலில் பயமாகவே இருந்தது. எனினும் இவர்களது உதவிகளை நான் மறுக்கவில்லை. அவர்களுடன் இணைந்து வீட்டுத் தோட்டத்திற்கான ஆயத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு போன்றவற்றை படிப்படியாக செய்தேன். இவர்கள் எனக்கு முழு ஒத்துழைப்பும் தருவதால் இன்று எனது அத்தியவசிய தேவைகளை நிறைவேற்றக்கூடியதாகவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தோட்டத்திற்கான உபகரண உதவிகளை மட்டும் செய்வார்கள். ஆனால் இராணுவத்தினர் தோட்டத்தில் மண்ணைக் கொத்துவதிலும் தண்ணீர் கட்டுவதிலும் மருந்தடிப்பதிலும் முழு ஈடுபாட்டோடு என்னுடன் சேர்ந்து செய்கிறார்கள். என மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

நுணாவில் மட்டுவிலைச் சேர்ந்த கனகராசா பரமேஸ்வரி (வயது66). இவர் தனது மகனுடன் வாழ்ந்து வருகின்றார். சொந்த காணி எதுவும் இல்லாததால் அயலவரின் கணியில் சிறிய குடிசை அமைத்து வாழ்ந்து வந்தார்.

தற்போது இவர்களுக்காக மருதடி பிள்ளையார் கோவில் வளவில் ஆலய நிர்வாகத்தினர் அனுமதியுடன் இராணுவத்தினர் கல் வீடொன்றினை கட்டி வருகிறார்கள். இந்த குடும்பத்தில் ஒருவர் தடுப்பு முகாமில் இருந்து அண்மையிலே குடும்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்களுக்கான உதவியையும் இராணுவத்தினர் செய்து வருகின்றனர். சிறிய குடிசையில் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வந்த நாம் இன்று சந்தோஷமாக வாழ்வதற்கு இராணுவத்தினர் எமக்கு உதவிகளை செய்து வந்துள்ளார்கள் என தெரிவிக்கின்றார்கள்.

எம்.நியூட்டனி

# பலாங்கொடை பிரதேசத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும்

## நகர சபையின் ஐ. தே. க. உறுப்பினர் மலிக்ஷா

பலாங்கொடை,

பலாங்கொடை நகர சபை எல்லைக் குட்பட்ட பல பிரதேசங்களில் குடிநீர் பிரச்சினை நிலவி வருகின்றது. சில பகுதி களில் ஒரு நாள் விட்டு ஒரு நாளைக்கே நீர் விநியோகிக்கப்படுகின்றது. அதுவும் ஒரு சில மணி நேரத்திற்கு மாத்திரமே இடம்பெறுகின்றது. இதனால் மக்கள் பெரிதும் அல்லல்பட வேண்டியுள்ளது. எனவே இப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என பலாங் கொடை நகர சபையின் ஐ. தே. க. உறுப் பினர் எம். ஜே. மலிக்ஷா வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் நடைபெற்ற பலாங் கொடை நகர சபையின் மாதாந்தக் கூட் டத் தொடரில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைக் கூறி னார். நகர சபையின் தலைவர் நிமல் கா மினி வீரசிங்க தலைமையில் நடைபெற்ற மேற்படிக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரை யாற்றுகையில், பலாங்கொடைப் பிரதே சத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பெருமளவு நிதி தேவை. அதனை எமது நகர சபையால் தீர்க்க முடியாது என்பதை நான் அறிவேன். எனினும் தீர்க்கப்பட வேண்டிய இப்பிரச்சினைக்கு எமது மாகாண சபை அல்லது அரசாங்கத்திடம் உதவி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்பதையே நான் கேட்கிறேன் என்றார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய நகர சபை முதல்வர் நிமல் காமினி வீரசிங்க கூறுகையில்,

நகர சபை உறுப்பினர் கூறிய நீர் பிரச் சினை உண்மைதான். மிக நீண்ட கால மாக இருந்து வரும் இப்பிரச்சினையைத் தீர்க்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின் றோம்.

பலாங்கொடைப் பிரதேச குடிநீர்ப் பிரச் சினையைத் தீர்ப்பதற்காக சுமார் 83 கோடி ரூபாய்களை பெல்ஜியம் நாடு தந்துதவ முன்வந்துள்ளது. இந்நிதியினைக் கொண்டு எமது பிரதேச குடிநீர் பிரச் சினையை வெகுவிரைவில் தீர்ப்போம். துரிதகதியில் இதற்கான திட்டத்தை நடை முறைப்படுத்த உள்ளோம்.

## தென் மாகாண எழுத்தாக்கப்போட்டி

தெனியாய,

தென் மாகாண தமிழ் மொழித்தினப் போட்டியின் மாகாண மட்ட எழுத்தாக் கப் போட்டிகளை எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி மாவட்ட ரீதியான மத்திய நிலையங்களில் நடத்துவதற் கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள தாக தென் மாகாண பிரதிக் கல் விப்பணிப்பாளர் ஏ.எம்.எப் மதனியா கலீல் தெரிவித்தார். ஏனைய போட்டி கள் அனைத்தும் ஜூலை மாதம் 07ஆம், 08ஆம் திகதிகளில் அம்பாந்தோட்டை கிரிந்த முஸ்லிம் மகா வித்தியாலயத் தில் நடைபெறவுள்ளது.

# பிரஜாசக்தி நிலையம் மூடப்பட்டமைக்கு அவுப்பே தோட்ட மக்கள் கவலை

இறக்குவானை,

காவத்தை அவுப்பே தோட்டத்தில் இயங்கி வந்த தொண்டமான் பிரஜாசக்தி நிலையத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறித்து மேற்படி தோட்ட மக்கள் பெரிதும் கவலை தெரி வித்துள்ளனர். இந்த பிரஜாசக்தி நிலையத் தில் 100 க்கும் அதிகமான மாணவர்கள் கணனி கல்வி கற்று வந்ததாகவும், குறிப் பாக தமிழ் சிங்கள மாணவர்கள் இதன் மூலம் நன்மையடைந்ததாகவும் இப்பகுதி பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

காவத்தை அவுப்பே தோட்டத்தின் ஐந்து பிரிவுகளிலும் உள்ள தொழிலாளர்க ளின் பிள்ளைகள் மேற்படி பிரஜா சக்தி நிலையத்தில் கல்வி கற்று வந்ததுடன் தற்போது பிள்ளைகளின் கல்வி நிலை முன்னேற்றமடைந்துள்ளதாகவும் பெற் றோர் குறிப்பிடுகின்றனர்.

இத்தோட்டத்தில் உள்ள இரண்டு தமிழ் பாடசாலைகளின் மாணவர்கள் கணனி கல்வியை இங்கே கற்றனர். எனவே மா ணவர்களின் நலன் கருதி காவத்தை அவுப்பே தோட்டத்தில் இயங்கி வரும் பிரஜாசக்தி நிலையத்தை மீண்டும் திறக் குமாறும் இது தொடர்பாக இ.தொ.கா செயலாளரும் அமைச்சருமான ஆறுமு கன் தொண்டமான் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப் படுகின்றது.

# கோட்டக்கல்வி அதிகாரி பதவி வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை

மாவடிப்பள்ளி,

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள கோட்டக்கல்வி அதிகாரி பதவிக ளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தற் போது சேவையிலுள்ள தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வின் செயலாளர் எச்.ஈ.டப்ளியூ. ஜி. திசா நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி திருகோணமலை கல்வி வல யத்தின் குச்சவெளி மற்றும் பதவிஸ்ரீபுர திருகோணமலை வடக்கு கல்வி வலயத் தின் மொறவேவ கிண்ணியா கல்வி வல யத்தின் குறிஞ்சக்கேணி மூதூர் கல்வி வலயத்தின் ஈச்சிலம் பற்று, கல்குடா கல்வி வலயத்தின் கோரளைப்பற்று கோர ளைப்பற்று வடக்கு மற்றும் ஏறாவூர் பற்று 02 மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கோரளைப்பற்று மேற்கு மட்டக்களப்பு கல்வி வலயத்தின் மண்மு னைப் பற்று, ஏறாவூர் பற்று 01 மற்றும் மண்முனை மேற்கு பட்டிருப்பு கல்வி வலயத்தின் மண்முனை தெற்கு, அம் பாறை கல்வி வலயத்தின் அம்பாறை மற் றும் தமன சம்மாந்துறை கல்வி வலயத் தின் இறக்காமம் கல்முனை கல்வி வல யத்தின் கல்முனை ( தமிழ் மொழி மூலம்) நிந்தவூர் மற்றும் காரைதீவு, மகா ஓயா கல்வி வலயத்தின் மகா ஓயா ஆகிய பிரதேசங்களிலுள்ள கோட்டக்கல்வி அதி காரிகளுக்கான வெற்றிடமாகவுள்ள பதவி களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 57 வயதுக்கு மேற் படாதவாறு இருப்பதோடு பொதுச் சேவை ஆணைக்குழு அல்லது கல்விச் செயலாளரினால் நிரந்தர நியமனக்கடிதம் வழங்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு III அல்லது இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இல் உத்தியோ கத்தராக இருத்தல் வேண்டும்.

இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர் கள் இல்லாத போதே இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இல் உள்ள உத்தியோ கத்தர்கள் நியமிப்பது கவனத்தில் கொள் ளப்படும்.

மேலும் தமிழ் மொழி மூல உத்தியோகத் தர்கள் சிங்கள மொழியிலும், சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருப்பதோடு ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக் கும் உத்தியோகத்தர் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதோடு நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்ற கூடியவராக இருத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை மூலம் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படு வதோடு தகுதியான உத்தியோகத்தர் களை தெரிவு செய்யும்போது மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதா கும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்ப டிவங்களை செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகா ணம், 198 உட்துறை முக வீதி, திருகோ ணமலை எனும் முகவரிக்கு 15.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டுமென கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## மடம் திறப்பு விழா

காரைதீவு,

உகந்தை ஸ்ரீ முருகனாலயத்தில் விஸ்த ரிப்புச் செய்யப்பட்டுள்ள யாத்திரிகர் மடத்திறப்பு விழா எதிர்வரும் 01 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக காரைதீவு உகந்தை யாத்திரிகர் சங்கச் செயலாளர் வீரக்குட்டி பத்மநாதன் தெரிவித்தார்.

கதிர்காமத்திற்கு கால் நடையாக செல்வோருக்கு உகந்தைக்குச் செல்வோ ரும் இம்மடத்திலேயே தங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. காரைதீவு உகந்தையாத்திரிகர்கள் சங்கம் எடுத்த பெருமுயற்சியின் பலனாக அங்கத்தவர்க ளின் ஒத்துழைப்புடன் மடம் விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

# மாகாண மட்டப்போட்டியில் கார்மேல் பற்றிமா முன்னிலையில்

மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் கல் முனை கல்வி வலயத்தை சேர்ந்த கார் மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்கள் 09 (ஒன்பது) போட்டிகளில் முதல் இடத்தினை பெற்றுள்ளதாக கல் முனை கல்வி வலய தமிழ் மொழிப்பாட ஆசிரிய ஆலோசகர் கலாநிதி கே. வர தராஜன் தெரிவித்தார்.

இம்முறை மாகாண மட்டத்தில் நடந்த தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை யைச் சேர்ந்த மாணவர்கள் 09 முதல் இடங்களையும் நான்கு இரண்டா வது இடங்களையும் மூன்று மூன்றாவது இடங்களையும் பெற்று மாகாண மட்ட த்தில் முன்னிலையில் திகழ்கிறது.

# சிங்களம் கற்போம்

**இவ்வாரமும் உறவினர்களிடையே நடை பெறும் கலந்துரையாடல் சில**

நான் போகிறேன்.
மம யனவா

நீங்கள் எங்கே போகிறீர்கள்?
ஒயா கொஹெத யன்னே?

நான் வைத்தியசாலைக்குப் போகிறேன்.
மம ஸ்பிரித்தாலயட யனவா

என்ன ஆனது?
மொனவத உனே?

ஒன்றும் இல்லை
மொனவத் நே

உங்களால் என்ன செய்ய முடியும்
ஒயாட மொனவத கரன்ன புலுவன்

எனக்கு நன்றாக விளையாட முடியும்
மட ஹொதட செல்லங்கரன்ட புலுவன்

என்ன விளையாட்டு?
மொன செல்லம்த?

எல்லா விளையாட்டும் முடியும்
ஒன செல்லம் புலுவன்

கிரிக்கெட் முடியுமா?
கிரிக்கெட் புலு வன்த?

ஆம் விளையாடுவேன்
ஒவ் செல்லன் புலுவன்

யார் விகாரைக்கு வருவது?
கவுத பன்சலட என்னே?

நாங்கள் வருகின்றோம்
அப்பி எனவா?

எந்த பாதையில் போவது?
கொய் பாரேத யன்னே
இந்தப் பாதையில் தான்
மே பாரே தமாயி

எங்கே அப்பா?
கோ தாத்தா?

அப்பா கண்டி நகரத்துக்கு போனார்
தாத்தா நுவர டவுமட கியா

அப்பா மட்டும் தானா?
தாத்தா வித்தராய்த?

நீங்கள் போகவில்லையா?
ஒயா கிய நெத்த?

யார் அங்கே?
அரஹே கவுத?

அது எங்கள் மாமா
எயாஅப்பே மாமா

சிறிய வாகனம்
பொடி வாகனே

இன்று அருமையான நாள்
அத ஹொத தவசாக்

நேற்றும் நல்ல நாள் தானே
ஈயத் ஹொத தசாக்னே

இன்று உங்கள் மகன் போக வில்லையா?
அத ஒயாகே புதா கியநெத்த?

அவர் போனார்
எயா கியா

அப்படியா? ஆம்
எமத ஒவ்

நீங்கள் என்ன செய்கின்றீர்?
ஒயா மொனவத கரன்னே?

நான் அவரோடு வருகின்றேன்
மம எயாத்தெக்க என்னாம்

ஏன் தனியாக வர முடியாதா?
அய் தனியே என்ட பெரித?

**மீண்டும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்**

**●வேலு. ஜீவராஜா**

# SPOKEN ENGLISH

## A dialogue between Ajantha & Geetha

A:- Hello Geetha ! How do you do?
ஹலோ கீதா, எப்படி இருக்கிறீர்?

G:- Hello Ajantha ! very glad to meet you.
ஹலோ அஜந்தா சந்தித்ததில் மகிழ்ச்சி.

A:- I heard the other day that you have just completed your Degree
நான் அறிந்தேன் நீங்கள் உங்களுடைய பட்டப்படிப்பை முடித்திருக்கிறீர்கள் என்று.

G:-Of course. I have. what are you doing now?
ஆம், முடித்திருக்கிறேன். நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

A:- I am doing my Diploma in English and hope to complete it by the end of next year.
நான் ஆங்கில டிப்ளோமா செய்கிறேன் அடுத்த வருட இறுதியில் பூரணப்படுத்துவேன்.

G:-That's good Haven't you applied for any jobs?
நல்லது, வேறு ஏதாவது வேலைக்கு விண்ணப்பிக்கவில்லையா?

A:-Well I have been applying for some time
வேலைக்கு விண்ணப்பித்தவாறு உள்ளேன்.

G:- Ajantha ! now also we are studing but our situation is very interrupting isn't it?
அஜந்தா, நாம் இப்ப கூட படித்துக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் நிலமை தொந்தரவா கவுள்ளது இல்லையா?

A:- What do you say?
என்ன சொல்லுகிறீர்கள்?

G:- Sound problem
இரைச்சல் பிரச்சினை

A:- Yes, many cities face this
ஆம், பல நகரங்களில் இவ்வாறுதான்.

G:- What about in your village side?
கிராமங்களில் எப்படி?

A:-I can't say do in their celebrations temple festivals are making a lot
என்னால் விபரிக்க முடியாது, தங்களுடைய கொண்டாட்டங்கள், கோயில் திருவிழாக்கள்.

G:-What do you say? temples?
என்ன சொல்லுகிறீர்கள். ஆலயங்களுமா?

A:-Why not. they use loudspeakers inthe early morning too.
ஏன் இல்லை. அதிகாலையிலேயே ஒலிபெருக்கியை முடுக்கிவிடுவார்கள்.

G:- Can't you stop that?
உங்களால் தடுக்கமுடியாதா?

A:- No, we can't when we ask for that we want to face a lot
இல்லை எங்களால் முடியாது நாம் ஏதும் கேட்டால் நிறைய முகங்கொடுக்க வேண்டும்.

G:-Why, can't you inform to the Authorities
ஏன் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கமுடியாதா?

A:- Yes, we can but..
ஆம் எங்களால் முடியும் ஆனால்....

G:- Tell Don't hesitate
சொல்லுங்கள் தயங்கவேண்டாம்.

A:-No, you well know this
இல்லை உங்களுக்கு நன்றாக இதைப் பற்றி தெரியும்.

G:-Ok, every one wants to think
சரி, ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

A:- Of course, many heart patients, and students are facing this Problem.
ஆம், நிறைய இதய் நோயாளிகள், மாணவர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

G:- Oh yes, sound is also polluting the environment.
ஆம், சத்தம் சுற்றுச் சூழலையும் மாசுபடுத்துகிறது.

A:-Yes, this is major problem in jaffna
ஆம், யாழ்ப்பாணத்தில் இது மிகப்பெரிய பிரச்சனை.

G:- All of us want to solve this
நாம் எல்லோரும் இதனை சிந்திக்கவேண்டும்.

A:- Who will support us?
யார் எங்களுக்கு உதவுவார்கள்?

G:-When we make an awareness we can change
நாம் விழிப்புணர்வை ஏற்படுத்தினால் மாற்றமுடியும்.

A:- Yes, we shall do something.
ஆம். நாம் ஏதாவது செய்வோம்.

G:-Ok. wish you all the best
சரி, எல்லாம் நன்றாக நடக்கட்டும்.

A:- Thank you.
நன்றி.

**S.Uthayabalan (M.A)**



அளவெட்டி சம்பவம்

# தேர்தல் வன்முறைகளுக்கு ஆயத்த மணியா?

யாழ். குடாநாட்டில் மீண்டும் இராணுவப்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. மறுபுறத்தே இராணுவப்பதிவுகள் இடைநிறுத்தப்படுவதாக, யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி நாலாவது தடவையாக மீண்டும் உறுதி கூறியிருக்கிறார். ஆனாலும் எந்த மாற்றமுமின்றி , இராணுவப்பதிவுகள் தொடர்கின்றது. வீடுவீடாக படையினர் தொடர்ந்தும் படையெடுத்து வந்த வண்ணமேயுள்ளனர்.

இதேவேளை வடக்கில் உள்ளூராட்சி சபை தேர்தல் களமும் சூடுபிடிக்கத்தொடங்கிவிட்டது. அளவெட்டியில் தமிழ்தேசியக்கூட்டமைப்பினரது வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மீதான தாக்குதலுடன் அது வேகம் பிடிக்கத் தொடங்கியுள்ளது. வழமைபோலவே, தாக்குதல் நடத்தியவர்கள் யாரென்பது பற்றி அடையாளங்காணமுடியாதிருப்பதாக, யாழ். படைத்தலைமை கூறுகின்றது.

கட்டளைத்தளபதி ஹந்துருசிங்கவோ படையினருக்குள்ளும் எதிரிகள் இருப்பதாகவும் புனர்வாழ்வு பெற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பதாகவும், அவர்கள் கூட தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்கின்றார். அவரே வேறு சில ஆயுதக்குழுக்களும் இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடுகின்றார். அண்மையில் ஊர்காவற்துறையில் வீடொன்றில் ஆயுதம் மீட்கப்பட்டதை அவர் சாட்சிக்கு கூப்பிடுகின்றார்.

கூட்டமைப்பினரோ தாக்குதலை வழிநடத்திய படை அதிகாரிகளை, அடையாளங் காட்ட தயாராக இருப்பதாக பகிரங்கமாகவே கூறிவிட்டனர். தாக்குதலை நடத்தியவர்களை வழிநடத்திய படை அதிகாரி சுமந்திரனுடன் உரையாடி, பாதுகாப்பு அமைச்சே கூட்டத்தை நிறுத்தச் சொன்னதாக கூறியிருக்கிறார். மறுபு

தம்மீதான தாக்குதல் நன்கு திட்டமிட்டே நடத்தியிருப்பதாக, கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். கூட்டம் நடப்பதற்கு முதல் நாளே, மண்டப நிர்வாகத்தினரை இடம் ஒதுக்கி வழங்கியதற்காக தெல்லிப்பழை பொலிஸார் அச்சுறுத்தியுள்ளனர். கூட்டம் 6.30 அளவிலேயே ஆரம்பமானபோதும் பிற்பகல் 4.00 மணிமுதல், சிவில் உடையிலும் சீருடையிலும் படையினர் அங்கு நிலைகொண்டே இருந்துதுள்ளனர். இந்த தாக்குதலில் 40 முதல் 50 வரையானோர் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை நூற்றுக்கணக்கான படையினர் மண்டபத்தை சுற்றி வளைத்து நிலைகொண்டிருந்துள்ளனர்.

தாக்குதலாலிகள் கொட்டன், பொல்லுகள் கம்பிகள் சகிதமே அடித்து நொருக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் வீதியில் ரோந்து வந்த படையினரே தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தியதாக யாழ். படைத்தலைமை கூறிவருகின்றது. ரோந்து வரும் படையினர் இப்போதெல்லாம் துப்பாக்கிகளுடன் கொட்டான்கள், பொல்லுகள் மற்றும் கம்பிகளுடனா திரிகின்றார்கள் என்ற கூட்டமைப்பினரின் கேள்விக்கு இதுவரை அங்கிருந்து பதிலேதுமில்லை.

எவர் மீதும் சகட்டு மேனிக்கு தாக்குதல் நடத்துவதும், ஏன் சிலவேளைகளில் கொலைசெய்துவிடுவதும் கூட இப்போது யாழ். குடாவில் சர்வசாதாரணமாகிவிட்டது. பின்னர் மன்னிப்பு கேட்பதும், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என கூறிக் கொள்வதும் கூட பெரிதானதொன்றல்ல பலவேளைகளில் குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டனை வழங்கப் போவதாக கூறிவந்த போதும், இதுவரை அவ்வாறு எவரும் பிடிபட்டதாகக் கூட தகவல்களேயில்லை. இலங்கை அரசு அமைக்கும் விசாரணைக்குழு அறிக்கைகள் எவ

கின்றதோ அதே போன்றே, குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் படைத்தலைமைகளது அறிவிப்புக்களும் அவ்வாறே சென்று விடுகின்றது.

கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீதான தாக்குதல் ஆயுதமுனையில், அச்சுறுத்தி மக்களை அடிபணிய வைக்கும் உத்தியொன்றைத் தவிர வேறல்ல, கூட்டமைப்பின் ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் முன்னைய காலங்கள் போன்று வீடுகளினுள் முடக்கவே இத்தாக்குதல் என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தாக்குதல் நடத்தப்பட்ட காலப்பகுதியினில், தான் யாழ்ப்பாணத்தில் இருந்திருக்கவில்லை என வழமை போல் தப்பித்துக் கொள்ள முற்பட்டுள்ளளார் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி. ஆனால் மறுமுகமாக, தனக்கு கட்டுப்படாத இராணுவப் பிரிவொன்று இருப்பதை அவர் ஊடகவியலாளர்களிடையே ஒத்துக்கொள்பவராகவும் உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மீண்டும் முடக்கி விடப்பட்டுள்ள இராணுவப்பதிவுகள், தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் இராணுவ சூழலொன்றை குடாநாட்டில் தொடர்ந்த பேணுவதற்கான உத்திகளாகவே பார்க்கப் படுகின்றது. வெளியிலிருந்து வருகை தந்த பிரதிநிதிகளுக்கு உண்மை சொன்னதற்காக அச்சுறுத்தப்பட்டு அவமதிக்கப் பட்டார் வணபிதா. ஜெயக்குமார் அடிகளார். அதை கண்டித்தற்காக, யாழிலிருந்து விரட்டி அடிக்கபபட்டார் அரச சார் பற்ற இணையத்தலைவர். இதேபோல் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூர்ந்தற்காக பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வீடுதேடிச்சென்று அச்சுறுத்தப்பட்டனர்.

இந்திய மீனவர்களது அத்துமீறலுக்கெதிராக குரல் கொடுத்தமைக்காக மீனவ சங்கங்கள் மீது பார்வை தற்போது

ர்கள் மற்றும் அவர்களது குடும்ப விபரங்கள் திரட்டப்படுகின்றது. வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மீனவர்களது விபரங்கள் கூட, துருவித்துருவி ஆராயப் பட்டு வருகின்றது. அண்மையில் யாழ்ப்பாணம் வந்த தேசிய மீனவ சங்கத்தலைவரான ஹேமகுமார கூட இச்சுழியில் தப்பவில்லை.

மறுபுறத்தே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகர சபை அங்கத்தவர்கள் கூட சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், மாநகரசபை உறுப்பினர் விந்தன் ஆகியோர் கொலை முயற்சிகளிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். அவர்களது ஆதரவாளர்கள் பலரும் அதே போன்று அச்சுறுத்தப்பட்டுள்ளனர். சிலர் கொலை முயற்சிகளிலிருந்து கூட மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். யாழ். குடாநாட்டில் இருண்டகாலமாக இருந்த 2009 இதற்கு முற்பட்டகாலப்பகுதி போன்றே புறச்சூழலை இப்போதும் வைத்திருக்கவே முயற்சிகள் தொடர்கின்றன.

இத்தகைய சூழலைக்கொண்டுவர அரசும், அதனது சகபாடிக் கட்சிகளும் படைத்தரப்பை வழிநடத்துவதாகவே நம்பப்படுகின்றது. உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்கப்பால் வடக்கிற்கான மாகாணசபைத் தேர்தல், முதலமைச்சர் கனவுகள் பலரை இப்போது ஆட்கொண்டுள்ளது. எனினும் தற்போதைய ஜனநாயக சூழலில் அக்கனவுகள் நிச்சயம் நிறைவேறாதென்பதை பலரும் புரிந்தே வைத்துள்ளார்கள். எனவே இராணுவத் தலையீடு மிக்க ஆட்சியொன்று அவர்களுக்கு அவசியமாக உள்ளது. மக்கள் பேசுவதற்கு, சுதந்திரமாக நடமாடுவதற்கு உரிமை மறுக்கப்பட்டவர்ளாக இருத்தி வைக்கப்படவேண்டும். அவர்கள் வாக்களிக்காது வீடுகளில் முடக்கியிருப்பது இன்னும் அதிக இலாபத்தை தரக்கூடியதே. இத்தகைய சூழலில் கட்டமைப்பு உள்ளிட்ட தரப்புகளுக்கு உள்ள முக்கிய கடமை மக்களை பேசவைப்பதேயாகும்.அவர்கள் வீதிக்கு இறங்காத வரை சொல்லிக்கொள்வது போன்ற அதிசயங்கள் எதுவும் நடந்து விடப்போவது மில்லை.



# வாயால் கெட்ட

நுணலும் தன் வாயாற் கெடும் என்று ஒரு பழ மொழி உண்டு. அதுபோல கஜால் அகர்வால் சும்மா இருக்காமல் ஒரு வார்த்தை விட, அது பெரிய பூதாகர மாக வெடித்திருக்கிறது. மும்பையிலிருந்து வந்திருக் கும் கஜால் அகர்வால் தமிழில் பழனி, சரோஜா, நான் மகான் அல்ல உள் ளிட்ட படங்களில் நடித்துள்ளார். தவிர தெலுங்கிலும் முன்னணி நடிகை யாக இருக்கின்றார். தெலுங்கில் இவர் நடித்த மகதீரா படம் இவருக்கு ஒரு தனி அந்தஸ்த்தை ஏற்படுத்தி தந்தது. இந்நிலையில் தமிழில் வெளியான சிங்கம் படம் ரீமேக் செய்யப்பட இருக்கிறது. இதில் அஜய் தேவ்கா னுக்கு ஜோடியாக கஜால் அகர்வால் நடிக்கிறார்.

சமீபத்தில் இப்பட விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசிய கஜால், சும்மா இருக்காமல நான் என்றுமே தென்னிந்திய நடிகை என்று எண்ணிய தில்லை.வட இந்தியப் பெண்ணாக இருப்பது தான் எனக்கு பெருமை என்று கூறியிருக்கிறார். அவ்வளவு தான் இவரது பேச்சு பெரிய பிரச்ச னையாக மாறிவிட்டது. தமிழ் மற்றும் தெலுங்குப் படம் மூலம் வளர்ந்த கஜால், எவ்வாறு இப்படி பேசலாம் என்று தமிழ், தெலுங்கு திரையுலகினர் கொந்தளித்து விட்டனர்.

குறிப்பாக தெலுங்கு திரைப்பட உலகைச் சேர்ந்தவர்கள், கஜால் அகர்

வால் மன்னிப்பு கேட்க
குறித்து தெலுங்கு நடின
லாததால் தான் தமிழ், தெ
ளில் நடிக்க வருகின்றன
போன்றவர்களின் நிலை
பேச்சு அநாகரிகமானது.

அதே போல் இந்து மக்
கையில், காஜலுக்கு நில
தெலுங்கு பட உலகம் த
கண்டிக்கத்தக்கது. இதற்
இனி அவரை புறக்கணி

இதைத்தான் தனக்கு
கள்.

# மனதில் ஒரு ஆசை

சீனாவுக்கு போய் ஷாங்காய் பட விழாவில் கலந்து கொண்டரால் லவா விஜய்? அன்றிலிருந்தே விஜய்யின் மனதில் ஒரு ஆசை உரு வாகியிருக்கிறதாம். இனிமேல் தனது படங்கள் எல்லாவற்றையும் சீனாவிலும் ரிலீஸ் செய்தால் என்ன என்பத தான் ஆசை.

அதற்குக் காரணம் அவர் நடித்திருந்த காவலன் படம் அங்கு திரையிடப்பட்டதும் அதற்கு அவர்கள் தந்த வரவேற்பும் தான். ஜப் பானில் ரஜனி படம் ஓட ஆரம்பித்திலிருந்து அவருடைய எல்லா படங்களையும் அங்கு அனுப்பி ரிலீஸ் செய்து கொண்டிருந்தார்கள். அதைப் போலவே தனது படங்களும் சீனா செல்ல வேண்டும் என்று கட்டளையிட காத்திருக்கிறாராம் விஜய்.



# அரவான

அங்காடித் தெரு படத்திற்கு
படம் தீபாவளியன்று திரைக்கு
தெரு' உள்ளிட்ட ஹிட் படங்க
என்ற படத்தை இயக்கி வருகிற

18 ஆம் நூற்றாண்டை மைய
ம், ஈரம் படங்களின் நாயகன் அ
கர் கபீர் பேடி உள்ளிட்ட பலர் ந
பிறகு வசந்தபாலனின் அரவா
றது.

மதுரை, தென்காசி, ஒகேனக்
மாக நடைபெற்று வருகின்றது.
படத்தின் நாயகன் ஆதி, இப்ப
திருப்புமனையை ஏற்படுத்தி த



# தனுஷின் பாடலாசிரியர் அவதாரம்

கோடம்பாக்கத்தில் மிகவும் இலகுவான வேலை பாட்டெழுதுவது தான் என்று சொன்னால், வாலி, வைரமுத்து போன்ற அறிஞர் பெருமக்கள் ஆத்திரப்படக் கூடும். நாம் சொல்ல வருவது அந்த ரக பாட்டல்ல. நான்கு வரியை மடக்கிப் போட்டு இடியப்பம் கிண்டுகிற சுமார் ரக கவிஞர்களையும் அவர் தம் வரிகளையும் தான். தன் படத்துக்கு தானே பாட்டெ ழுதிக் கொள்ளும் பேரரசில் இருந்து பாடலாசிரியர் வருவதற்கு தாமதமாகிவிட் டது, அதனால் நானே எழுதிடலாம் என்று எழுதி விட்டேன் என்று சமாளிக்கிற இசையமைப்பாளர்கள் வரைக்கும் நாளொரு கவிஞர் பொழுதொரு பாட்டு என்று போய் கொண்டிருக்கிறது எண்ணிக்கை.

இதில் தன்னையும் இணைத்துக் கொண்டிருக்கிறார் கவிதாசர் தனுஷ். நேற்று வரை நடிப்போடு நிறுத்திக்கொண்ட அவருக்கு இன்று என்ன புது ஆசை? இந்த கேள்வியெல்லாம் கேட்பதை விட்டுவிட்டு இரண்டாம் உலகம் படத்திற் காக காத்திருக்கலாம். ஏனென்றால் இப்படத்தில் இடம்பெறும் ஆறு பாடல்க ளையும் தனுஷ், செல்வராகவனும் இணைந்தே எழுதியிருக்கிறார்களாம்.

அதை விட பெரிய ஆச்சர்யம், அவற்றையெல்லாம் பாடியிருப்பதும் அவர் கள் இருவரும் தான். இந்த கவிதாசர்களின் பாடல்களுக்கு ட்யூன் போட்டுக் கொண்டிருக்கிற அதிஷ்டசாலி ஜி.வி. பிரகாஷ்.



# ஹன்சிகாவின் தொழில் பக்தி

தொடர்ந்து இரண்டு தோல்விப் படங்களில் வந்தாலும், கொழுக் மொழுக்கென்ற தோற்றத்துக்காக 'அடுத்த நமிதா' என அடையாளம் காணப்பட்டு, ரசிகர் மன்றம் உருவாகும் அளவுக்கு புகழ் பெற்றுள்ளவர் நடிகை ஹன்ஸிகா மோத்வானி. அடுத்து விஜய்யுடன் இவர் நடித்துள்ள 'வேலாயுதம்' வரவிருக்கிறது. உதயநிதி ஸ்டாலின் ஜோடியாக நடித்துள்ள 'ஒரு கல் ஒரு கண்ணாடி' படம் வேகமாக வளர்ந்து வருகிறது. தெலுங்கில் 'ஓ மை ப்ரண்ட்' எனும் படத்திலும் ... சித்தார்த். இந்த ...

மாறி மாறி பறந்துகொண்டிருக்கி
இப்படி ஓயாத பயணத்தால் அவ
க்கு காய்ச்சலே வந்துவிட்டதாம்.

ஆனாலும் காய்ச்சலைக் கூட பொருட்படுத்தாமல் 'கண்ட
என்ற தெலுங்குப் படத்துக்காக சுவிட்ஸர்லாந்து போய்
நடித்துக் கொடுத்துள்ளார் ஹன்ஸிகா. 'அந்தப் படத்துக்கா
ஏற்கெனவே திகதி கொடுத்துவிட்டிருந்தேன். காய்ச்சலை
காரணம் காட்டி நடிக்கப் போகாமல் நின்றுவிட்டால் தயா
ளருக்கு வீண் நஷ்டம். காய்ச்சல் என்னோடு போகட்டு
என்று கருதி, கஷ்டப்பட்டு நடித்துக் கொடுத்தேன் என்ற

# ...ட்ட கஜால் அகர்வால்

...கேட்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். இது ...கு நடிகை ஒருவர் கூறும் போது இந்தியில் வாய்ப்பு இல் ...மிழ், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழி படங்க ...கின்றனர். இங்கு வாய்ப்பு இல்லாமல் போனால், கஜால் ...ா நிலைமை என்னவாகியிருக்கும். கஜாலின் இந்தப் ...மானது.

...ந்து மக்கள் கட்சி மாநில செயலாளர் பி. ஆர். குமார் கூறு ...க்கு நிலையான இடத்தை கொடுத்ததே தமிழ் மற்றும் ...லகம் தான். அதை மறந்து அவர் இப்படி பேசியிருப்பது ...ு. இதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும் இல்லாவிடில் ...க்கணிக்க வேண்டுமென கூறியுள்ளார்.

...னக்கு தானே ஆப்பு வைத்துக்கொள்வது என்று கூறுவார்

# ...ணன் எப்போ?

...த்திற்கு பிறகு வசந்தபாலன் இயக்கி வரும் 'அரவாணன்' ...ரைக்கு வர இருக்கிறது. 'ஆல்பம்', 'வெயில்', 'அங்காடித் ...படங்களாகக் கொடுத்த வசந்தபாலன் அடுத்து 'அரவான்' ...வருகிறார்.

...மையமாக வைத்து உருவாகி வரும் இப்படத்தில் மிருக ...பகன் ஆதி, பேராண்மை தன்ஷிகா, பசுபதி, பாலிவூட் நடி ...பலர் நடித்து வருகின்றனர். அங்காடித் தெரு படத்திற்கு ...அரவான் படம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்

...கேனக்கல் உள்ளிட்ட பகுதிகளில் படப்பிடிப்பகு தீவிர ...ின்றது. தீபாவளிக்கு திரைக்கு வர இருக்கிறது. மேலும் ... இப்படம் நிச்சயம் தன் சினிமாவாழ்வில் ஒரு ...ுத்தி தரும் படமாக அமையும் என்று கூறுகின்றனர்.



போராளி



சுசி அப்படித்தான்

...டிருக்கிறார்.
...ல் அவரு
...டதாம்.
...'கண்டீரீகா'
...பாய்
...த்துக்காக
...ச்சலைக்
...ல் தயாரிப்
...ாகட்டும்
...என்றார்

## சினி பிட்ஸ்

** கவுதம் வாசுதேவ் மேனன், பாலா இயக்கத்தில் நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார் சோனியா அகர்வால்.

** இந்தியில் உருவாகும் 'காக்க காக்க' ரீமேக்கிற்கு 'உயிரின் உயிரே' பாடல் மெட்டை அப்படியே பயன்படுத்த முடிவு செய்துள்ளார் இசையமைப்பாளர் ஹரிஸ் ஜெயராஜ்.

** டெல்லியில் உள்ள நிஜாமுதீன் தர்காவுக்கு சென்று பிராத்தனை செய்யதார் ஆஸ்கர் விருது பெற்ற ஒலிப்பதிவாளர் ரசூல் பூக்குட்டி.

** 4 படங்களில் தொடர்ச்சியான ஷூட்டிங் கால் காய்ச்சலில் விழுந்த ஹன்சிகா மோத்வானி, டாக்டரான தனது அம்மாவிடம் மருந்து எழுதி வாங்கிக் கொண்டு தெலுங்கு பட ஷூட்டிங்குக்காக சுவிட்சர்லாந்து பறந்துவிட்டார்.

** 'ரேனி குண்டா' படம் தெலுங்கில் டப்பிங் ஆக உள்ளது.

** குடும்பத்துடன் திருப்பதி சென்ற தனுஷ், சாமியை தரிசித்துத் திரும்பியுள்ளார்.

** பாலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப்பின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை அவரே தனது இணையதளத்தில் தெரிவித்துள்ளார். நெஞ்செரிச்சல், தொண்டை வலி காரணமாக உடலில் சோர்வு ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

# தகவல் சமூகமும் தொடர்பூட்டல் விரிவாக்கங்களும்



**மிலேனியம் அபிவிருத்தி இலக்கு நோக்கிய பணிக்கூறுகளை திட்டமிட்டு தொலைத் தொடர்பூட்டல் செயற்பாடுகளை வலுவுள்ளதாக சமூக நிலை சார்ந்த அணுகு முறையில் முன்னெடுப்பதில் அரசும் தனியார் துறை தொடர்பூட்டல் நிறுவனங்களின் பணி காத்திரமானளதாகவும் தரமுள்ளதாகவும் அமைதல் எதிர்பார்ப்படுகின்றது.**

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

மிலேனியம் அபிவிருத்தி குறிகாட்டிகளில் 48 ஆவது குறிகாட்டியாக 100

இலங்கையின் வீட்டுத்துறை தொடர்பூட்டல் விபரம்

| தொலைபேசி | 2006 | 2007 |
|---|---|---|
| செல்லிடத்தொலைபேசி | | 30.4 |
| தொலைநகல் | | 36.6 |
| மின் அஞ்சல் | | 2.3 |
| இணையம் | 0.7 | 2.4 |
| மின்னஞ்சலிலுள்ள கணனி வைத்திருப்போர் | 24.7 | 27.3 |
| இணையமுள்ள கணனி வைத்திருப்போர் | 19.2 | 28.6 |
| மின்அஞ்சல் உதவியின்றி சுயமாக பயன்படுத்தல் | 2.8 | 5.2 |

பேருக்கு இணையத்தளத்தை எவ்வளவு பேர் பயன்படுத்துகிறார்கள் என்பதை மதிப்பீடு செய்வதாக அமைகின்றது. இலங்கையைப் பொறுத்த வரை 2004 இல் 100 பேருக்கு 2.87 இணையத்தள பயன்பாடு காணப்பட்டதாக தொலைத் தொடர்பு ஆணைக்குழு அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

தத்தினரும் தோட்டத்துறையில் 20 வீதத்தினர் பயன்படுத்துவதாகவும் ஆங்கில அறிவுள்ள தொகுதியினர் 80.2 வீதம் பயன்படுத்துவதாக மதிப்பிட்டு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

அட்டவணை - 05 முதலாம் உலக நாடுகளுடன் வளர்முக நாடுகளின் தொலைத் தொடர்பூட்டல் விரிவாக்க நிலைகளை ஒப்பிட்டு காட்டுவதாக அமைகின்றது.

சமூக ஆளிடைத் தொடர்பு நிலைகளினதும் சமூக வலையமைப்புத் தொடர்பு நிலைகளின் அனைத்து துறைகளின் தேவைகளுடனும் பின்னிணைப்பினைந்தாக தொடர்பூட்டல் வரு இணைவு பெற்றுள்ளது. தரவுகளை பெறுதல் தரவுகளை மற்றும் தகவலை பரிமாற்றுதல் தகவலுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தல்களை திட்டமிடவும் பகுப்பாய்வுகளை விரிவுபடுத்தி தனி நபர்களுக்கும் சமூகத்திற்கும் அபிவிருத்திக்கும் பொருத்தமான தீர்மா

அட்டவணை 03 இலங்கையில் கணினி பயன்படுத்துவோர் வீதம்

| | மாகாணங்கள் | கொழும்பு | நகரம் | கிராமம் | தோட்டம் |
|---|---|---|---|---|---|
| கல்வி | 76.0 | 74.8 | 76.6 | 75.8 | 71.7 |
| சுயதொழில் | 15.3 | 12.8 | 17.5 | 14.2 | 22.9 |
| வியாபாரம் | 15.4 | 17.0 | 18.5 | 14.0 | 20.6 |
| ஆய்வு | 49.4 | 50.7 | 44.3 | 51.6 | 64.8 |
| மின்அஞ்சல் | 16.0 | 28.6 | 23.6 | 12.6 | 1.5 |
| இணையம் | 16.2 | 28.4 | 22.8 | 13.3 | 5.6 |
| ஏனையவை | 3.8 | 3.0 | 2.5 | 4.4 | 5.6 |

(மூலம்-குடிமதிப்புப் புள்ளி விபர அறிக்கை)

மேற் காட்டப்பட்ட அட்டவணை 03 வீடுகளில் கணினி பயன்பாடுகள் தொலைத்தொடர் சேவையுடன் தொடர்புபட்ட மின் அஞ்சல் இணையத்தள பயன்பாட்டுக்கு பயன்படுகிறது என்பதை சமூக கட்டமைப்புடன் தொடர்பட்ட வகையில் எடுத்துக் காட்டுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் கிராமப் பகுதிகளில் அதன் பயன்பாட்டு தன்மை தாழ்நிலையில் இருப்பதை உணரமுடிகின்றது. கீழ் வரும் அட்டவணை - 04 மின்னஞ்சல் இணையம் பெறும் மக்கள் இடைவெளி தூரத்தை காட்டுவதாக அமைகின்றது.

தொடர்பூட்டல் பணிகளுடன் தொடர்பு பட்டதாக இலங்கையின் நுகர்வோரில் 60% பயன்படுத்துவதாக செல் பேசிகள் காணப்படுகின்றன. மேறகு ... கின்கத்தை பொறுத்த மட்டில் 65.0 வீ

னங்களை நடைமுறைச் சாத்தியப்பாடான வகையில் மேற்கொள்வதற்கு உதவியளிப்பதாக உள்ளது.

மிலேனியம் அபிவிருத்தி இலக்கு நோக்கிய பணிக்கூறுகளை திட்டமிட்டு தொலைத் தொடர்பூட்டல் செயற்பாடுகளை வலுவுள்ளதாக சமூக நிலை சார்ந்த அணுகு முறையில் முன்னெடுப்பதில் அரசும் தனியார் துறை தொடர்பூட்டல் நிறுவனங்களின் பணி காத்திரமானதாகவும் தரமுள்ளதாகவும் அமைதல் எதிர்பார்ப்படுகின்றது.

அப்பொழுது தான் உலகளாவிய ரீதியில் தொடர்பூட்டல் துறையின் அபிவிருத்தி நிலைகளை எட்டுவதற்கான எத்தனங்களை வலுவுள்ளதாக்க முடியும். மனித வளங்களுக்கும் தொடர்பூட்டங்களின் ...க்கும் மற்றும் சாத்தியப்பா பயன்பா...

டுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதனின் செயலாற்றங்க

அட்டவணை 04

| | 1கி.மீ குறைவு | 1-3கி.மீ | 3-6கி.மீ | 6 கி.மீ | தெரியாதவர் |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 16.8 | 19.1 | 15.7 | 23.6 | 24.9 |
| கொழும்பு | 49.1 | 28.8 | 7.7 | 3.8 | 10.7 |
| நகரம் | 45.5 | 24.5 | 7.2 | 3.9 | 18.9 |
| கிராமம் | 13.3 | 18.9 | 17.4 | 26.1 | 24.8 |
| தோட்டம் | 4.2 | 9.2 | 10.2 | 30.0 | 46.5 |

ளுடனும் அறிவு சார் மற்றும் உற்பத்தி துறையுடன் இணைந்தாக தொடர்பூடக பணிகள் கணிப்புக்குள்ளாகியுள்ளன. அதனூடான பயனுறுதித் தன்மை வினைத்திறனானதும் விளை திறனானதுமான செயல் முறைகளையும் வெளியீடுகளையும் உறுதிப்படுத்துவனவாக மாற்றம் பெற்றுள்ளன.

தகவலை முகாமை செய்தல் தகவலை பரிமாற்றுதல் தகவலை அறிவூட்டுதல் தகவலை அறிவித்தல் தகவலை களஞ்சியப்படுத்தல் தனவலை பயன்படுத்துதல் போன்ற செயன்முறைகள் இன்றைய தகவல் உலகின் உள்ளடக்கங்களாகி

றன. அறிவு சார் பொருளாதார தகவல் அறிவு மாற்றம் பெற்றுள்ளது.

ஒருவன் எவ்வளவு தகவலை உள்வாங்க வைத்திருக்கின்றானோ அதனை அடிப்படையாகக் கொண்டே அறிவு மற்றும் பொருளாதார வளம் தீர்மானிக்கப்படுகின்றது. அந்த வகையில் தனிநபரும் சமூகத்தினதும் தேசிய அபிவிருத்தியிலும் முதன்மை காரணியாக தொலைத் தொடர்பூட்டல் செயற்பாடுகள் உணரப்படுகின்றன.

**திரு.பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
*ஆசிரியர் -கொக்குவில் இந்து கல்லூரி*
*வளவாளர்- தொடர்பாடல் ஊடகக் கல்வி*
*(தேசிய கல்வி நிறுவகம்)*

தரமானதாகவும் சமநிலையாகவும் யாவருக்கும் பயன்படுத்தக் கூடியதாகவும் அடையச் செய்தல் தகவல் சமூக கட்டு

அட்டவணை 04

| நாடுகள் | தொலைபேசி (1000 பேருக்கு) | இன்ரநெற் (100பேருக்கு) |
|---|---|---|
| ஐக்கியஅமெரிக்கா | 113 | 55 |
| ஐக்கிய இராச்சியம் | 143 | 42 |
| சிங்கப்பூர் | 126 | 50 |
| இலங்கை | 10 | 01 |
| இந்தியா | 09 | 04 |
| இந்தோனிசியா | 09 | 04 |
| நோர்வே | 15 | 158 |
| சுவிடன் | 162 | 57 |
| பாகிஸ்தான் | 03 | 01 |
| ஜப்பான் | 119 | 45 |

மூலம் ... பனிசெவ் அறிக்கை (2005)


உள்ளன. தொடர்பூட்டல் பணிகள் இவற்றிக்கு வலு... நிறுவனவாக அமைகின்

மானத்திற்கு ...

# 1965 பொதுத் தேர்தல் அரசியல் மாற்றங்களும் (பகுதி09)

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் விளைவாக டட்லி சேனநாயக்கவின் தலைமையில் ஒரு மந்திரி சபை அமைக்கப்பட்டது. இந்த மந்திரி சபையில் ஜே. ஆர். ஜெயவர்த்தன இராஜாங்க அமைச்ச



டட்லி சேனநாயக்க

ராக நியமிக்கப்பட்டார். யு.பி.வன்னி நாயகா நீதி அமைச்சராக்கப்பட்டார்.

1965 இல் பிரதமராகப் பதவியேற்ற டட்லி சேனநாயக்க 1965 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதி தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகத்துடன் ஓர் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். இதுவே பிரசித்தி பெற்ற டட்லி - செல்வா (1965) உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு - கிழக்கில் நிர்வாக மொழியாகத் தமிழைப் பயன்படுத்துவதென்றும் நிர்வாக அலகுக்களை இலகுபடுத்தும் நோக்குடன் மாவட்ட சபைகளை அமைப்பதென்றும் மேலும் வடக்கு கிழக்கிலுள்ள முடிக்குரிய காணிகள் (Crown Land) பங்கிடப்படும்போது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் வடக்கு - கிழக்கில் வாழும் மக்களது இன விகிதாசாரத்தைப் பாதிக்கக்கூடியளவில் அரச ஆதரவு பெற்ற குடியேற்றத் திட்டங்கள் (State Aided Colonization) அமைக்கப்படமாட்டாது என்றும் பிரதமர் டட்லி சேனநாயக்க உடன்பட்டுக்கொண்டார்.


யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களது கலைகலாசார விழுமியங்கள் மேம்பாட்டை கட்டிக் காக்கக் கூடிய வகையில் ஒரு கலாசார பல்கலைக்கழகம் அமைப்பது என்றும் பேச்சு வார்த்தைகளின்போது டட்லி சேனநாயக்கா உடன்பட்டார்.

இந்த டட்லி - செல்வா உடன்பாட்டிற்கு சட்ட வலுக்கொடுக்கு முகமாக 1966 ஆம் ஆண்டு தை மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தமிழ் மொழிகள் விசேட ஏற்பாடுகள் சட்டத்தை டட்லி சேனநாயக்க கொண்டு வந்தார். அன்றைய தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிகளும் பௌத்த குருமார்களும் நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கொழும்பு கொள்ளுப்பிட்டி காலி வீதி வழியாக ஊர்வலமாக வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இலங்கைப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரத்தினசார தேரோ என்பவர் கொள்ளுப்பிட்டியில் வைத்துக் கொல்லப்பட்டார்.

தமிழ் மக்கள் மீதான எதிர்ப்பு அலைகளுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் 1966 ஆம் ஆண்டு தமிழ் மொழி விசேட விதிகள் சட்டம் நிறைவேறியது. அரசாங்கம் தமிழ் மக்களோடு தொடர்பு கொள்கின்ற உத்தியோகபூர்வமான தொடர்புகள் யாவும் அவர்களது தாய் மொழியிலேயே அமைந்திருக்குமென ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்த ஒப்புதல்கள் எவையுமே ஒரு போதும் நிறைவேற்றப்படவில்லை. பாராளுமன்ற அங்கீகாரம் பெற்ற இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படாது கிடப்பில் போடப்பட்டது. இன்றும் இலங்கை அரசு சிங்கள மொழி மூலம் அரச கடிதங்களை அனுப்பி வைக்கிறது. சட்ட வலுப்பெறாது போன ஒப்பந்த விதிகளில் இதுவும் ஒன்றாகும். தமிழ் பேசும் மக்களது அரசியல் வரலாற்றில் இதுவும் இன்னொரு துன்பியல் நிகழ்வாகும்.

## சட்டமும் சமூகமும் 33






சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

# மண்டைதீவு தில்வேஷ்வரன் ஆலயம் புனரமைக்கப்படுமா?

யுத்த அனர்த்தங்களால் பலத்த சேதமடைந்த நிலையில் நீண்ட நாட்களாக செயலிழந்து காணப்படும் மண்டைதீவு தில்ஷேவரத்தை புனரமைத்து மீண்டும் இயங்க வைக்க இப்பகுதி மக்கள் முன்வந்துள்ளனர்.

இதற்கான புனரமைப்புக்குழுவின் அங்குரார்பணக் கூட்டம் ஒன்று திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

சுவாமி அம்மா மேற்படி ஆலயத்தை தனது சொந்த பணத்திலும் மக்களிடம் வசூல் செய்த பணத்திலும் நிர்மாணித்து பூஜை வழிபாடுகளை நடத்தி வந்தார். இவரது மறைவிற்குப் பின்பு இவ் ஆலயம் செயலிழந்து காணப்பட்டது. 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது செல்வீச்சுக்களாலும் குண்டு வீச்சினாலும் இவ் ஆலயம் பலத்த சேதத்துக்குள்ளானது. மேற்படி ஆலயத்திலுள்ள பொருட்கள் நாளாந்தம் இனம் தெரியாத திருடர்களால் திருடி செல்வதாக பிரதேசவாசி ஒருவர் கவலை தெரிவித்தார்.

மண்டைதீவிலுள்ள ஒரே ஒரு சிவன் ஆலயம் பூசை வழிபாடின்றி செயலிழந்து இருப்பதால் மேற்படி கிராமம் வளர்ச்சி இன்றி மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்து வருகின்றதாக பரதேசவாசி ஒருவர் கவலை தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் மண்டைதீவு பகுதியிலுள்ள முற்போக்கு சிந்தனையும் இறைபக்தியும் நிரம்பிய மக்களில் சிலர் பங்கு பற்றியிருந்தனர். இக்கூட்டத்தில் வெகு விரைவில் ஆலயத்தை புனரமைத்து கும்பாவிஷேகம் செய்வற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்துடன் புனரமைப்பு பணிக்கு சமயப் பொது நிறுவங்களிடமும் பொது மக்களிடமும் நிதி சேகரிப்பதென முடிவு எடுக்கப்பட்டது. இதேவேளை நீண்ட காலமாக ஆலயம் செயலிழந்து காணப்பட்டதால் ஆலய சுற்றாடல் புற்கள், மரங்கள் வளர்ந்து சிறு காடு போல் காணப்பட்டது.

மேற்படி ஆலயத்துக்கு மிக அண்மையில் பாதுகாப்பு காரணங்களால் மூடப்பட்ட மண்டைதீவு கடற்கரைவீதி தற்போது பாதுகாப்பு படையினரால் மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விட்டதை தொடர்ந்து தினசரி மக்கள் மேற்படி வீதியால் பெருந்தொகையாக சென்றுவருகிறார்கள்.

இவ் ஆலயத்துக்கு அருகில் உள்ள அரச தரிசு நிலங்களில் வீடற்ற ஏழை மக்களுக்கு வீடமைப்பு திட்டம் ஒன்றை அமைத்து வழங்கி வந்தால் இப்பிரதேசம் சனச்சந்தடியுள்ள பிரதேசமாக மாறிவிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டது.

இக்கூட்ட இறுதியில் ஆலயப் புனரமைப்பு குழுவின் தலைவியாக ஆலய பின் உரித்தாளர்களில் ஒருவரான திருமதி சரஸ்வதிதேவி செல்வராஜா ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக மண்டைதீவு கிராம அலுவலகர் சசிகாந்தனும் பொருளாளராக சி. உமாபாலும் போஷகர்ளாக மண்டைதீவு முன்னாள் பிரஜைகள் குழு செயலாளரும் பத்திரிகையாளருமான என். இராமச்சந்திராவும் பத்திரிகையாளரும் யாழ். திருநெல்வேலி இந்து கலவன் பாடசாலை அதிபர் ந. விஜயசுந்தரமும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் 7 பேர் கொண்ட நிர்வாக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. ஆலய பூஜைகளை சைவம் ஒருவரை கொண்டு மேற்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**என். இராமச்சந்திரா**
**(வேலனை நருபர்)**

# குறுக்கெழுத்துப் போட்டி 33

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | ■ | 09 | 10 | ■ | 11 | 12 | ■ |
| 13 | ■ | 14 | 15 | 16 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | ■ | 25 |
| 26 | 27 | 28 | ■ | 29 | 30 | 31 | 32 |
| ■ | 33 | ■ | 34 | ■ | 35 | 36 | 37 |
| 38 | 39 | ■ | 40 | 41 | 42 | 43 | ■ |
| 44 | ■ | 45 | 46 | ■ | 47 | 48 | 49 |

### இடமிருந்து வலம்

1. இனிய பாடம்
6. பேசும் பறவை
9. தாங்கள்
11. கிறிஸ்தவர்களின் மீட்பர்
14. சோறு
17. ஆகாயம்
19. பூவின் ஒரு பகுதி
26. வாள் (ஆயுதம்) குழம்பியுள்ளது
29. கோள் மூட்டுபவர்
35. திசை
38. சம்மதச் சொல்
40. சப்தஸ்வரங்களில் ஒன்று
45. பத்தையும் பறக்க வைப்பது
47. பற்றை (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. ஒரு படம்
3. கிருஸ்ணனின் நூலின் சுருக்கம்
4. யானையின் சிறப்பு (குழம்பியுள்ளது)
6. வள்ளுவன் மனைவி (தலைகீழ்)
16. இனிமையான ஒன்று (தலைகீழ்)
18. முஸ்லீம்களின் நூல் (தலைகீழ்)
20. கிராமிய நடனம்
24. நரியின் புத்தி (தலைகீழ்)
31. நல்லவர்
34. இரக்கத்துடன் கூடிய பாசம் (தலைகீழ்)
38. வீட்டில் வளர்க்கும் மிருகம்.

### குறுக்கெழுத்துப் போட்டி 31க்கான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பி | ர | க | லா | த | ன் | ■ |
| ணி | க | ண | ■ | கா | த | ல் |
| ■ | ம் | ப | ன் | து | ■ | ய |
| சா | ■ | தி | க | ■ | வி | தை |
| வி | ம் | ■ | ரு | சி | ■ | பு |
| த் | ச | தி | மு | ர | ம் | ■ |
| தி | யா | வி | ■ | ம | த | கு |
| ரி | பா | ■ | க | ம் | ப | ளி |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. வே. ரகுபதிசர்மா
விதவத்தனை முருகன் கோவில்,
பண்ணாகம்.
2. தி. பாலசுப்பிரமணியம்,
பிரதான வீதி,
மானிப்பாய்.
3. அ. சியாமளன்,
புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

குறுக்கெழுத்துப் போட்டி 33க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




உங்க ஆபீசில டைப்பிஸ்ட் வேலை பார்க்கும் ராமன் ஓட்டப்பந்தய வீரராமே?

ஆமாம் உடம்பு சரியில்லாம போன துலேர்ந்து அவரால ரெண்டையுமே செய்ய முடியல

அப்போ அவருக்கு கையும் ஓடல காலும் ஓடலன்னு சொல்லுங்க.




எங்க தலைவர் பேச ஆரம்பிச்சா நேரம் போறதே தெரியாது

பின்னே தூங்குறபோது யாருக்குத் தான் நேரம் போறது தெரியும்?




ரவுடி ரங்கனுக்கு ஆபரேஷனாம்

கத்தி எடுத்தவன் கத்தியால தான் சாவான் என்று பெரியவங்க சும்மாவா சொன்னாங்க





அவர் போலி டாக்டர்னு எப்படி கண்டு பிடிச்சாங்க

அவர் போலியோவுக்கு மருந்து கொடுத்த லட்சணத்தைப் பார்த்து




டாடா பென்ஸில் மந்திரி வந்தாரே என்ன சொன்னார்?

டாடா காட்டிவிட்டுப்போய்விட்டார்.




சே அந்த மோசமான ரவுடியையா கலியாணம் செய்துகொள்ள போறே?

ஆமாம் அவர் தங்கத்துல சைக்கிள் செயின் போடுறதா இருக்கார்.

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

ஒரு சமூகத்தின் இயல்புகளை மாற்றுவதில் பாடசாலையின் வகி பாகம் காத்திரமானது. இந்த நவீன உலகில் கற்கும் சமுதாயத்திற்கான உயர்பண்புகளை விருத்தி செய்வதன் அவசியத் தேவை எழுந்துள்ள நிலையில் கற்கும் சமுதாயத்தினை உருவாக்குவது தொடர்பில் ஆசிரியர்களின் பங்கு மகத்துவம் நிறைந்தது. முன்னர் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் என்ற வரையறையுடன் தமது வேவையை எல்லைப்படுத்தவில்லை. கற்றல் கற்பித்தல் என்ற எல்லைக்கும் அப்பாற் சென்றும் தமது மகத்துவம் மிக்க உன்னத சேவையை வழங்கயதனால் தான் எதிர்காலத்தில் வளம் மிக்க சமூகத்தை உருவாக்குவதில் வெற்றியும் கண்டனர்.



தற்போதைய நிலையில் கல்வியை வழங்கும் நிறுவனங்களுள் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்கு முக்கிய இடம் பிடித்துள்ளது.

இத்தகைய மாணவர்களது கற்றல் தொடர்பான மனப்பாங்குகளை உருவாக்குவதில் முக்கியமான இடத்தை வகித்த பாடசாலைகளும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் தவறிவிடுகின்றனர்.

மிகையான எதிர்பார்ப்புக்களுடன் இருக்கும் இன்றைய மாணவ சமூகம் ஆசிரியர்களின் வகி பங்குகள் மிக விரிவான முறையில் அமைய வேண்டுமென எதிர்பார்க்கின்றது. அந்தத்தேவைகளை தற்போது தனியார் கல்வி நிலையங்கள் பூர்த்தி செய்வதனால் தனியார் கல்வி நிலையங்களை நாடி அதிகளவு மாணவர்கள் வருகின்றனர்.

இத்தகைய தனியார் கல்வி நிலையங்கள் தரமான சேவையை மாணவ சமுதாயத்திற்கு வழங்குகின்றதா? என்ற வினா எழுகின்றது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பல தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் தொழில்சார் அபிவிருத்தியில் சிறந்து விளங்கினாலும் ஒழுக்க மிக்க மாணவ சமூகத்தை உருவாக்கத் தவறிவிடுகின்றனர்.

அண்மையில் கூட ஒரு தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவரை சில மாணவர்கள் கடுமையான முறையில் தாக்கிக் கொடுமைப்படுத்தியிருக்கின்றனர். அந்த ஆசிரியர் வகுப்பில் மிகவும் கண்டிப்புடன் இருப்பவர். மாணவர்கள் மீது அவர் காட்டும் கடுமையான சொற்பிரயோகங்களால் வெந்து நொந்து போன சில மாணவர்கள் கற்பித்து முடித்து வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அவரை வழி மறித்து மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். நிலை குலைந்து வீழ்ந்த ஆசிரியர் அயலவர் உதவியுடன் ஒருவாறு தப்பிப்பிழைத்து வீட்டை அடைந்துள்ளார். தற்போது ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான இடைத் தொடர்புகள் விரிசலடைந்து வரும் இப்பின்னணியில் கற்பித்தல் முறைகளை சில தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மாற்றிக் கொண்டுள்ளனர்.

மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் உயர் வருமானங்களை அடையலாம் என்ற நோக்கத்திற்காக கற்பித்தலை எப்படியும் நிகழ்த்தலாம் என்றவாறு நகைச்சுவைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதுவும் பாலியல் சம்பந்தப்பட்ட நகைச்சுவைகளை அதிகமாக பிரயோகித்தால் மேற்படி நோக்கத்தை அடையலாம் என்பதே அவர்களது நோக்கம். இதனால் தரமான கல்வியை வழங்குதல் என்ற நோக்கம் அடையமுடியாமல் போய்விடுகிறது. பல தனியார் கல்வி நிலையங்களை எடுத்துக்கொண்டால் பகிடிகள், பம்பல் கதைகள் முக்கால்வாசி இடத்தைப் பிடிக்க கற்பித்தல் கால்வாசி இடத்தையே பிடிக்கிறது. இதனையே இன்றைய மாணவ சமூகமும் விரும்புகிறது. கண்டிப்புடன் கூடிய கல்விக்கு இன்று இடமில்லை.

ஆசிரியரின் உயர் தொழில்சார் அபிவிருத்தியானது பல பரிணாமங்களைக் கொண்டது. துரிதமாக மாறிவரும் உலகில் ஆசிரியர்கள் மாணவர்களை கவரக் கூடிய விதத்தில் தமது கற்பித்தல் செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை விடுத்து கற்பித்தல் என்ற நோக்கத்தை மறந்து பாலியல் கிளர்ச்சிகளைத் தூண்டக் கூடிய விதத்தில் மாணவ மாணவிகளை அணுகுவது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

யாழ். குடாநாட்டிலுள்ள சில கல்வி நிலையங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் சிலர் மாணவிகளிடம் தவறான முறையில் அணுகுகின்றனர். இளம் ஆசிரியர்கள் தான் தவறான முறையில் நடக்கின்றனர் என கருதக்கூடாது. சில வயதான, பருவ வயதில் பெண்பிள்ளைகளையுடைய ஆசிரியர்களின் மன்மத லீலைகளும் அரங்கேறுகின்றன. நம்பி வருகின்ற மாணவர்களுக்கு காதல் பாடங்களை (செயல்முறை) விளக்கங்களோடு கற்பிக்க முயல்கின்றனர். இத்தகைய ஒரு சில புல்லுருவிகளின் ஈனத்தனமான செயல்களால் ஒட்டுமொத்த ஆசிரியர் சமுகத்தின் மீதும் பழிச்சொற்கள் விழ ஏதுவாகிறது. இது இவ்வாறிருக்க பல ஆசிரியர்கள் பணத்தை மட்டுமே குறியாகக் கொண்டு செயற்படுகின்றனர். உயர்தரப்பிரிவில் கற்கும் மாணவர் ஒருவரிடமிருந்து ஒரு பாடத்திற்கு 500 ரூபாவிற்கு மேல் அறவிடப்படுகின்றது.

அத்துடன் பிரத்தியேக வகுப்புக்கள் எடுத்தால்தான் பாடத்திட்டத்தை பூரணமாக பூர்த்தி செய்ய முடியும் எனக்கூறி ஒவ்வொரு மேலதிக வகுப்புக்களுக்கும் பல மடங்கு கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. பாடக்குறிப்புக்கள் மற்றும் பாடம் சார் விளக்கக் குறிப்புக்களுக்கும் அதிகளவு பணத்தை மாணவர்களிடமிருந்து கறக்கின்றனர். அதிகளவு தொகையை செலுத்தி குறித்த சில பிரபல ஆசிரியர்களிடம் மாணவ மாணவிகள் சென்றாலும் அப்பாடத்துறைசார் விளக்கங்கள் சொற்ப நேரமே கற்பிக்கப்படுகின்றன. மிகுதி நேரம் மாணவர்களைக் கவர்வதற்கான விளம்பரமாக பாலியல்சார் விளக்கங்களும் நகைச்சுவைகளுமே ஆசியரால் போதிக்கப்படுகின்றது.

மாணவர்களும் இவ்வாறான ஆசிரியர்களிடமே அதிகமாகச் செல்கின்றனர். ஆனால் ஆசிரியர்களோ தமது பணப்பைகளை நிரப்புவதையே குறியாகக் கொண்டு செயற்படுகின்றனர். மாறுதல்களுடன் கூடிய வாழ்வியல் நியதிகளில் மாற்றம் என்பது கல்வித்துறையில் அதுவும் கற்பித்தல் முறையில் நிச்சயம் தேவை. இருந்தும் கற்பித்தல் என்ற நோக்கத்திலிருந்து பிறழ்வுபடாமல் தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவது ஆசிரிய சமூகத்தின் முன் விரிந்து கிடக்கும் தலையாய பணியாகும்.

தற்போது போர்ச் சூழல் அகன்று அமைதி நிலை தோற்றுவிக்கப்பட்டாலும் அதன் தாக்கங்களிலிருந்தும் வெறுமை நிலையிலிருந்தும் இன்னும் தமிழ் மக்கள் விடுபடாத நிலையில் கல்வி என்ற பெரும் சொத்தை நம்பியே எம்மினத்தின் எதிர்காலத்தின் நாடித்துடிப்பு, வாழ்வு இருக்கின்றது.

கல்வி அருஞ்சொத்து எம்மிடமிருந்து அருகிச் செல்வது எம்மினத்தின் சமூக, பொருளாதார, கலாசார பண்பாட்டுத் தளங்களில் சிதைவுகளை ஏற்படுத்தும் என்பது திண்ணமாகும். நாம் கடந்த வந்த பாதையைச் சற்றுத்திரும்பிப் பார்த்தால் எம்முன்னோர் கல்வியே கண்ணாக தமிழினத்தின் முதுகெலும்பாக கொண்டு செயற்பட்டனர். அக்காலத்தில் பல கல்விமான்கள் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர். வெளிநாடுகளில் பல உயர்பதவிகளை அலங்கரித்து இருக்கின்றனர்.

இதனால் தமிழ்க் கல்வியாளர்களைப் பார்த்து தென் இலங்கை அரசியலாளர்கள் முதல் தென்னாசிய பிரதேச அரசியல் தலைவர்களே வியந்து பார்த்த காலம். தமிழினத்தின் அபரிமிதமான வளர்ச்சியை பொறுக்கமுடியாத சிலர் தமிழினத்தின் மீது பல வன்முறைவடிவமான , தாக்குதல் மற்றும் கல்வித்துறையை திட்டமிட்டு சிதைக்கும் முயற்சிகள் என பரந்து வரிந்து சென்ற இதன் ஒரு கட்டமாகவே பல்கலைக்கழக தரப்படுத்தல் முறை, யாழ். பொது நூலக எரிப்பு போன்ற பல தமிழர்களின் கல்வி மீதான வன்செயல்கள் திட்டமிட்டு தூண்டிவிடப்பட்டன. இதனால் தமிழினத்தின் அரும் பெரும் சொத்தாகிய கல்வித்துறை படிப்படியாக அந்நியப்பட்டுச் சென்றுகொண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்நிலைமை தொடராமல் இருப்பதற்கு கல்வியியலாளர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உதிஷ்டிரன்

# ஆசிரிய உதவியாளர்களும் அவர்களின் அவஸ்தைகளும்

யாழ். மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வடமாகாண கல்வித்திணைக்களகத்தினால் 405 ஆசிரிய உதவியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

ஏற்கனவே ஊதியம் எதுவும் இன்றி பாடசாலைகளில் தொண்டராசிரியராகக் கடமையாற்றியவர்களுக்கே பல நேர்முகத் தேர்வின் பின்னரும் பல இழுபறிகளுக்கூடாக ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகளில் இவர்கள் கடமையாற்றி வருகிறார்கள். இவ்வாறு ஆசிரிய உதவியாளர்களாக் கடமையாற்றும் இவர்களின் நிலைமையோ மிகப் பரிதாபகரமானதாகவுள்ளது.

நியமனம் செய்யும் போது மூவாயிரம் ரூபா மட்டுமே இவர்களுக்கு வேதனமாக வழங்கப்படுவதுடன் 5 வருடத்திற்குள் பட்டப்படிப்பையோ அல்லது ஆசிரிய பயிற்சியையோ பூர்த்தி செய்தால் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப் படும் என தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு பாடசாலைகளில் வாரம் 40 பாடவேளைகள் வழங்கப்பட்டுள்ளது. பட்டதாரிகளாக உள்ள ஆசிரிய உதவியாளர்கள் க.பொ.த. உயர்தர வகுப்புக்குக் கூட பாட வேளைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரிய உதவியாளராகவுள்ள இவர்களுக்கு ஆசிரியர் சேவையில் உள்ளவர்களை விட அதிகமாக கடமைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இவ் ஆசிரிய உதவியாளர்களின் ஊதியமோ வெறும் மூவாயிரம் ரூபா மட்டுமே. இதில் அக்ர ஹாரா என்னும் காப்புறுதிக்கு 75 ரூபா கழிக்கப்பட்டு மீதி 2 ஆயிரத்து 925 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுகிறது. இது அரசாங்க ஊழியருக்கு வழங்கப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியின் இரண்டு மடங்கே வரும். இவ் மூவாயிரத்தை விட வேறு எந்தகொடுப்பனவும் இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இவ் வேதனத்தை வைத்துக்கொண்டு எவ்வாறு வாழ்க்கையை ஓட்ட முடியுமென இவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இவ் ஆசிரிய உதவியாளர்களாகவுள்ளோரில் தனியாட்களுக்கு ஆடைகள், அணிகலங்கள் மற்றும் இதர செலவுகள் அத்துடன் மாணவர்களுக்குரிய பாடவிதான பொருட்கள் என்பன வாங்குவதில் இவ்வூதியத்தைப் பயன்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். இதை விட குடும்பஸ்தராக உள்ள ஒருவர் குறிப்பிட்ட செலவுகளுடன் மேலதிகமாக குடும்பச் செலவையும் ஏற்கவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இவர்கள் படும் அவஸ்தைகளை வார்த்தைகளால் வெளியிடமுடியாது.

இது இவ்வாறு இருக்க இவ் ஆசிரிய உதவியாளர்களில் தற்போது 50 ற்கு மேற்பட்டோர் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த நிலையில் உள்ளார்கள். இவர்களை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்படாத நிலையில் தொடர்ந்து இப் பதவியிலேயே மூவாயிரம் ரூபா வேதனத்துடன் கடமையாற்றி வருகின்றார்கள். மிகவும் கஸ்டப்பட்டு பட்டத்தினைப் பூர்த்தி செய்தும் உரிய சேவைக்குள் உள்வாங்கப்படாத நிலை இவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் மனவிரக்தியையும் ஏற்படுத்திவருகிறது.




யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரிய உதவியாளர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை அவர்களுடன் உரையாடும் போது அறியக்கூடியதாக உள்ளது.

ஆண் ஆசிரிய உதவியாளர் ஒருவர் குறிப்பிடும் போது தனக்கு கிடைக்கும் சம்பளத்தில் பிரயாணச் செலவாக ரூபா ஆயிரத்து ஐந்நூறு போக மீதியயி தனது மதிய உணவுக்கு மட்டுமே போதும் எனவும் ஏனைய செலவுக்கு வேறு வழிகளை எதிர்பார்க்க வேண்டிய அவல நிலை காணப்படுகிறது எனக் கவலையோடு தெரிவிக்கிறார்.

பெண் ஆசிரிய உதவியாளர் கூறுகையில், மூவாயிரம் ரூபா சம்பளத்தில் உடுபுடவை வாங்கவும் அவற்றின் செலவிற்கும் மற்றும் எனது சின்னச் சின்ன தேவைகளுக்கு மட்டுமே போதுமானதாகவுள்ளது. அத்துடன் பாடசாலை சிற்றுண்டிச்சாலைக்கும் செலவு செய்யவும் மட்டுமே போதுமானதாகவுள்ளது. மாணவர்களுக்குரிய கற்றல் பொருட்கள் மற்றும் ஏனைய செலவை மேற்கொள்வதற்கு வேறு வழிகளை எதிர்பார்க்கும் பரிதாபமான நிலை காணப்படுவதாகவும் அரசாங்க வேலை கிடைத்தும் வழங்கப்படும் ஊதியம் வாழ்க்கைச் செலவின் இருபது வீதத்தைக் கூட நிறைவு செய்யப் போதாதுள்ளது என்றார்.

இவ் ஆசிரிய உதவியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு தற்போதைய வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப சம்பளக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும்.

பட்டதாரியாகக் காணப்படுபவர்கள் உடனடியாக ஆசிரிய சேவைக்குள் உள்ளீக்கப்பட வேண்டும் என்பது ஆசிரிய உதவியாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

இவ்விடயங்களில் உரிய தரப்பினர் ஆசிரியத்துவத்தின் உன்னதமான சேவை மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்கும் கற்பித்தலில் ஈடுபடுபவர்களின் நலன் உறுதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது காலத்தின் தேவையாகும்.

தி.ஞா. செந்தமிழ்செல்வன்


# மூலிகை மருத்துவம்

**கீழ்க்காய் நெல்லி**

B.N Phyllonthus niruii

மறுபெயர் : கீழ்வாய்நெல்லி<br>கீழாநெல்லி

உபயோக பாகம் : சமூலம்



சுவை : துவர்ப்பு, கைப்பு, புளிப்பு, இனிப்பு

செய்கை : சிறுநீர் பெருக்கி, துவர்ப்பி, குளிர்ச்சி உண்டாக்கி, வீக்கம் கரைச்சி.

குணம்: இதனால் வயிற்றுமந்தம், நேத்திர ரோகம், பித்ததோஷத்தால் ஏற்படும் நோய்கள் சீதரத்தபேதி, நாவரட்சி, இரத்தஅதிசாரம், பாண்டுகாமாலை, சோபை, சப்ததாதுக்களைப் பற்றிய சுரம் ஆகிய வற்றை குணமாக்கும்.

உபயோகம்: சமூலம், சமூலத்தை அரைத்து கொட்டைப் பாக்கு பிரமாணம் பசுவின் பாலில் கலக்கி உண்டு வர பாண்டு சோபை காமாலை மற்றும் பித்தரோகங்கள் குணமடைவதுடன் கண்களுக்கு குளிர்ச்சியை உண்டாக்கும்.

சாமூலத்தை உலர்த்தி பொடி செய்து நீரில் குழைத்து புண்களுக்கும் வீக்கங்களிற்கும் பூச குணமாகும்.

சமூலத்தை குடி நீர் செய்து சிறிது சூட்டுடன் கொடுக்க சுரம் தணியும் அத்துடன் பசியை போக்கும்.

இலை சீதக்கழிச்சலுடன் பூண்டின் இலைக் கொழுந்தை குடிநீர் செய்து கொடுக்க குறையும்.

இலையுடன் உப்பு சேர்த்தரைத்து சொறி சிரங்கிற்குப் பூச குணமாகும்.

கீழ்க்காய்நெல்லித் தைலம்

கீழ்க்காய் நெல்லி சமூலத்தை நிழலில் உலர்த்தி பொடி செய்த தூள் 700g எடுத்து 500mg நீரில் கலந்து அதனை 1/8 ஆக வற்றக்காய்ச்சி அதனை பசுப்பால் நல்லெண்ணெய் வகை சமன் சேர்த்து 34g சீரகம் பசுப்பால் விட்டரைத்து ஒன்றாகக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொடுத்தல். இதனை வாரம் இரு முறை தலையில் வைத்து முழுகி வர உட்சுரம் அழல் கைகளால் கண் எரிவு தலைச்சுற்றால் வாந்தி தணியும்.

ரீ. உமா (2 ஆம் வருடம்)<br>லங்கா சித்த - ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

## அரங்கின் சாத்தியப்பாடுகளின் ஊடாக

# கல்வியியல் அரங்க செயற்பாடு





**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

ஆடல், பாடல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளப் பயந்தவர்கள் ஆடினார்கள்; பாடினார்கள். குழுச்செயற்பாட்டிற்கு மதிப்பளித்து ஏனைய மாணவர் கருத்துக்களுக்கு விட்டுக்கொடுக்கும் மானப்பாங்கையும் வளர்த்தனர்.

இச் செயற்பாடுகளின் பின்னர் முன்பை விட கல்வியிலும் பாடசாலையின் ஏனைய கருமங்களிலும் கூடியளவு ஆர்வத்தோடு ஈடுபட ஆரம்பித்ததை எங்கும் காணமுடிந்தது. முன்னர் பாடசாலைக் கல்வி நிகழ்வுகளில் ஆர்வம் காட்டாதிருந்த பிள்ளைகள் இரண்டிலும் ஆர்வம் காட்டினர்.

அரங்க நுட்பத்தைப் பயன்படுத்தி போதித்தல், கல்வி கற்பித்தல், நாடகம் ஒன்றை மேடையேற்றுதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது.

செயற்பாடுகளின் ஊடாக பெறப்பட்ட முடிவுகளாக மாணவர்கள் தனியே கல்வியில் பின்தங்கியவர்கள் என்பதை மட்டும் கொண்டு ஒதுக்குவதை விடுத்து, அவர்களை மற்ற மாணவர்ளைப் போல் நடத்துதல், இதனூடாக அவர்களது தாழ்வுமனப்பான்மையைப் போக்கமுடியும். அவர்களுக்கு கல்வியைப் புகட்டக் கூடிய இலகுவான வழிமுறைகள் ஊடாக ஆசிரியர்கள் கூடியளவு நேரம் செயற்பட வேண்டும். பாடசாலைச் சமூகம் பெற்றோருக்கு கூடியளவு அழுத்தங்களை கொடுக்கவேண்டும். இன்று மாணவ சமூகத்தின் கல்வி நடவடிக்கைகள் சுதந்திரமற்ற இறுக்கமான நிலையில் மேற்கொள்ளப்படுவதை பொதுவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால், மாணவர்க்கு உற்சாகமற்ற மனநிலை ஏற்படுகிறது. மாணவர்கள் பலர் சுய ஆளுமையற்று இறுக்கமான மனநிலையிலும் காணப்பட்டனர். பாடசாலையினுடைய சிறப்பான கல்விச் செயற்பாட்டிற்கு மாணவர்களின் ஒழுக்கமும் மிக முக்கியமானது.

ஆதலால், இத்தகைய போக்குகளில் இருந்து மாணவர்களை நேரிய வழியில் வழிநடத்துவதற்கும் ஆளுமையுள்ள சமுதாயத்தை வளர்த்தெடுப்பதற்கும் அரங்கியற் செயற்பாடுகள் மூலம் ஆக்க பூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

● எஸ்.ரி. குமரன்

## HOME டிப்ஸ்

- இஞ்சி எப்போதும் புதிதாக இருக்க தோட்டத்தில் ஒரு குழி தோண்டி அதனுள் இஞ்சித்துண்டுகளைப் போட்டு மண்ணால் மூடவும். மாடி வீட்டில் இருப்பவர்கள் மண் தொட்டியை உபயோகிக்கலாம்.
- ஜாம் அல்லது ஊறுகாய் பாட்டில் திறப்பது கடினமாக இருந்தால் மூடியில் ஒரு ஓட்டையைப் போடவும்.
- ஆரஞ்சு சாத்துக்குடிப்பழங்களை பிரௌன் காகிதப் பையில் போட்டு குளிர்சாதனப்பெட்டியில் வைத்தால் 10-15 நாட்களுக்குக் பழுதுபடாமல் புதியது போலவே இருக்கும்.
- உலர்ந்த மிளகாய்ப் பொடி பழுதுபடாமல் இருக்க சிறிது பெருங்காயத்தை அதனுடன் வைக்கவும்.
- கத்தரிக்காயை நறுக்கி உப்புத்தண்ணீரில் போட்டால் அவை கறுக்காது வாடிய காய்களை ஒரு மணி நேரம் எலுமிச்சைச் சாறு கலந்த குளிர்ந்த நீரில் ஊற வைத்தால் அவை புதியவை போல மாறும்.
- தேங்காயை 1/2 மணி நேரம் தண்ணீரில் போட்டு நாரை உரித்தால் எளிதாக உரிக்க முடியும்




- சாத்துக்குடியைக் கொதிக்கும் நீரில் சில நிமிடங்கள் அதன் உள்ளே இருக்கும் வெள்ளைத் தோலை வேகமாக நீக்கலாம்.
- வெந்தயக் கீரையை அலம்பி வடிய வைக்கவும். வெயிலில் காயவைத்து இலைகளைக் கசக்கி காற்றுப் புகாத டப்பாவில் போட்டுவைக்கலாம். உணவு தயாரிக்கும் போது ருசிக்காகவும், சுவைக்காகவும் இதைச்சேர்க்கலாம்.
- குக்கர் ஹோஸ்தட்டுகள் சிறியவை, பெரியவை இவற்றின் மீது பாத்திரத்தை வைக்கலாம். பாத்திரம் தேயாமல் இருக்கும். மேடைப் பலகைகளில் கரை படியாது. கீறல் விழாது.
- கொத்தமல்லிக் கட்டை வேரோடு தண்ணீரில் வைத்து குளிர் சாதனப் பெட்டியில் வைத்தால் நீண்ட நாட்களுக்கு பழுதுபடாமல் இருக்கும்.
- வெண்ணெய் சுற்றி வரும் பேப்பரை எறிய வேண்டாம். கேக் செய்யும் போது அதனைப் பயன்படுத்தலாம்.
- ரொட்டி மா சப்பாத்திக் கட்டையில் ஒட்டாமல் இருக்க மாவை உறையும் பெட்டியில் சில நிமிடங்கள் வைத்துப் பிறகு பயன்படுத்தவும்.
- பாகற்காயை நடுவில் வெட்டி உப்பு,கோதுமை மா, தயிர் கலந்த கலவையை அதன் மீது தடவவும். 1/2 மணிக்குப் பிறகு சமைத்தால் அதன் கசப்பு அறவே நீங்கிவிடும்.
- உறையும் பெட்டிக் கதவில் அதனுள் வைத்திருக்கும் பொருட்களை எழுதி ஒட்டவும். எடுத்துப் பயன்படுத்திய பிறகு அவ்வப்போது திகதியை மாற்றவும். இதனால் எத்தனை அளவு பொருட்கள் உறையும் பெட்டியில் இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள முடியும்.

# ஒளிக் கீற்றுகள்

தொகுப்பு: அஸ்வின்

## நாடகமும் அரங்கியலும் விவரணப்படம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கை நெறி தொடர்பாகவும் தகவல்களை உள்ளடக்கிய 'நாடகமும் அரங்கியலும்' என்னும் விவரணப்படத்தொகுப்பு வெளிவந்துள்ளது.

நாடகமும் அரங்கியலும் என்னும் விவரணத் தொகுப்பின் எழுத்து, இயக்கம், தயாரிப்பு, மற்றும் ஒளிப்பதிவினை எஸ். ரி அருட்குமரன் மேற்கொண்டுள்ளார். படத்தொகுப்பு மற்றும் பின்னணி இசையினை சுமணன் மேற்கொண்டுள்ளார்.

## அன்பலைகள்

அன்பலைகள் என்னும் பாடல்கள் அடங்கிய இறுவட்டு யோ.விஜயயோசன் சில்வியின் தயாரிப்பு, நெறியாள்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ் இறுவட்டில் பாடல்களை சி. வரதன், பா. சந்திரஜோதி, தி. தினிஷா ஆகியோர் பாடியுள்ளனர். 5 பாடல்கள் கொண்ட இவ் இறுவட்டில் 4பாடல்களை யோ.விஜயயோசன் சில்வியும் ஒரு பாடலை சி. இராசரத்தினமும் பாடியுள்ளார்கள்.

இசையினை சி. வரதனும் அணி இசையினை வ. பிரதீபனும் ஒளிப்பதிவினை ஸ்ப்தமி ஒளிப்பதிவுக்கூட சத்தியனும் மேற்கொண்டுள்ளார்கள்.

# குறும்பட இயக்குநர்

## சி.சிவராஜ்



**✱ சிவராஜ்... உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?**

என்னுடைய சொந்த இடம் திருநெல்வேலி. A/L வரை படித்தது சென் ஜோன்ஸ் கல்லூரியில்.

**✱ எப்படி இந்த துறைக்குள் நுழைந்தீர்கள் ?**

2008 ஆம் ஆண்டு A/L முடித்துவிட்டு வீட்டில் இருக்கும் போது இந்தியா செல்ல வாய்ப்பு கிடைத்தது. இந்தியா சென்று S.R.M என்னும் கல்லூரியில் விசூவல் கொமினிக்கேஷன் 3 வருடங்கள் படித்தேன். இதில் திரைப்படம் எவ்வாறு இயக்குவது, கமெராவின் அசைவுகள், எடிட்டிங் போன்றவை பற்றி கற்றுக்கொண்டேன். இதனூடாகவே எனக்கு குறும்படத்துறைக்குள் வரும் சந்தர்ப்பம் கிடைத்தது.

**✱ இந்திய தமிழ்த் திரைப்படங்களில பணியாற்றிய அனுபவங்கள் ஏதாவது உண்டா?**

கல்லூரியில் படிக்கும் போது செய்முறைத் திட்டத்திற்காக விஷால் நடித்த சத்தியம் படத்தின் படப்பிடிப்பின் போது உதவி இயக்குனர்களில் ஒருவராக பணியாற்றியிருக்கிறேன். நிறைய படங்களின் படப்பிடிப்புக்களைப் பார்த்திருக்கிறேன். அங்கெல்லாம் எனக்கு சந்தர்ப்பம் கிடைப்பது குறைவு காரணம் அங்குள்ள இளைஞர்கள் பலர் இத்துறையில் ஆர்வமாக உள்ளார்கள்.

**✱ தற்போது என்ன செய்கிறீர்கள்?**

இப்போது 'பனைமரக்காடு' திரைப்படத்தின் உதவி இயக்குனராகவுள்ளேன். யாழ்.பல்கலைக்கழக நுண்கலைக் கல்லூரியில் புகைப்படத்துறைக்காக வருகை விரிவுரையாளராகவும் உள்ளேன்.

**✱ யாழ்ப்பாணத்தில் புகைப்படத்துறை, சினிமாத் துறையில் முன்னேற்றம் காண இடமுள்ளதா?**

முன்னேற்றம் காணும். எவ்வாறென்றால் வழமையான பாணியை விட்டு வித்தியாசமாக சிந்தித்து புகைப்படம் சினிமா போன்ற துறைகளில் இளைஞர்கள் ஆர்வத்தோடு செயற்பட்டால் முன்னேற்றம் காண வாய்ப்புகள் உண்டு. யாழ்ப்பாணத்தில் புதுவிதமாக சிந்திப்பவர்கள் குறைவு.

## *ஈழத்து குறும்படங்களுக்கான தமிழியல் விருது 2011*

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் தமிழியல் வித்தகர் பட்டமும் தமிழியல் விருதும் பொற்கிழியும் ஆண்டுதோறும் வழங்கி வருகின்றது.

இதன் பிரகாரம் 2010 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 2 குறுந்திரைப்படங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொற்கிழியுடன் கவிஞர் கல்லாறன் மு.கணபதிப்பிள்ளை தமிழியல் விருது துரையூர் வே. நாகேந்திரன் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கையைத் தாயகமாகக் கொண்ட படைப்பாளிகள் 2010 ஆம் ஆண்டு (ஜனவரி 1 ஆம் திகதி டிசம்பர் 31 ஆம் திகதி ) வெளிவந்த குறுந்திரைப்பட இறுவட்டுக்களை தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம். பெயர் , முகவரி ,தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களுடன் இறுவட்டுக்களின் 2 பிரதிகளை ஓகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஓ.கே. குணநாத ன் , மேலாளர் , எழுத்தாளர் ஊக்குவிப்புமையம் , இல 64 , கதிர்காமன் வீதி , அமித்தகழி மட்டக்களப்பு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கலைஞர்களே! குறும்படத்துறை ஆர்வலர்களே!! ஒளிக்கீற்றுக்கள் என்னும் இப் பகுதி உங்களுக்காகவே ஆரம்பிக்கப்படுள்ளது. உள்ளூரில் நீங்கள் குறும்படங்களில் காட்டும் திறமைகளையும், ஈடுபாடுகளையும் வெளி உலகிற்குத் தெரியப்படுத்தவும் உள்ளூர் சினிமாக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவுமே இப்பகுதி. ஆகவே, நீங்கள் தயாரிக்கும் குறும்படங்கள், திரைப்படங்கள் தொடர்பான செய்திகளையும், படங்களையும் இப்பகுதிக்கு அனுப்பிவைக்கலாம்.

நீங்கள் தயாரித்த குறும்படங்களின் இறுவட்டுப் பிரதியை எமக்கு அனுப்பிவைத்தால் அதன் விமர்சனமும் இப்பகுதியில் வெளியாகும்.

**'ஒளிக்கீற்றுக்கள்'**
**யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
**இல. 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

## காயம் - குறும் திரைப்படம்

ஆர். துவாரகனின் தயாரிப்பில் ஆர். நிசாகரனின் இயக்கத்தில் கிமாலயா கிறியேசனின் அளிக்கையாக காயம் குறும் படம் வெளிவந்துள்ளது. ஆறிய காயங்கள் சிலவுண்டு ஆறாத காயங்கள் பலவுண்டு என்னும் கருப்பொருளுடன் இப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது.

வெளியே தெரியும் காயங்களை விட ஆழ் மனத்தே இருக்கும் காயங்கள் காலத்தால் ஆறாது. நெடுங்காலம் அது தொடரும் என்னும் கதையோட்டத்தில் படத்தை உருவாக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காட்சியில் அனர்த்தத்தால் இடிபாடுகளுக்கு உள்ளான பாரிய கட்டடங்களின் புகைப்படத் தொகுப்பான காட்சிப்படிமங்களையடுத்து மனவடுக்களை பூசி மறைக்கும் அபிவிருத்தி செயற்பாடுகள் காட்சியாக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பச்சை மரங்களின் நடுவே பட்ட மரம் ஒன்றை காட்சிக் குறியீடாக காட்டி நபர் ஒருவரை அறிமுகம் செய்து அவர் கல்லறையில் உறங்கிக்கொண்டிருக்கும் நபருக்கு அஞ்சலி செலுத்தும் வேளை பின்னோக்கிய சம்பவமாக இறந்தவர் இனம் தெரியாத நபர்களால் சித்திரைவதைக்குள் உள்ளடக்கப்படுவதை காட்டி மீண்டும் நினைவுகளுடன் அவ்விடத்தை விட்டு செல்வதுடன் காட்சி படிமம் நிறைவு செய்யப்படுகின்றது. இக்கதையோட்டத்தில் பச்சை மரங்களின் நடுவே பட்ட மரத்தை குறியீட்டு படிமமாக்கியதன் மூலம் மனவடுக்களை சுமந்து வாழ்பவர்களின் நிலைமை காட்டப்படுவதுடன் இவ்வடுக்கள் ஆறாது என்பதை சுட்டிக்காட்டுகின்றார். சொல்ல வந்த விடயத்தை காட்சிப்படிமங்களின் ஊடாகவும் உடல் மொழியின் ஊடகவும் சித்தரிக்கப்பட்டுள்ளமை இப்படைப்பிற்கு உயிரூட்டியுள்ளது.



அழிபாடுகளின் காட்சிகள், கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தும் காட்சி, சித்திரைவதைக் காட்சிகள் என்பன யதார்த்தமாகப் படமாக்கப்பட்டுள்ளது.

படத்தொகுப்பு, ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு பின்னணி இசை என்பன சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குறும்படத்திற்கு பலம் சேர்ப்பது அதன் திரைக்கதை. திரைக்கதையினை பி. அனோஜன் எழுதியுள்ளார். இசையினை ஆர். நிசாகரன், பி.பிரணவன் ஆகியோர் அமைத்துள்ளனர். படப்படிப்பு சி. ரங்கதநாதனால் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது.

ஆரம்பக்காட்சி குறும்படத்தைப் பார்க்கத் தூண்டுகின்றது. ஒவ்வொரு காட்சிகளின் தொகுப்பும் நேர்த்தியாக நகர்த்திச்செல்லப்படுகின்றது. சிறிய அசைவுகளின் ஒலிப்பதிவுகளும் மிகத்துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை இவ் இயக்குனரின் சினிமாத்துறையின் நவீனத்தில் உள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

எவ்வளவுதான் மாற்றங்கள் வாழ்க்கையில் வந்தாலும் யாழ்ப்பாணத் தமிழனின் மனதில் ஆறாத பல காயங்கள் உண்டு என்பதை ஆடம்பரமில்லாது அமைதியான முறையில் இயக்குனர் சொல்லுகின்றார். 7' நிமிடங்கள் பயணிக்கின்ற இப்படத்தில் மனித மனங்களில் உள்ள இன்னொரு பக்கம் காட்டப்படுகிறது.

இயக்குனர் ஆர். நிசாகரனும் அவரது நண்பர்களும் இணைந்து உருவாக்கிய படைப்பிற்கான தயாரிப்பு பணியினை ஆ. துவாரகன் செய்துள்ளார். ஆர். நிசாகரன் இயக்குனர் பணியியுடன் ஒளிப்பதிவு, காட்சிப்படமாக்கல், படத்தொகுப்பு என்பவற்றை மேற்கொண்டுள்ளார்.

எஸ். ரி. குமரன்

# இசையமைப்பின் நவீன தொழில்நுட்பங்களை சுய தேடலினூடாகவே கற்றுக்கொண்டேன்

**யாழ்ப்பாணத்திலுள்ள இளம் இசையமைப்பாளர்களில் ஒருவர் சி.வின்சன். இவர் பல இசை அல்பங்களை இசையமைத்து வெளியிட்டுள்ளார். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பயன்பெறும் வகையில் பாடப்புத்தகத்திலுள்ள பாடல்களை இசைவடிவிலாக்கி வெளியிட்டு புகழ்பெற்றுள்ளார். பல குறும்படங்களுக்கும், இசை அல்பங்களுக்கு பின்னணி இசையமைத்து வரும் இவரை யாழ் ஓசைக்காக நேர்கண்ட போது.......**



**கேள்வி: வணக்கம் வின்சன். உங்கள் குடும்பம் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

**பதில்:** யாழ்ப்பாணம் கச்சேரியடி எனது சொந்த இடம். அப்பா,அம்மா இரண்டு தம்பிகளுடன் நான். படித்தது புனித பத்திரிசியார் கல்லூரியில். பின் பலாலி ஆசிரியர் கலாசாலையில்ஆசிரியர் பயிற்சியினை முடித்து தற்பொழுது மு/ மல்லாவி மத்திய கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி: இசைத் துறைக்குள் வரும் ஆர்வம் தங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

**பதில் :** சிறு வயதிலிருந்தே பாடல்கள் கேட்பதில் மிகவும் ஆர்வமுடையவனாயிருந்தேன். எனது மூன்றாவது வயதிலேயே மைக்கல் ஜாக்ஷன் பாடல்கள் (michel jackson's songs), Boeeym போன்றவற்றை விரும்பி கேட்பேன். பாடுவேன். அப்பொழுதே எனது தந்தை எனக்கு ஒரு Melodica வாங்கித்தந்தார். எனக்கு இசையில் ஆர்வம் ஏற்படுவதற்கு அதுவே அடித்தளமாக அமைந்தது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் அளித்த வரம் என்றே சொல்வேன்.

**கேள்வி: ஆரம்பகாலத்தில் உங்களின் இசைத் திறமையை எதனூடாக வெளிப்படுத்தினீர்கள்?**

**பதில்:** பாடசாலையில் பல இசை நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளேன். போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியுள்ளேன். கல்லூரியின் பின் யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் இணைந்து பல நாடகளுக்கு பின்னணி இசைகள் வழங்கியுள்ளேன்.

**கேள்வி: இசையமைப்பதில் அதீத ஆர்வமாக உள்ள நீங்கள் உங்களின் திறமையை வெளிக்காட்டும் வகையில் ஏதாவது செய்துள்ளீர்களா?**

**பதில்:** ஆம், 2004 ஆம் ஆண்டில் colours என்னும் இசை அல்பத்தை உருவாக்கினேன்.பத்துப்பாடல்களை உள்ளடக்கிய இவ் இசை அல்பம் முற்றுமுழுதாக காதலை மையமாகக் கொண்டு உருவானது. எனது நண்பர்களான தர்ஷன், கரிஸ், ஹென்ஸ்மன், ஜெகனி, சிந்துஜா ஆகியோருடன் இணைந்து உருவாக்கினேன். இவர்கள் ஒவ்வொருவரும் இலைமறை காய்களாக வாழும் கலைஞர்கள். கலிஸ் நாடகத்துறையில் முன்னணி இயக்குனர். இவரின் நெறியாள்கையில் கொழும்பில் மூவினக் கலைஞர்களுடன் மேடையேறிய Towords new horizones's என்னும் miming play யில் நானும் ஓர் இசையமைப்பாளராகக் கடமையாற்றியுள்ளேன் என்பது எனக்கு பெருமையான விடயம். இவ் அல்பத்தில் பாடிய ஜெகனி தற்பொழுது இந்தியத் திரைப்படத்துறையில் பின்னணிப் பாடகியாகவுள்ளார்.

எனது இரண்டாவது இசைமுயற்சியான 'வார்த்தை' இசை அல்பமானது அருட்தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜாவுடன் இணைந்து மேற்கொண்டது. ஏழு கிறிஸ்தவ பாடல்களை உள்ளடக்கிய வீடியோ அல்பம்.அருட்தந்தை மிகவும் இனிய மனம் படைத் இசை ஆர்வலர்.அவருடன் இணைந்து பணியாற்றிய அனுபவம் மிகச்சிறந்தது. இதில் நான்கு பாடல்களை பிரபல கவிஞர் நாடக நெறியாள்கையாளர் செ. அ. அழகராஜாவால் எழுதப்பட்டது.


இதற்கான ஒளிப்பதிவு,படத்தொகுப்பினை எனது நண்பரும் பிரபல கிராபிக்ஸ் வடிவமைப்பாளருமான அ.ஜூட்சன் மேற்கொண்டிருந்தார். இவ் இசை அல்பத்தில் ஓர் பாடலைப் பாடிய ரெ. துவாரகன் வளர்ந்துவரும் ஓர் பல்துறைக் கலைஞன் தற்போது 3ஏ மூவிஸ்ஸில் பணியாற்றுகிறார்.

இவ் அல்பமானது இயேசுவின் வாழ்க்கை வரலாற்றின் ஆறு முக்கிய நிலைகளை எடுத்துக் காட்டும் வகையில் அமைக்கப்பட்டது.

எனது மூன்றாவது இசை அல்பம் முற்றுமுழுதாக பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. பாடசாலையில் தரம் 3,4,5 இல் கல்வி கற்கும் மாணவர்களிற்கு பாடப்புத்தகத்தில் உள்ள பாடல்களுக்கு இசை மெட்டுக்களோ அல்லது இசைத் தொகுப்புகளோ இல்லாத பட்சத்தில் அது ஆசிரியர்களிற்கு ஓர் கடினமான பணியாகவே காணப்பட்டது. எனவே அந்நிலையை மாற்றியமைப்பதற்காகவே இதை உருவாக்கினேன். இது ஒரு வருட கால முயற்சி இதற்கு யாழ்.கல்வி வலயத்திலுள்ள 5 பாடசாலைகளிலிருந்து மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து இவ் அல்பத்தை உருவாக்கினேன்.

**நேர்கண்டவர்:**
**ப. அஸ்வின்**

24 பாடல்களை உள்ளடக்கிய அல்பம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தற்போது மிகவும் உதவியாகவுள்ளது. இம் மூன்று இசை அல்பங்களிற்கான ஒலிப்பதிவை பிரபல இசையமைப்பாளரும் sapthami pro music and recording studio வின் உரிமையாளரும்




எனது நண்பருமான கே. சத்தியனால் மேற்கொள்ளப்பட்டது. அவருடன் இணைந்து பணியாற்றியதுனூடாக இசையில் பல நுட்பங்களை அறிந்த கொண்டேன்.

**கேள்வி: தற்கால இளைஞர்கள் இரசிக்கத்தக்கவகையில் பாடல் வரிகளை எழுதியுள்ளீர்கள். பாடல்கள் எழுதும் ஆர்வம் எப்படி வந்தது?**

**பதில்:** சிறு வயதிலிருந்தே கவிதைகள் கட்டுரைகள் எழுதுவதில் அதிகம் ஆர்வமுள்ளவன் நான். அதன் தொடர்ச்சியாகவே பாடல்கள் எழுதுவதிலும் ஆர்வம் ஏற்பட்டது.

**கேள்வி: தென்னிந்தியாவின் இசையுடன் ஒப்பிடும் போது எமது நாட்டின் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இசைத்துறை முன்னேற்றம் கண்டுள்ளதா?**

**பதில்:** எங்கள் நாட்டில் தென் இந்தியாவுடன் ஒப்பிடும் போது இசைத்துறையின் வளர்ச்சி குறைவாகவே காணப்படுகின்றது. அதுவும் யாழ்ப்பாணத்தில் மிகக் குறைவு இதற்கு நவீன தொழிநுட்பங்களை பயன்படுத்தாமையே காரணமாக உள்ளது எனலாம்.மேற்கத்தைய நாடுகளில் இசையமைப்புக்களை மேற்கொள்வதற்கு தற்காலத்தில் பல கணினி தொழிநுட்பங்கள் (Programme softwares) அறிமுகமாகியுள்ளது.

(28ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கிய இன்பம்




**வா**ழ்க்கையானது வரையறைக்குட்பட்டது. வரையறைக்குட்பட்ட மனித வாழ்வின் கால நீட்சியில் பல் வேறு விதமான சவால்களுக் கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வருகின் றோம். இப்பிரச்சினைகளுக் கெல்லாம் மூல காரணம் நான் என்ற அகங்காரமும் அளவு கடந்த ஆசைகளுமாகும்.

இயற்கை நமக்கு பல பாடங்களை சொல்லுகின்றது. இயற்கையிலிருந்து பல பாடங்களை கற்க முடியும். அப்படி கற்றாலும் நடைமு றை வாழ்க்கையில் அவற்றை பொருத்திப் பார்க்க தவறிவிடு கின்றோம். இதன் விளை வாகவே நாம் பல இடர்பாடுக ளுக்கு முகம் கொடுத்து வரு கின்றோம்.

கவிஞன் என்பவன் இயற்கை உணர்த்தும் விட யங்களை கலையழகோடும் கற்பனையழகுடனும் சுவை பட கூறும் திறன் படைத்த வன். இயற்கையின் மொழி களை குறிப்பால் உணர்ந்து சமூகத்திற்கு நல்ல பல விட யங்களை கவிதை வடிவில் கூறும் விதம் அழகுணர்வு உடையது.

அந்த வகையில் வாழ்க்கை யின் நிலையாமை பற்றி விளக்கமுனைந்த கம்பதாசன் என்ற கவிஞர் இயற்கையிலி ருந்து கிடைக்கும் ஒரு நிகழ்வை உதாரணம் மூலம் எடுத்தாண்டுள்ளமை கவனிப் புக்குரியது. கம்பதாசன் கவி தைத் திரட்டு என்ற நூலிலி ருந்து 'உதிர்ந்த மலர்' என்ற கவிதை பற்றி இங்கு நோக்கு வோம்.

*முள்ளுடைச் சிறு செடியின்*
*கனவாய்*
*மூண்டு சிரித்த மலர்*
*கள்ளெனும் பொக்ஷத்தால்*
*விம்மியே*
*கர்வமடைந்த மலர்*
*பனித்துளி மணி சூடி*
*தென்றலின்*
*பாட்டினைக் கேட்ட மலர்*
*கனிந்துள்ள விண்ணை*
*தன் கீழ் மௌனக்*
*கல்வியைக் கற்ற மலர்*
*அந்திச்சிவப்பினையும்*
*விண்மீன்*
*அழகின் விழிப்பினையும்*
*சிந்தையில் கொண்ட மலர்*
*மனமே*
*செய்து திளைத்த மலர்.*
*வீழ்ந்து கிடக்குதையோ*
*உச்சி*
*வெயிற் சுடலையிலே*
*வாழ்வின் விருப்பங்களை*
*மண்ணிலே*
*வரைந்துள்ளதோ வண்டே*

இக்கவிதையிலிருந்து வண் டினை முன்னிலைப் படுத்தி சுடலையிலே வளர்ந்து காணப்படும் முட்களை உடைய செடியொன்றில் மலர் ந்த மலரை மனித வாழ்வுடன் ஒப்பிட்டுள்ளார். மலரின் வாழ்வு ஒரு நாள் மட்டுமே ஆனால் கவிஞர் குறிப்பிடு கையில் அந்த முட்கள் நிறைந்த செடியில் மலர்ந்த அப்பூவானது தன்னிடமுள்ள சில சிறப்பியல்புகளை எண்ணி கர்வம் கொள்கிறது. அதாவது இயற்கையிலே உண்டான வாசனை, தேன், பாதுகாப்பு அரண்களாக விளங்கும் முட்கள் என பல சிறப்புப் பொருந்திய விடயங் களால் அம்மலர் கர்வம டைந்து காணப்படுகிறது. அது மட்டுமன்றி பாடலின் இரண்டாம் பந்தியில் பனித்து ளியை கிரீடமாக சூடி தென் றல் காற்றின் இனிமையான இசையை ரசித்தபடி இருக் கின்றது.

மேலும் கவிந்திருக்கும் வானத்தின் கீழிருந்து மௌனக் கல்வியை கற்ற வண்ணம் இருக்கிறது. இவ்வாறே மூன்றாம் பாடலி லும் மலரின் ரசனையுணர்வு புலப்படுத்தப்படுகிறது. இறுதிப்பாடலில் கவிஞர் வாழ்வியல் நிதர்சனத்தை அப் படியே படம் பிடித்து காட்டுகி றார். ''வீழ்ந்து கிடக்குதையோ ....'' என்ற பாடல் வரிகள் மூலம் குறுகிய கால வாழ்க் கையில் அந்த மலரின் கர்வத்தையும், மிடுக்கையும் பெருமைகளையெல்லாம் எடுத்துக்காட்டுகிறார்.

ஆனால் அம்மலரின் வாழ் வியல் காலம் முடிந்து அதன் கோலத்தை கண்ட கவிஞர் மனித வாழ்க்கையும் இப்ப டியே அவலமாகிப் போகக் கூடியது என்கிறார். இதுவே வாழ்வியல் சக்கரத்தின் சுழற்சி என குறிப்பால் எமக்குரைத்துக் கூறுகிறார். ஒரு மூலையில் பூத்த மனிதப் பூவின் பண்பும் பயனும் வெ ளியுலகு அறியாத வண்ணம் மறைந்து விடுகின்றன. இத னை கவிஞர் ''வாழ்வின் விருப்பங்களை மண்ணில் வரைந்துள்ள வண்டே'' என வண்டை நோக்கி கேட்பதன் மூலம் மனித வாழ்வில் நாம் எவற்றைச் சாதித்தோம். இந்த வாழ்வின் இறுதியில் நாம் கண்டது ஒன்றுமில்லை.

வெறும் பட்டம், பதவிகள், பணம், புகழ் என்பவையெல் லாம் குறுகிய கால சந்தோ ஷத்திற்குரியவை. வாழ்வின் அர்த்தங்களைப் புரிந்து கொண்டு செயற்பட வேண் டும் என்ற கவிஞரின் நோக் கம் தெளிவாகப் புலப்படுகி றது.

உதிஷ்ரன்

# உளர் புதினம்



த்தத்தால் இறந்த வர்களது தொகையை விட நீரிழிவு (சலரோ கம்) நோயால் இறந் தவர்களது தொகை தான் நாட்டில் அதி கம்.

இது அண்மையில் பாராளுமன்ற உறுப் பினர் ஒருவரால் பாராளுமன்ற விவா தமொன்றில் கூறப்பட்ட வாசகமா கும்.

யாழ்.மாவட்டத்தி லும் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்பு ணர்வைப் பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் மருத்துவர் சிலரால் ஓர் சமூக சேவை அமைப்பு ஏற்படுத்தப்படுத்தப்பட் டுள்ளது.

அரசாங்கமும் பாடசாலை சிற் றுண்டிச்சாலைகளில் கோதுமை மாவி னால் செய்யப்பட்ட சிற்றுண்டிகளை விற்கக்கூடாது என்ற நடைமு றையைக் கொண்டுவரவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அரிசிமாவினாலும், அரிசியினாலும் செய்யப்பட்ட உணவு வகைகளை, (சிற்றுண்டி) ஊக்கிவிக்க வேண்டு மென்ற தற்போதைய அரசாங்கத்தி னது கொள்கை வரவேற்கத்தக்கது.

நெல்லை விளைவிக்கும் விவசாயி கள் தமது நெல்லை விளைவித்து விற்க முடியாமல் கஷ்டப்படுகின்ற னர். சிலர் தற்கொலையும் செய்து முள்ளனர். அதே வேளை கோதுமை யின் இறக்குமதிச் செலவிற்கும் அன்னிய செலாவணி இல்லாமல் அர சாங்கம் பொருளாதார நெருக்கடியால் திணறுகிறது.

கோதுமை மாவின் அதிக பாவனை, உடற்பயிற்சியின்மை, மன அழுத்தம், பரம்பரை போன்ற காரணங்களால் நீரி ழிவு நோயின் வீதம் ஜெற் வேகத்தில் அதிகரித்துச்செல்கிறது.

யாழ்.குடா நாட்டில் எமது முன்னோர் கள் ஒடியல்மா, குரக்கன், சாமை, திணை போன்றவற்றின் மாவினை உணவுக்காகப் பயன்படுத்தி ஆரோக் கியமாக வாழ்ந்துள்ளனர்.

முன்னோர்களின் நல்ல வாழ்க்கை முறையை நாம் கற்று நோயற்ற சமூ கம் உருவாகக் கைகொடுப்போம்.

● சிவகாமி -

# யாழ் மாவட்ட ஆழ்கடல் மீன்பிடித்துறையின் அபிவிருத்தியும் எதிர் நோக்கும் சவால்களும்

*(சென்ற வாரத்தொடர்ச்சி...)*




**கலாநிதி**
**திருமதி சிவசாந்தினி குகநாதன்**
*இணைப்பேராசிரியர், விலங்கியற்துறை,*
*யாழ் .பல்கலைக்கழகம்*

இதற்குத் தேவையான வலைகளும் ஏனைய தொழில்நுட்பச் சாதனங்களும் IOM இனால் வழங்கப்பட்டுள்ளது. Ocean Perlyn 2009 ஆம் ஆண்டின் இறுதியில் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் நாட்டுநிலமை காரணமாக பத்து மாதமாக காரைநகர் கடற்படைத்தளத்தில் ஓய்வில் இருந்தது. Ocean Perlyn தனது முதற் கடற்பயணத்தை 17.11.2010 அன்று காரைநகர் கடற்படைத்தளத்திலிருந்து கப்டன் நிமால் பெர்னாண்டோவுடனும் இன்னும் 5 தொழிலாளர்களுடனும் ஆரம்பித்தது. இப்படகானது வடபகுதிக்கடற்பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 250 மைல் தூரம் வடகிழக்குக் கடற்பகுதி வரை மீன்பிடியில் ஈடுபட்டுள்ளது. இது யாழில் ஆழ்கடல் மீன்பிடி வளர்ச்சிக்கான அல்லது அபிவிருத்திக்கான ஓர் அறிகுறி எனலாம்.

ஆழ் கடல் மீனினங்களான Scombrids, Istiophorids எனும் பிரதான இனங்களைப் பிடிப்பதற்கு பெரிய கண்ணுடைய வழிச்சல் வலைகள், மிதப்புத்தூண்டில், கம்புத் தூண்டில், சுற்றி வளைக்கும் கூட்டு வலை, சுருக்கு வலை, ஊடு வலை, ஓடு கயிற்றுத் தூண்டில் முதலிய மீன்பிடி உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எல்லாப்பாரை மீனினங்களும் (carangid) இரை கௌவி வாழ்க்கை முறைக்குரியவை. இவை இரை கௌவித் தூண்டில்களால் பிடிக்கப்படுகின்றன. ஆனால், சில இனங்கள் இறால்களினால் அல்லது உயிருள்ள மீன்களுடனான மிதப்புத் தூண்டிலினால் கவரப்படுகின்றன. பெரும்பாலான இனங்கள் பகல் வேளைகளில் அடித்தள இழுவை வலைகள் மூலம் பிடிக்கப்படுகின்றன. அத்துடன் இவை அடித்தள படுப்பு வலை அல்லது வழிச்சல் வலைகளாலும் பிடிக்கப்படுகின்றன. சில ஒளி இழுவலை அல்லது சுற்றிவளைக்கும் வலைகள் மூலம் அதிக எண்ணிக்கையில் பிடிக்கப்படுகின்றன.




உரு 03. இலங்கையின் மொத்த மீன்பிடி உற்பத்தி (1972 முதல் 2005 வரை) கரையோர, கரைப்பாலான/ ஆழ்கடல், உள்நாட்டு மீன்பிடி உற்பத்திக்கான வரைபு.

பெரிய கண்ணுள்ள மிதப்பு வலையானது பிரதான மீன்பிடி உபகரணமாக கரைக்கப்பால் ஆழமான கடற்பரப்பில் மீன்பிடியில் பயன்படுத்தப்படுகின்றது. மிதப்புத் தூண்டில் (drift long line) ஆனது பிரதா னமாக சுறாக்கள் பிடிக்கப்பயன்படுத்தப்படுகின்றது.

Ocean Perlyn இல் தற்போது படுப்பு வலைகள் மட்டுமே பயன்படுத்தி மீன்கள் பிடிக்கப்படுகின்றன. எனினும் மிதப்புத் தூண்டில், சுருக்கு வலை, கைவலை போன்றனவும் இப்படகில் பயன்படுத்தக்கூடிய வசதிகள் உண்டு. இப்படுப்பு வலைகள் 50 துண்டுகள் அடங்கிய அண்ணளவாக 5 Km நீளத்தைக் கொண்ட நைலோன் வலைகளாகும். 2009 ஆம் ஆண்டின் புள்ளிவிபர அறிக்கையின் படி இவற்றால் ஒரு தடவையில் சராசரியாக 2500 kg முதல் 3000 kg வரையான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. பிடிக்கப்படும் மீனினங்களில் சராசரியாக 65 % Skip jack tuna உம், 15 % Yellow fin tuna உம் 19 % sail fish உம், 5% சுறாக்களும், 5% திருக்கையும் பிடிக்கப்ப டுகின்றன.

ஆழ் கடல் மீன்பிடியினைப் பற்றிக் கூறும் போது அதனுடன் மிக நெருங்கிய தொடர்புடைய துறைமுக வசதி பற்றி எடுத்தியம்பலும் அவசியமாகின்றது. மீன்பிடித்துறைமுகம் எவ்வாறு அமைய வேண்டும், அங்கு என்னென்ன வசதிகள் காணப்படல் வேண்டும் என அவதானிப்பதும் மிகப் பொருத்தமானதாயிருக்கும்.

அறுவடை செய்யப்படும் மீன்கட்கும் அவற்றின் நுகர்தலுக்கும் இடையே தொழிற்படுகின்ற மையமாக மீன்பிடித் துறைமுகத்தை நோக்கலாம். ஓர் மாதிரி மீன்பிடித் துறைமுகமானது மீனைக் குளிரூட்டி பாதுகாக்கும் வசதிகள், மீன் பதனிடும் வசதிகள், பனிக்கட்டி உற்பத்தி செய்யும் வசதி, நிர்வாக அலகு மற்றும் ஏனைய வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

அவையாவன எரிபொருள் வழங்கும் நிலையம், படகு திருத்தும் அலகு, கப்பல் சறுக்குத் தடம், படகுகளைச் சீர் செய்யும் இடம், போக்குவரத்துக்கான பாதைகள், தனியார் வர்த்தக வாகனங்கட் கான தரிப்பிடம், இறக்க ஏற்ற வசதியான அகலமான கட்டடம், வலை திருத்தும் மன்றம், எதிர்கா லத் தேவைகட்கு விரிவாக்கத்துக்கான இடங்கள் என்பனவும் துறைமுகத்தில் காணப்படல் அவசியம்.

தற்போது யாழ்ப்பாணத்தில் சிறந்த துறைமுக வசதிகள் எதுவுமே காணப்படவில்லை. வடக்கின் வசந்தத்தின் கீழும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்களின் கீழும் துறைமுகம் அமைத்தல், சீர் செய்தல் உள்ளடக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

*(தொடரும்)*

# கவிதைகள் மாதிரி

கடந்த
இரவுகளில்
களவு
போனேன்!
நுளம்பு
வலைக்குள்
எப்படி
வந்து போனாய்....

முன்பள்ளி
ரீச்சர்
மாதிரி
நீ....என்னை
மேய்ப்பது
அதிகம் அதிகம்
எனக்கு
பிடித்துப்போனது!

xxxxxxx

கூந்தலுக்குள்
ஒழித்துப்பிடித்து
விளையாடும்
காது மடல்களை
வன்மையாக்
கண்டிக்கிறேன்!
கருணாநிதியைப்
போல....

சிவப்புக் கல்லுத்
தூக்கணத்தால்
சித்திரவதை
கூடமாகிறது
என்....
படுக்கைஅறை!

xxxxxxx

என்னை
நேசித்தாயோ....?...
சோதித்தாயோ....?...
உன்னால்
பாதிக்கப்பட்டவர்கள்
பட்டியலில்
நான்....
முதலிடம்.....

குழந்தையாகவாவது
இருந்திருக்கலாம்
நீ.....
தூக்கி அணைக்கும்
ஸ்பெஷல்
பிரியத்துக்காய்....

xxxxxxx

இதுவரை
பார்த்திராத பனித்துளி
அப்போது
கன்னக்
குழியோரத்தில்
ஒரு
"பரு" இருந்ததே!

மனசுக்கு
உன்னை
எப்போது
பிடித்ததோ!
ஆறுதல்
கிராம் அளவிலேனும்
இல்லை.....

xxxxxxx


காதல்
தொழிற்சாலையில்
கனவுகளை
மட்டுமே!
நெசவு
செய்ய
முடிகிறது....

நீ
விற்றுக்கொண்டிருந்த
போதுதான்
காதலை...
வாங்கி
வந்தேன்!

xxxxxxx



நெடுந்தீவு
முகிலன்




# மாகாண ஹொக்கிப் போட்டியில் யாழ்ப்பாண அணிகள் சம்பியன்

அரியாலை,

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியானது கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளின் ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் , யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன. சென். ஜேன்ஸ் அணியானது தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை கோலாக மாற்றத் தவறி விட யூனியன் கல்லூரி தமக்குக் கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களையும் கோலாக மாற்றி 2:0 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரியினை வீழ்த்தி மாகாணச் சம்பியனாகியது. இரண்டாமிடத்தினை சென். ஜோன்ஸ் கல்லூரியும் மூன்றாமிடத்தினை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் யாழ். உடுவில் மகளிர் கல்லூரியும் வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையும் மோதிக்கொண்டன. மிகவும் பலமிக்க உடுவில் அணியினை வெற்றிகொள்வதற்கு வவுனியா சுந்தரபுர அணியானது கடுமையாக விளையாடினாலும் அவர்களினால் உடுவில் கல்லூரியினை வெற்றி கொள்ள முடியவில்லை. இறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:0 என்ற கோல்களினால் வெற்றி பெற்று மாகாணச் சம்பியனாகியது. இரண்டாமிடத்தனை வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையும் மூன்றாமிடத்தினை யாழ். குளமன்கால் றோ.க.த.க. பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

## வடமாகாண கூடைப்பந்தாட்ட போட்டியின் இறுதி முடிவுகள்

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டிகளின் ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரியும் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் சிறப்பாக விளையாடினாலும் மத்திய கல்லூரி 63:54 என்ற புள்ளிகளினால் இலகுவான வெற்றியினைப் பெற்று மாகாணச் சம்பியன் பட்டத்தினை மீண்டும் பெற்றுக் கொண்டது. இரண்டாமிடத்தினை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மூன்றாமிடத்தினை யாழ். இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. இதில் யாழ். சென் .பற்றிக்ஸ் கல்லூரி 12 வருடங்களின் பின்னர் மாகாணமட்டத்தில் 2ஆம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய சுற்றுப்போட்டியில்

## ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி

அரியாலை, அச்சுவேலி,

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2011 ஆம் ஆண்டிற்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆண்கள் ஏ பிரிவின் இறுதிப் போட்டி அண்மையில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் க.ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் ஆவாரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன. போட்டியானது தொடங்கியதிலிருந்து மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இரு அணி வீரர்களும் வெற்றியினை தமதாக்கிக் கொள்வதற்காக மிகவும் தீவிரமாக விளையாடிப் பார்வையாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். முதல் சுற்றினை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் போராடி 25:23 என்ற புள்ளிகளில் வென்றது.

அடுத்த சுற்றினை ஆவாரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் இலகுவாக 25:14 என்ற புள்ளிகளில் வெற்றி பெற்றது. அடுத்த இரண்டு சுற்றுக்களையும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:23, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி கொண்டு 2011 ஆம் ஆண்டுக்கான சம்பியனாகியது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக மாநகர சபை முதல்வர் திருமதி. யோகஸ்வரி பற்குணராஜாவும் மனித நேய ஈகையாளரும் ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் நாகரத்தினம், இலங்கை வங்கி பிரதம முகாமையாளர் ஏ.மாகா தேவா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்.

# பிரதேச செயலகப் போட்டிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்

தெல்லிப்பழை,

யாழ். மாவட்ட பிரதேச மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையில் மாவட்ட ரீதியில் நடைபெற்ற பெரு விளையாட்டு மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 102 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவாகியுள்ளது. மேற்படி போட்டியில் இரண்டாமிடத்தினை 51 புள்ளிகளைப் பெற்ற நல்லூர் பிரதேச செயலக அணியும் மூன்றாமிடத்தினை 41 புள்ளிகளைப் பெற்ற யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியும் தெரிவாகியுள்ளன.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். மாவட்ட அதிகாரி கே. எவ். ஜே. ரூபசிங்கம் தலைமையில் நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கான கேடயங்களை வழங்கி வைத்தார்.

# இசையமைப்பின்...

*(25ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தென்னிந்திய திரைப்படத்துறையிலும் இவ்வாறான தொழிநுட்பங்கள் மூலமே இசையமைத்து வருகிறாள்கள். இதன் மூலமே இசையின் துள்ளியமான தன்மை, இனிமை என்பவற்றை அதிகரிக்கச் செய்ய முடிகின்றது. எனவே நாங்களும் அவ்முறைக்கு மாறவேண்டும். நேரடியாக வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தும் அதே நேரம் இத்தொழிநுட்பத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டும். இதற்காக தற்பொழுது Logic,protool, reason, FL Studio போன்ற proggrammes காணப்படுகின்றன. இவற்றின் உதவியுடன் ஒரு பாடலுக்கு இசையமைக்கும் போது இனிமை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

**கேள்வி: உங்கள் இசை வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவங்கள் ஏதாவது உண்டா?**

**பதில்:** மறக்க முடியாத அனுபவங்கள் பல... 2004 ஆம் ஆண்டு colours அல்பம் வெளியிட்டபோது கொழும்பிலுள்ள தனியார் வானொலி ஒன்று என்னுடன் ஓர் நேர்காணலை மேற்கொண்டது. அதனை என் இசைப்பயணத்தில் ஒரு பெரும் வெற்றியாகவே கருதுகின்றேன். மேலும் குழந்தை சண்முகலிங்கம் ஆசிரியரின் நாடகமான 'எந்தையும் தாயும் ' என்னும் நாடகத்தை சோ. பத்மநாதன் மொழிமாற்றம் செய்து ஆங்கிலத்தில் மேடையேற்றியபோது அந்நாடகத்திற்கான பின்னணி இசையை நான் வழங்கியது எனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

**கேள்வி: எமது நாட்டில் பல இசைக் கலைஞர்கள் வெளி உலகிற்கு தெரியாதவர்களாக உள்ளார்கள் இவ்வாறானவர்கள் வெளிப்படுவதற்கு எவ்வாறான ஒத்துழைப்புக்கள் தேவை என எதிர்பார்க்கிறீர்கள் ?**

**பதில்:** தற்பொழுது 3ஏ மூவிஸ் என்னும் சர்வதேச நிறுவனம் யாழ். மண்ணில் தடம் பதித்து பனைமரக்காடு என்னும் திரைப்படத்தை தயாரித்து வருகின்றது. இது மிகவும் மகிழ்வான விடயம். எமது பிரதேசத்தில் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு இது ஒரு அடித்தளமாக அமைந்துள்ளது.

இவ் நிறுவனம் எங்களைப் போன்ற கலைஞர்களை ஊக்கிவிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை ஒரு பாடல் மக்கள் மனதில் முழுமையாக இடம்பிடிக்க வேண்டுமாயின் அதற்கான வீடியோ காட்சியினூடாக நிறைவேறும். வீடியோ காட்சியை தயாரிப்பதற்கான பெரும் பொருட்செலவினை சாதாரணமான கலைஞர்களால் மேற்கொள்ளமுடியாது. இவ்வாறான நிறுவனங்கள் மூலமே அது நிறைவேறும். எனவே எம் நாட்டிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், அமைப்புக்கள் உள்ளூர்கலைஞர்களை ஊக்குவிக்க முன் வர வேண்டும்.

**கேள்வி: பின்னணி இசையமைப்புக்கான நவீன தொழிநுட்பங்களை எவ்வாறு கற்றுக்கொண்டீர்கள்?**

**பதில்:** இசைத்தறையில் நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான கல்வியினைக் கற்பதற்கு எந்தவொரு கல்லூரியும் எமது பிரதேசத்தில் இல்லை. எனது சொந்த முயற்சியால் கற்றுக் கொண்டேன். இதனைக் கற்க எனக்கு இரண்டு வருடங்கள் தேவைப்பட்டது. அதன் பின் பலருக்கு அதனை கையாள்வதற்கான ஆலோசனைகளை வழங்கி வருகின்றேன். என்னுடைய சுயமான தேடலினூடாகவே பல நவீன தொழிநுட்ப விடயங்களைத் தெரிந்துகொண்டேன்.

**கேள்வி : தற்போது இசை வளர்ச்சிக்காக என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?**

**பதில்:** தற்பொழுது வடமராட்சி மண்ணில் பிரபல பாடகரும் நெல்லியடி வர்த்தக வங்கியின் நிறைவேற்று அதிகாரியும் எனது நண்பருமான கங்காதரனுடன் இணைந்து ' மண்வாசக்காற்று ' என்னும் இசை அல்பத்தினை உருவாக்கி வருகின்றேன். இது என்னுடைய மிகப் பொரிய முயற்சி.

இரண்டு வருட காலமாக உருவாகிவரும் இம்முயற்சி தற்பொழுது நிறைவுக்கு வந்துள்ளது. 12 வித்தியாசமான பாடல்களைக் கொண்டு உவாகியிருக்கும் இவ் இசை அல்பம் பல வித்தியாசமான குரல்வளமுடைய பாடகர்களால் பாடப்பட்டுள்ளது. இதற்கான பாடல் வரிகளை எழுதியவர்களில் கவிஞர் ந. சத்தியபாலன் எழுதிய பாடல்களில் ' உயிர் விதை முளைக்கும் விளை நிலமே' என்னும் பாடல் நிச்சயமாக எல்லோரையும் கவரும். இசை அல்பத்திற்கான ஒலிப்பதிவை பிரபல இசையமைப்பாளரும் எனது நண்பருமான ஜெரி ஸ்ரலின் மேற்கொள்கின்றார்.

நான் இவ் இசை அல்பத்தின் மூலம் இந்திய, மேற்கத்தைய திரைப்படப் பாடல்களுக்கு சவால் விடுக்கின்றேன்.' மண்வாசக்காற்று' யாழ். மண்ணில் இசை அல்பங்களில் ஒரு திருப்புமுனையாக அமையும் என நான் நம்புகின்றேன்.

# இருண்ட குகைக்குள் ஐந்து தலை நாகம்



தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே நெருப்பூர் கிராமத்தை ஒட்டி அடர்ந்த வனப்பகுதியில் ஒரு விசித்திரமான கோயில் உள்ளது. பாறையும் அரச மரத்தின் அகண்டு திரண்ட வேர்களும் பின்னிப்பிணைந்து பயமூட்டும் இருண்ட குகை. அதனுள் ஆண்டு முழுவதும் வற்றாமல் சலசலக்கும் நீரூற்று. ஊற்றில் எழுந்தருளியிருக்கும் சாமி சிலைகள்.. இவற்றோடு 500 ஆண்டு பழமையானதாக கூறப்படும் குகைக்குள் புதைந்து கிடக்கும் மர்மங்கள் என முத்தையன் கோயிலில் திகிலுக்கு குறைவில்லை.

இருண்டு நீளும் குகைக்குள் குனிந்து சென்று சாமியை கும்பிடுகிறார்கள். 20 அடி அகலம் 6 அடி உயரம் உள்ள குகைக்குள் ஒரே சமயத்தில் 6 பேர் மட்டுமே இருந்து வழிபாடு செய்ய முடியும். குகைக்குள் நீரூற்று பொங்குகிறது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக எந்த காலத்திலும் வற்றாமல் அதிசய ஊற்றாக இருப்பதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். குகைக்குள் நூற்றுக்கணக்கில் வவ்வால்கள் இருக்கின்றன. இவை முத்தையன் சாமியை வேண்டி தவம் செய்து கொண்டிருப்பதாக கிராம மக்கள் நம்புகிறார்கள்.

திருவிழா காலங்களில் அதிர்வேட்டு மேள தாள சத்தம் பக்தர்கள் கூச்சல் என எதற்கும் வவ்வால்கள் அஞ்சுவதே இல்லை. தவத்தை கலைக்காமல் எந்த சலனமும் இன்றி தொங்கிக் கொண்டிருக்கின்றன என பக்தியுடன் கூறுகிறார்கள். 'வவ்வால்கள் எப்போது வெளியே பறக்கின்றன எப்போது குகைக்கு வருகின்றன என்பதெல்லாம் இன்னும் அதிசயமாகவே இருக்கிறது' என்று சொல்லும் மக்களின் பேச்சில் திகிலுக்கு பஞ்சமில்லை.

முத்தையன் கோயில் குகையில் ஐந்து தலை நாகம் ஒன்று வசித்து வருகிறதாம். சாமிக்கு பின்னால் நீளும் இருள் கவ்விய இடத்தில்தான் பாம்பு வாசம் செய்கிறது. ஆளரவமில்லா நேரத்தில் குகையை சுற்றி சுழன்று வருகிறது என்று சொல்லி ஆச்சரியப்பட வைக்கிறார்கள் கிராமத்தினர். 'ஐந்து தலை நாகம் எதுவும் இங்கு இல்லை. 5 பாம்புகள் என்பதைத்தான் அப்படி சொல்கிறார்கள்' என்கின்றனர் வேறு சிலர். கோயில் பூசாரி கூறும்போது 'குகையில் சிலைகளுக்கு பின்னால் 5 பாம்புகள் இருப்பது உண்மைதான். அதுகளை அடிக்கடி நான்பாத்துருக்கேன். பக்தர்களை அது எதுவும் செய்யாது' என்றார்.

சந்தன கடத்தல் வீரப்பன் இக்கோயிலுக்கு அடிக்கடி வந்து வழிபட்டு செல்வான் என நெருப்பூர்வாசிகள் கூறுகின்றனர். முத்தையன் சாமியை வீரப்பன் இஷ்ட தெய்வமாக நினைத்து வழிபட்டதாகவும் இக்கட்டான சூழ்நிலைகளில் இங்கு வந்து வழிபாடு செய்வான் என்றும் சொல்லி வியப்பூட்டுகிறார்கள். காடுகளில் மறைந்து வாழ்ந்த மம்பட்டியானும் இந்த தெய்வத்தை இஷ்ட தெய்வமாக கருதி வணங்கி செல்வானாம்.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [24.06.11 முதல் 30.06.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலாபலன்களே அமையும். தொழில் சார்ந்த வேலைப்பளு அதிகமாக இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு தடைகள் அமையும். பண வரவு சற்று சுமாரான மத்திமமான நிலையிலேயே ஏற்படும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலனுண்டு. சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.




### இடபம்

இடபராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வான அனுகூலமான பலன்கள் அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. தொழில் நிலையில் முன்னேற்றங்கள் அமையும் நிலை இருக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.




### மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலனே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். பண வரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும். குடும்பத்தில் சிறு சிறு மந்தமான பலன்கள் இருக்கும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் நிதானம் வேண்டும்.



### கடகம்

கடகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். எதிர்பாராத திடீர் செலவீனம் ஏற்படும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் இருக்கும். பண வரவு சற்று மத்திமமாகவே அமையும் நிலையுண்டு. தொழில் சார்ந்த திடீர் செலவுகள் அமைய இடமுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலம் ஏற்படும். பெண்கள் நிதானம் தேவை. மாணவர்களுக்கு அனுகூலமுண்டு.




### சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் ஏற்படும். குடும்பத்தில் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமாக அமையும் நிலையுண்டு. உறவினர்களின் மூலமாக நன்மைகள் அமைய இடமுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு சற்று அலைச்சல் நிலை இருக்கும். தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகம் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் அனுகூலமான பலனும் ஏற்படும். எதிர்பாராத வகை திடீர் பிரயாணங்கள் அமையும் நிலை உண்டு. பண வரவு ஓரளவிற்கு அனுகூலமாய் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலன்கள் இருக்கும். பெண்கள் சற்று நிதானம் தேவை. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.




### துலாம்

துலாராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சிறப்பான வெற்றிகள் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் மகிழ்வும் சிறப்பான வெற்றிகளும் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு வெற்றி உண்டு. மாணவர்களுக்கு சிறப்புகள் அமையும்.




### விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான பலாபலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி இருக்கும். பண வரவு சற்று சுமாரான மத்திமமான பலனே ஏற்படும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனம் மருத்துவ நிலை இருக்கும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை அமைந்திருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.




### தனுசு

தனுராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்களே அமையும். தொழில் நிலையில் வேலைப்பளு சற்று அதிகமாக அமையும். எடுக்கும் முயற்சிகளில் ஓரளவிற்கு வெற்றிகள் அமைகின்ற நிலை உண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு சுமாரான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு அனுகூலம் உண்டு. மாணவர்கள் நிதானம் தேவை.




### மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலாபலன்களே அமையும். தொழில் நிலைகளில் நிதானம் வேண்டும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு தடைகள் இருக்கும். குடும்பத்தில் சற்று மந்தமான பலாபலன்களே ஏற்படும். பண வரவு சற்று சுமாரான மத்திமமான பலனே அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் இருக்கும். பெண்களுக்கு மத்திமமான பலன் ஏற்படும். மாணவர்கள் நிதானம் தேவை.



### கும்பம்

கும்ப ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றி அமையும். தொழில் நிலையில் முன்னேற்றம் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் அனுகூலமான பலன்களும் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு அனுகூலமுண்டு.



### மீனம்

மீனராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. பண வரவு சற்று சுமாரான மத்திம நிலையிலே அமையும். தாயார் வழியில் சற்று செலவீனங்கள் ஏற்படும் நிலை இருக்கும். கடன் நிலைகளில் மத்திமமான பலன்களே ஏற்படும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

# பாடசாலை கல்வித்துறை

## ஓர் உள்ளக தரிசனம்



*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

பாடசாலைகளின் வளப்பகிர்வும் வேறுபாடும் கல்வித்தரத்தை பாதிக்கின்றது. செல்வாக்குள்ள அதிபர்கள் அரசாங்கத்தால், அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கூடிய வளங்களைப் பெற்றுவிடுவார்கள். கணினி, தளபாடம், கட்டடம், நூல்கள் போன்றவற்றை அவ்விதம் அதிகம் பெற்று விட செல்வாக்கு குறைந்தோர்களின் பாடசாலை வளங்கள் குறைந்துவிடும். இதனால் அத்தகைய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகவும் மன உளைச்சலுக்குள்ளாகுவதும் கல்வித் தரத்தை பாதிக்கச் செய்கின்றது. ஆசிரியர்களின் சிரேஷ்ட நிலை மதிக்கப்படாத தன்மையும் பாடசாலைக் கல்வியின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கின்றது.

உப அதிபர், பகுதித்தலைவர், ஒழுக்காற்றுக்குழு என்பவற்றுக்கு ஆசிரியர்களை பாடசாலை அதிபர்கள் தமக்கு இசைவாக தேடிப்பிடித்து நியமித்துவிடுவார்கள். இதில் ஆசிரியர்களின் திறமை சிரேஷ்டநிலை மதிக்கப்படுவதில்லை.

இதனால் மனம் நிறைந்த உளைச்சலுடன் ஆசிரியர்கள் செயற்பட்டால் கல்வித்தரம் வீழ்ச்சியடைவதைத் தவிர்க்க முடியாதல்லவா. பாடசாலைகளில் கிடைக்கப்பெறும் கணினி, மல்ரிமீடியா, போட்டோகொப்பி இயந்திரம் போன்றவற்றை ஒரு சிலர் மட்டும் கையாள அனுமதிக்ககப்படுவதால் ஆசிரியர் பலர் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். மாணவர்கள் பழுதாக்கிவிடுவார்கள் எனக் கூறி கணினியைப் பாவிக்க விடாமல் தடுக்கும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

சில பாடசாலைகளின் அதிபர்கள் வெளிவேலை எனக் கூறிப் பாடசாலையை விட்டு வெளியே திரிவதிலேயே நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் ஆசிரியர் மாணவர் மீதான கட்டுப்பாடுகள் முறைப்பாடுகள் முறையாக மேற் கொள்ளப்படுவது இல்லை. பலபாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் தவணைப் பரீட்சைகளின் போது கைவேலை சித்திரம் வாசிப்பு அழகியல் ஆகிய பாடங்களுக்கு அதிக புள்ளிகள் வழங்கப்படுகின்றது. இது இன்றும் தொடர்கின்றது. இதனால் திறமை மிக்க பிஞ்சு உள்ளங்கள் ஆரம்பத்திலேயே கருக்கப்பட்டு விடுகின்றார்கள். கிராமப்புறப் பாடசாலைகளில் சாதிப் பாகுபாடு காட்டி புள்ளியிடும் அநியாயம் காலம் காலமாகவே தொடர்கின்றது.

> **பாடசாலைகளில் கிடைக்கப்பெறும் கணினி, மல்ரிமீடியா, போட்டோக் கொப்பி இயந்திரம் போன்றவற்றை ஒரு சிலர் மட்டும் கையாள அனுமதிக்கப்படுவதால் ஆசிரியர் பலர் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். மாணவர்கள் பழுதாக்கிவிடுவார்கள் எனக் கூறி கணினியைப் பாவிக்க விடாமல் தடுக்கும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.**

### வீட்டில் கவனிப்பின்மை

வீட்டுவேலை 'தோட்டவேலைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தல்' பெற்றோர் தொலைக்காட்சி பார்ப்பதில் நாட்டம் செலுத்துதல் போன்றவற்றால் வீட்டில் கல்வி தொடர்பான மேற்பார்வை குறைகின்றது. இதனால் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர் தொகையும் அதிகரிக்கின்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நோக்கி இயந்திரமாக மாணவர்களை இயக்கி விடுகின்றனர். செயற்கைத்தனமாக வலுவூட்டப்படுவதால் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் பெற்றோரின் கவனிப்பில் அக்கறையற்ற தன்மை உருவாகின்றது.

கெட்டிக்காரப்பிள்ளை தன்பாட்டில் படிக்குமென விட்டு விடுகிறார்கள். இதனால் இம் மாணவர்களின் கல்வியின் இடைநிலைப்பருவம் கவனிப்பாரற்றுப் போகின்றது. கல்வித் தரமும் வீழ்ச்சி அடைகிறது. பாடசாலைகளில் பாடவிதானத்திற்கு புறமான இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் புறக்கணிப்பு நிகழ்கின்றது. இல்ல மெய்வல்லுநர் போட்டி, ஆங்கிலதினம், தமிழ்த்தினம் போன்ற எல்லாவற்றிற்குமே அதிக திறமையான மாணவர்கள் கொஞ்சப்பேரும் பிரமுகர்களின் பிள்ளைகள் பலபேருமாக தெரிவு செய்யப்படும் நிகழ்வு பாவலரக உள்ளதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

இதுவும் மன உளைச்சலுக்கு ஆளாகும் மாணவர்கள் சமூகத்தை உருவாக்கிக் கல்வித் தரத்தைப் பாதிப்புறச் செய்கிறது.ஆரம்பப் பிரிவு மாணவப்பருவம் தான் உள எழுச்சிக்குரிய பருவம். இப்பருவ காலத்திலேயே சிறார்களின் உள்ளம் உடைக்கப்பட்டால் கல்வி எவ்வாறு உயரும்? கல்வித் தரத்தின் வீழ்ச்சி பற்றிப் புள்ளிவிபரக் கணக்கை அடிக்கடி பார்க்கின்றோம்.

ஆனால் பாடசாலைக் கல்வியின் உளத் தரிசனம் பார்க்க மறந்து விடுகின்றோம். 30 வருட நீண்ட கொடிய யுத்தம் முடிந்து விட்டது. அமைதிச் சூழலுக்குள் இனைந்து சமுகத்தினரும் திரும்பி வருகின்றோம். ஒரு காலத்தில் கல்வியில் முதல் தர மாவட்டமாக இருந்த யாழ்ப்பாணம் இப்போது கடைசி வரிசைக்கு தள்ளப்படுகின்றது. இழந்து போனவற்றையெல்லாம் மீட்கவேண்டுமெனத் துடிக்கின் றோம். இழந்துபோன கல்வியின் தரத்தை மீட்க துரித திட்டம் அவசியமாகும். எனவே பாடசாலைகளில் நடைபெறும் தன்னிச்சையான சுயநலமான செயற்பாடுகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

★ வே.தபேந்திரன்

# வடமாகாண பெரு விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகள்



ஹொக்கி - 19 வயதுப்பிரிவு
1 ஆம் இடம் - யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி



ஹொக்கி - 19 வயதுப்பிரிவு
2 ஆம் இடம் - யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி




வலைப்பந்தாட்டம் - 15 வயதுப்பிரிவு
1 ஆம் இடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி



கூடைப்பந்தாட்டம் - 19 வயதுப்பிரிவு
1 ஆம் இடம் - யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் அணி



வலைப்பந்தாட்டம் - 17 வயதுப்பிரிவு
1 ஆம் இடம் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணி



கூடைப்பந்தாட்டம் - 19 வயதுப்பிரிவு
2 ஆம் இடம் - யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி



வலைப்பந்தாட்டம் - 19 வயதுப்பிரிவு
1 ஆம் இடம் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி



கூடைப்பந்தாட்டம் - 19 வயதுப்பிரிவு
3 ஆம் இடம் - யாழ். உடுவில் மகளிர் கல்லூரி அணி

# விடைபெறுகிறார் சனத் ஜெயசூரியா

## 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ண வெற்றியணியின் இறுதிவீரரும் விடைபெறுகிறார்



தனது இரு தசாப்தகால கிரிக்கெட்டுக்கு விடைகொடுக்கிறார் இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர் சனத்ஜெயசூரியா. இங்கிலாந்துடனான இருபது-20 மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான இலங்கை அணியில் இடத்தினைப்பெற்றுக்கொண்ட சனத் ஜெயசூரிய இங்கிலாந்து மண்ணில் நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டியுடன் தனது சர்வதேச கிரிக்கெட் பயணத்தை முடித்துக்கொள்ளவுள்ளார்.

இவரது சர்வதேச ஓய்வு 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கை அணியில் இடம் பிடித்திருந்த வீரர்களில் கடைசி வீரரின் ஓய்வாகவும் அமைந்து விடுகின்றது. 1996 ஆம் ஆண்டு இலங்கைக்கு முதலாவது உலகக்கிண்ணத்தை பெற்று கொடுத்த அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணியில் இடம்பிடித்திருந்த வீரர்கள் அனைவரும் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வினைப்பெற்றுவிட்டனர்.

அண்மையில் 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரின் போது 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ண அணியில் இடம்பிடித்திருந்த முத்தையா முரளிதரனும் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வினைப் பெற்றார். அந்தவகையில் அவ்வணியில் இடம்பிடித்திருந்த வீரர்களில் இறுதியாக ஜெயசூரியாவும் தனது ஓய்வினை அறிவிக்கவுள்ளார்சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இங்கிலாந்து அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரினை 1-0 என்ற ரீதியில் முடித்துக்கொண்டுள்ள நிலையில் அவ்வணியுடனான ஒரு இருபது-20 மற்றும் 5 போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடவுள்ளது. இதில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 1-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

இந்நிலையில், நாளை நடைபெறவுள்ள இருபது-20 போட்டியில் களமிறங்கவுள்ள ஜெயசூரியா எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகும் ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டியுடன் லண்டன் கிங்ஸ்டன் ஓவல் மைதானத்திலிருந்து தனது சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.



இங்கிலாந்துடனான தொடருக்கு ஜெயசூரியா புறப்படுகையில் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் ஒத்தாசை வழங்கியபோது ..

இலங்கையில் தோன்றிய சிரேஷ்ட வீரர்களில் ஜெயசூரியாவும் ஒருவர் என்பது மறுப்பதுக்கில்லை. எனவே அவர் தனது ஓய்வினை சிரேஷ்ட வீரர் என்ற முறையில் அறிவிப்பதற்கு இந்த தொடரினை சிறந்த களமாகப்பயன்படுத்திக்கொண்டார்.

இங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரராகவுள்ள சனத் ஜெயசூரியா 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டின்போது தனது முதலாவது சர்வதேச போட்டியில் களம் கண்டார்.

இதிலிருந்து தனது அதிரடி ஆட்டத்தினாலும் மற்றும் பந்து வீச்சினாலும் எதிரணிகளுக்கு சாவலினை அளித்து வந்த ஜெயசூரிய அணியில் நிரந்தர இடத்தினைப் பெற்றதுடன் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் அணியின் ஆரம்ப வீரராக களமிங்கினார். இவ்வாறு டெஸ்ட், ஒரு நாள் மற்றும் இருபது-20 போட்டிகள் என அனைத்துப் போட்டிகளிலும் அதிரடி நாயகனாக நீண்டதொரு பயணத்தை சர்வதேச கிரிக்கெட் டில் பயணித்து வந்த இவர் கடந்த 2007 ஆம் ஆண்டு சர்வதேச டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வினை அறிவித்தார்.

இதனையடுத்து கிரிக்கெட் அரங்கில் இவரது ஆதிக்கம் மெல்ல மெல்ல குறைந்து கொண்டே சென்றது. துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு ஆகியவற்றில் இவர் சோபிக்கத்தவறிவந்தார். அந்தவகையில் கடந்த 2 ஆண்டுகளில் 12 ஒருநாள் போட்டிகளிலேயே விளையாடியுள்ள ஜெயசூரியா 277 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளார்.

இந்நிலையில், இவரது வீழ்ச்சி ஆரம்பமானது இற்றைக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னரே என்று சொல்லலாம். இந்தகாலகட்டத்தில் ஒரு சில போட்டிகளில் மாத்திரமே பிரகாசித்தாலும் இவரது ஆட்டத்திறனில் ஒரு ஆரோக்கியமான போக்கு காணப்படவில்லை. இதனால் இவர் அதிக போட்டிகளில் கழற்றிவிடப்பட்டே வந்தார்.

இருந்தும் அண்மையில் நடைபெற்று முடிந்த 10 ஆவது உலகக்கிண்ணத் தொடருக்கான 30 பேர் கொண்ட அணியில் இடம் கிடைத்திருந்தபோதிலும் இறுதி அணியில் அவருக்கு இடம் மறுக்கப்பட்டது. இதற்கு அவரது அண்மைக்கால விளையாட்டுத்திறன் குறைந்திருந்தமையே காரணம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு ஜெயசூரிய, “10 ஆவது உலகக்கிண்ணத் தொடரில் தெரிவுசெய்யப்படாமை தன்வாழ்வில் மிகவும் சோகமான விடயம்” என கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தமை இங்கு நினைவுகூரத்தக்கதொரு விடயமாகும்.

எனினும் அவரது நீண்டதொரு முதிர்ச்சிமிக்க கிரிக்கெட் பயணத்தின் இடைநடுவே உண்டான தளர்சியை வைத்து அவரது திறமைகளை குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக இவர் இருந்துவந்ததை யாராலும் மறக்கவும் மறுக்கவும் முடியாது. ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி தனது அதிரடியான துடுப்பாட்டத்தினால் இலங்கை அணியின் பலவெற்றிகளுக்கு வித்திட்டுள்ளார்.

அந்தவகையில் இலங்கை அணியில் அதிக ஓட்டங்களைப்பெற்ற வீரர்கள் வரிசையில் ஜெயசூரியாவே முதலிடத்திலுள்ளார். இதுவரை 444 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 13, 428 ஓட்டங்களை குவித்ததுடன் 322 விக்கெட்டுக்களை கைப்பற்றி முன்னிலை வகிப்பதுடன் 110 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6, 973 ஓட்டங்களைப்பெற்று 98 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

சர்வதேச அளவில் சச்சினுக்கு அடுத்த படியாக அதிக ஓட்டங்களைப்பெற்றுள்ளதுடன் 13, 000 ஓட்டங்களுக்கு 300 விக்கெட்டுக்களை கைப்பற்றிய ஒரே வீரர் என்ற சாதனையையும் பெற்றுள்ளார். இவ்வாறு இவரது சாதனைப் பட்டியல்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

இந்நிலையில் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வை முடித்துக்கொள்ள தீர்மானித்த சனத்ஜெயசூரியாவிற்கு இங்கிலாந்துடனான தொடரில் வாய்ப்புக்கிடைத்தமை வரப்பிரசாதமே. இலங்கை கிரிக்கெட்டுக்கு பெருமை சேர்த்த வீரர்கள் வரிசையில் முக்கிய பங்கு வகிக்கும் இவர் சர்வதேச ஓய்வினை ஒரு சிறந்த முறையினில் அறிவிப்பதற்கு சிறந்த வாய்ப்பு அமைந்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் இலங்கை கிரிக்கெட் அணியின் அனுபவ வீரரான ஜெயசூரிய சர்வதேச ஓய்வினை பெறுவது இலங்கை அணிக்கு ஒரு சிரேஷ்ட வீரரின் இழப்பை ஏற்படுத்தும் என்பது மறுப்பதற்கில்லை.

ப. சுகிர்தன்

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday June 24, 2011.